KEMENTERIAN PENDIDIKAN MALAYSIA

# நன்னெறிக் கல்வி

## PENDIDIKAN MORAL

தேசிய வகைத் தமிழ்ப்பள்ளி
SEKOLAH JENIS KEBANGSAAN TAMIL

ஆண்டு
TAHUN
5

KURIKULUM STANDARD SEKOLAH RENDAH
KSSR
SEMAKAN
KEMENTERIAN PENDIDIKAN MALAYSIA

நன்னெறிக் கல்வி PENDIDIKAN MORAL ஆண்டு TAHUN 5

RM 16.50
ISBN 978-983-42655-9-5
9 789834 265595
ET115001

# RUKUN NEGARA

**Bahawasanya Negara Kita Malaysia**
Mendukung cita-cita hendak:

Mencapai perpaduan yang lebih erat dalam kalangan
seluruh masyarakatnya;

Memelihara satu cara hidup demokrasi;

Mencipta satu masyarakat yang adil di mana kemakmuran negara
akan dapat dinikmati bersama secara adil dan saksama;

Menjamin satu cara yang liberal terhadap
tradisi-tradisi kebudayaannya yang kaya dan pelbagai corak;

Membina satu masyarakat progresif yang akan menggunakan
sains dan teknologi moden;

MAKA KAMI, rakyat Malaysia,
berikrar akan menumpukan
seluruh tenaga dan usaha kami untuk mencapai cita-cita tersebut
berdasarkan prinsip-prinsip yang berikut:

**KEPERCAYAAN KEPADA TUHAN**

**KESETIAAN KEPADA RAJA DAN NEGARA**

**KELUHURAN PERLEMBAGAAN**

**KEDAULATAN UNDANG-UNDANG**

**KESOPANAN DAN KESUSILAAN**

(Sumber: Jabatan Penerangan, Kementerian Komunikasi dan Multimedia Malaysia)

KURIKULUM STANDARD SEKOLAH RENDAH

# நன்னெறிக் கல்வி
# PENDIDIKAN MORAL

ஆண்டு
TAHUN
5

## தேசிய வகைத் தமிழ்ப்பள்ளி
## SEKOLAH JENIS KEBANGSAAN (TAMIL)




**Penulis**
Kadiravan Perinan
Raghuniswaran Archunan

**ஆசிரியர்**
கதிரவன் பெரியண்ணன்
ரகுனீஸ்வரன் அர்ச்சுணன்

**Editor**
Leela Lakshmanan

**பதிப்பாசிரியர்**
நீலா லட்சுமணன்

**Pereka Bentuk**
Santhi Solai
**Nor Saidah Binti Mohamad Nor**

வடிவமைப்பாளர்
சாந்தி சோலை
நூர் சைடா பிந்தி முகமது நூர்

**Ilustrator**
**Mohd Suhaimi Bin Harun**

ஓவியர்
முகமட் சுஹைமி பின் ஹருன்





**SYARIKAT P. GANESAN**
**2020**

KEMENTERIAN PENDIDIKAN MALAYSIA

No. siri Buku: 0039

KPM 2020 ISBN 978-983-42655-9-5
Cetakan Pertama 2020
Kementerian Pendidikan Malaysia

Hak Cipta Terpelihara. Mana-mana bahan dalam buku ini tidak dibenarkan diterbitkan semula, disimpan dalam cara yang boleh dipergunakan lagi, ataupun dipindahkan dalam sebarang bentuk atau cara, baik dengan cara bahan elektronik, mekanik, penggambaran semula mahupun dengan cara perakaman tanpa kebenaran terlebih dahulu daripada Ketua Pengarah Pelajaran Malaysia dan Kementerian Pendidikan Malaysia. Perundingan tertakluk kepada perkiraan royalti atau honorarium.

Diterbitkan untuk Kementerian Pendidikan Malaysia oleh:

**SYARIKAT P. GANESAN**
No.23, Tingkat Satu, Jalan Perhentian
Sentul, 51100 Kuala Lumpur.
Tel : 03-40420897
E-mel : spgmedia2020@yahoo.com

**Reka Letak dan Atur Huruf :**
**SYARIKAT P. GANESAN**
Muka taip teks : ELANGO
Saiz taip teks : 14 poin

**Dicetak Oleh:**
Firdaus Press Sdn. Bhd.
No. 26 & 28, Jalan PBS 14/4,
Taman Perindustrian Bukit Serdang,
43300 Seri Kembangan, Selangor.

# PENGHARGAAN

Penerbitan buku teks ini melibatkan kerjasama banyak pihak. Sekalung penghargaan dan terima kasih ditunjukan kepada semua pihak yang terlibat:

- Jawatankuasa Penambahbaikan Pruf Muka Surat, Bahagian Sumber dan Teknologi Pendidikan, Kementerian Pendidikan Malaysia.
- Jawatankuasa Penyemakan Pembetulan Pruf Muka Surat, Bahagian Sumber dan Teknologi Pendidikan, Kementerian Pendidikan Malaysia.
- Jawatankuasa Penyemakan Naskhah Sedia Kamera, Bahagian Sumber dan Teknologi Pendidikan, Kementerian Pendidikan Malaysia.
- Pegawai-pegawai Bahagian Sumber dan Teknologi Pendidikan, Bahagian Pembangunan Kurikulum, Kementerian Pendidikan Malaysia.
- Panel Pembaca Luar
- Balai Polis Sentul, Kuala Lumpur.
- SJK(T) Ladang Sungai Puntar, Bedong, Kedah
- SJK(T) Taman Melawati, Kuala Lumpur.
- SJK(T) Ramakrishna, Georgetown, Pulau Pinang
- SJK(T) Yahya Awal 1, Johor Bahru, Johor.
- Dato Inder Singh dan Keluarga

# உள்ளடக்கம்


## தொகுதி 1

**நெறி 1 : இறை நம்பிக்கை**

பாடம் 1 : மலேசியச் சமுதாயம் 1
பாடம் 2 : நம்பிக்கைகளை அறிவோம் 2
பாடம் 3 : ஒற்றுமையே வளம் 3
பாடம் 4 : மதிப்போம் வாரீர் 4
பாடம் 5 : நாங்கள் மகிழ்கிறோம் 5
மதிப்பீடு, குறைநீக்கல், திடப்படுத்துதல், வளப்படுத்துதல் 6-9

## தொகுதி 2

**நெறி 2 : நன்மனம்**

பாடம் 1 : உதவும் கரங்கள் 10-11
பாடம் 2 : வாருங்கள் பழகலாம்! 12
பாடம் 3 : யாரையும் தெரியாது 13
பாடம் 4 : எந்தச் சிரமமும் இல்லை 14
பாடம் 5 : சாரணியர் வாரம் 15
மதிப்பீடு, குறைநீக்கல், திடப்படுத்துதல், வளப்படுத்துதல் 16-19

## தொகுதி 3

**நெறி 3 : கடமையுணர்வு**

பாடம் 1 : இணைந்தே செயல்படுவோம் 20-21
பாடம் 2 : சமுதாயத்தில் நான் 22
பாடம் 3 : வாழிடச் சமூகம் 23
பாடம் 4 : நம் கடமையன்றோ! 24
பாடம் 5 : இணைந்தே வெல்வோம் 25
மதிப்பீடு, குறைநீக்கல், திடப்படுத்துதல், வளப்படுத்துதல் 26-29

## தொகுதி 4

**நெறி 4 : நன்றி நவில்தல்**

பாடம் 1 : நன்றி! நன்றி! 30
பாடம் 2 : நன்றி உரைப்போம் 31
பாடம் 3 : மிக்க நன்றி 32
பாடம் 4 : பாராட்டப் பழகுவோம் 33
பாடம் 5 : அன்று உதவியிருக்காவிட்டால் 34
மதிப்பீடு, குறைநீக்கல், திடப்படுத்துதல், வளப்படுத்துதல் 35-38

## தொகுதி 5

**நெறி 5 : உயர்வெண்ணம்**

பாடம் 1 : மதித்து வாழ்வோம் 39
பாடம் 2 : நலம் விசாரிப்போம் 40
பாடம் 3 : சமுதாயத்தின் பிரதிபலிப்பு 41
பாடம் 4 : நல்லோர் வார்த்தை 42
பாடம் 5 : நன்னடத்தை மிக்க சமுதாயம் 43
மதிப்பீடு, குறைநீக்கல், திடப்படுத்துதல், வளப்படுத்துதல் 44-47

## தொகுதி 6

**நெறி 6 : மரியாதை**

பாடம் 1 : கலாசாரம் மதிப்போம் 48
பாடம் 2 : சமுதாயத்தை மதிப்போம் 49
பாடம் 3 : பணி ஓய்வு உபசரிப்பு 50-51
பாடம் 4 : பெருமிதம் கொள்வோம் 52
பாடம் 5 : மதிக்கப் பழகுவோம் 53
மதிப்பீடு, குறைநீக்கல், திடப்படுத்துதல், வளப்படுத்துதல் 54-57

## தொகுதி 7

**நெறி 7 : அன்புடைமை**

பாடம் 1 : அனைவரையும் நேசிப்போம் 58-59
பாடம் 2 : நேசித்துப் பார் 60
பாடம் 3 : அன்பாகப் பழகு 61
பாடம் 4 : சிறுவனைக் கண்டு பிடி 62-63
பாடம் 5 : அன்பே தெய்வம் 64
மதிப்பீடு, குறைநீக்கல், திடப்படுத்துதல், வளப்படுத்துதல் 65-68

## தொகுதி 8

**நெறி 8 : நடுவுநிலைமை**

பாடம் 1 : நல்ல தீர்ப்பு 69-70
பாடம் 2 : யார் மடிக்கணினி? 71-72
பாடம் 3 : நடுவுநிலைமையான செயல் 73
பாடம் 4 : பட்டம் விடுவோம் 74
பாடம் 5 : பகிர்ந்தளிப்போம் 75
மதிப்பீடு, குறைநீக்கல், திடப்படுத்துதல், வளப்படுத்துதல் 76-79

# உள்ளடக்கம்


## தொகுதி 9

**நெறி 9 : துணிவு**

பாடம் 1: தீர்வு காண வேண்டும் 80
பாடம் 2: முன்னோக்கிச் செல்வோம் 81-82
பாடம் 3: உறுதிவேண்டும் 83
பாடம் 4: துணிவே துணை 84
பாடம் 5: குமரனின் துணிவு 85
மதிப்பீடு, குறைநீக்கல்,
திடப்படுத்துதல், வளப்படுத்துதல் 86-89

## தொகுதி 10

**நெறி 10 : நேர்மை**

பாடம் 1: நேர்மையின் பரிசு 90-91
பாடம் 2: உண்மையே உயர்வு 92
பாடம் 3: பேச்சில் நேர்மை 93
பாடம் 4: பாண்டியனின் தீரம் 94
பாடம் 5: நேர்மையாகச் செயல்படுவோம் 95
மதிப்பீடு, குறைநீக்கல்,
திடப்படுத்துதல், வளப்படுத்துதல் 96-99

## தொகுதி 11

**நெறி 11: ஊக்கமுடைமை**

பாடம் 1: முயற்சியின் பயன் 100
பாடம் 2: வெற்றிக் கனி 101
பாடம் 3: ஊக்கத்தால் உயர்ந்த தீரன் 102
பாடம் 4: ஊக்கத்துடன் செயல்படு 103
பாடம் 5: ஊக்கமிகு கிராமம் 104
மதிப்பீடு, குறைநீக்கல்,
திடப்படுத்துதல், வளப்படுத்துதல் 105-109

## தொகுதி 12

**நெறி 12 : ஒத்துழைப்பு**

பாடம் 1: ஒத்துழைத்து ஒழிப்போம்! 110
பாடம் 2: நிலை நிறுத்துவோம் 111
பாடம் 3: ஒற்றுமையே பலம் 112
பாடம் 4: ஒத்துழைத்து மலர்வோம் 113
பாடம் 5: பத்து ரிங்கிட் 114
மதிப்பீடு, குறைநீக்கல்,
திடப்படுத்துதல், வளப்படுத்துதல் 115-119

## தொகுதி 13

**நெறி 13 : மிதமான மனப்பான்மை**

பாடம் 1: மேனகாவின் தற்பெருமை 120
பாடம் 2: சமுதாய வாழ்க்கை 121
பாடம் 3: அம்மாவின் அறிவுரை 122-123
பாடம் 4: மிதமான வாழ்வு 124
பாடம் 5: கற்றது ஒழுகு 125
மதிப்பீடு, குறைநீக்கல்,
திடப்படுத்துதல், வளப்படுத்துதல் 126-129

## தொகுதி 14

**நெறி 14: விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை**

பாடம் 1: புரிந்துணர்வு 130-131
பாடம் 2: நல்லுறவு பேணுவோம் 132
பாடம் 3: விட்டுக் கொடுக்காமை 133
பாடம் 4: மகிழ்ச்சி கொள்கிறேன் 134
மதிப்பீடு, குறைநீக்கல்,
திடப்படுத்துதல், வளப்படுத்துதல் 135-138

# முன்னுரை

முன்னுரை

தேசிய வகைத் தமிழ்ப்பள்ளிக்கான ஐந்தாம் ஆண்டு நன்னெறிக் கல்விப் பாடநூல் மலேசியக் கல்வி அமைச்சின் தொடக்கப்பள்ளிக்கான தர அடிப்படையிலான கலைத்திட்டம் (KSSR) சீராய்வு 2017க்கு ஏற்ப எழுதப்பட்டுள்ளது.

தேசியக் கல்வித் தத்துவத்தின் அடிப்படையில் இயற்றப்பட்டுள்ள இப் பாடநூல் நன்னெறி, நற்சிந்தனை மிக்க மாணவர்களை உருவாக்குவதோடு அறிவாற்றல், போற்றுவதற்குரிய பண்புநெறி, நாட்டுப்பற்றையும் ஒற்றுமையையும் முன்னிலைப்படுத்தும் மாணவர்களை உருவாக்குவதை இலக்காகக் கொண்டது ஆகும். மேலும், இது தனக்கு, குடும்பத்திற்கு, சமுதாயத்திற்கு, நாட்டிற்குப் பெரும் பங்களிப்பை வழங்குவதை நோக்கமாகக் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது.

வகுப்பறையில் ஆசிரியர்கள் நன்னெறிக் கல்வி, ஐந்தாம் ஆண்டுக்கான தர அடிப்படையிலான கலைத்திட்டம், மதிப்பீட்டு ஆவணம் (சீராய்வு 2017)ஐ, கட்டாயமாகப் பின்பற்றி இப்பாடநூலைப் பயன்படுத்திட வேண்டும். ஆன்மீகம், பண்புநெறி ஆகியவற்றைப் மாணவர்களிடத்தில் பேணிடச் செய்யும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ள பாட நடவடிக்கைகள் கருத்துணர்தல், உய்த்துணர்தல், பல்லின மக்களின் சமயம், பாரம்பரியம், பண்பாட்டு வழக்குகள் போன்ற உலகளாவிய நெறிகளை வலியுறுத்துகின்றது.

மனிதன் நன்னெறியில் இடையறாது கொண்டொழுகுவதே ஒழுக்கம் எனப்படுகிறது. மனிதன் நலமாக வாழ்வதோடு அவ்வாழ்வின் பயனாகிய இன்பத்தை அடைவதற்கு அவன் கடைப்பிடிக்க வேண்டிய நல்ல நெறிகளைக் கடைப்பிடிப்பதோடு, ஒதுக்க வேண்டிய தீயநெறிகளைப் புறந்தள்ளி வாழ்வை அமைத்துக் கொள்வதே அறம் ஆகும். எனவே, இப் பாடநூல் சமுதயத்தோடு தங்களை ஐக்கியப்படுத்திய எதிர்கால மாணவர் சமுதாய நிர்மாணிப்பின் நெடுந்தூணாக அமையும் கூறுகளைக் கொண்டுள்ளது.

இப் பாடநூலில், பரிந்துரைக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் ஐந்தாம் ஆண்டுக்கான 'நானும் சமுதாயமும்' என்னும் தலைப்பின் அடிப்படையில் பாடங்கள் வரையறுக்கப்பட்டுள்ளன. இஃது எதிர்கால சமுதாயம் பொறுப்புமிக்க, நன்னெறி மிக்க சமுதாயமாக விளங்கிடச் செய்யத் துணை புரியும் என நம்புகிறோம்.

நன்றி,

**ஆசிரியர்கள்**




இப்படவுரு இத்தொகுதி முழுவதும் மாணவர் கற்கப் போகும் நெறியைக் குறிப்பிடுகிறது.




இப்படவுரு மாணவர் கற்கப் போகும் நெறியை அறிமுகம் செய்கிறது.




இப்படவுரு நெறிகளுக்குரிய கற்றல் தர எண்ணையும் கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளையும் அறியத் துணைபுரிகிறது.




இப்படவுரு கற்ற நெறியை எளிமையாக அடைய வழிவகுக்கும் குறைநீக்கல் நடவடிக்கையைக் குறிக்கிறது.




இப்படவுரு கற்ற நெறியைத் திடப்படுத்தும் நடவடிக்கையைக் குறிக்கிறது.




இப்படவுரு கற்ற நெறியை வளப்படுத்தும் சவால் மிகுந்த நடவடிக்கையைக் குறிக்கிறது.




இப்படவுரு கற்ற நெறி தொடர்பான நடவடிக்கையைக் குறிக்கிறது.




இப்படவுரு கற்ற நெறி தொடர்பாக மேலும் கருத்தில் கொள்ள வேண்டியவற்றை விவரிக்கிறது.




இப்படவுரு உயர்நிலைச் சிந்தனைத் திறன் (KBAT) அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ள இடுபணியைக் காட்டுகிறது.

**வலைத்தளக் காட்சி**

இப்படவுரு வலைத்தள விளக்கக்காட்சிகளைக் குறிக்கிறது.

Download on the App Store

GET IT ON Google Play

ஜாப்பரைப் **(ZAPPAR)** பெறவும்.

**இங்கு நோக்குக:**

முன்கூட்டியே ஜாப்பர் **(ZAPPAR)** எனும் செயலியைப் பதிவிறக்கம் செய்து, இந்நோக்குக் குறியீட்டை அடையவும்.

**AR** நோக்குக் குறியீடு

# தொகுதி 1 இறை நம்பிக்கை

## பாடம் 1 மலேசியச் சமுதாயம்

கருத்துப் படிவம்

மலேசியச் சமுதாயம் பல்லின அமைப்பு முறையில் இனம், சமயம், மொழி, பழக்க வழக்கம், வாழ்க்கை முறை ஆகியவற்றில் தனித்தனிக் கூறுகளைக் கொண்டுள்ளது. இவர்கள் தத்தம் சமய விழாக்களையும் நம்பிக்கைகளையும் நல்லிணக்கத்துடன் கொண்டாடியும் அமல்படுத்தியும் வருகின்றனர்.




**நடவடிக்கை**

கோலம் போடுதல் தொடர்பான தகவல்களைக் கண்டறிந்து கலந்துரையாடுக.

1.1
1.2

**ஆசிரியர் குறிப்பு** பல்லின வாழிடச் சமுதாயத்தினரின் சமுதாயக் கூறுகளைக் கண்டறிந்து கூறுதல்.

**வி.வ.கூ:** ஆக்கமும் புத்தாக்கமும் **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூ.தி:** சமூகம்

கருத்துப் படிவம்

# பாடம் 2 நம்பிக்கைகளை அறிவோம்



இஸ்லாமியர்கள் ஆண்டுக்கு ஒரு முறை 'ஸாகாட்' தர்மம் செய்ய வேண்டும் என்பது கோட்பாடாகும்.



சீனப் புத்தாண்டின் போது, பட்டாசு வெடித்துத் தீய சக்திகளை விரட்டுவது சீனர்களின் நம்பிக்கை ஆகும்.



கிறிஸ்மஸ் தாத்தா, கிறிஸ்மஸ் பண்டிகையின் முதல் நாளன்று சிறுவர்களுக்குப் பரிசுகள் வழங்கி மகிழ்விப்பார்.



சீக்கியர்கள், 'காரா' எனும் காப்பு அணிவது புனிதமான வாழ்க்கையை அமல்படுத்தும் உறுதிமொழியை நினைவுறுத்துகிறது.

**நடவடிக்கை**

1. மேலே குறிப்பிடப்பட்ட பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள் தொடர்பாகக் கலந்துரையாடுக.

1.2

**ஆசிரியர் குறிப்பு**

- பிற சமயத்தவர்களின் சமய போதனைகளையும் நம்பிக்கைகளையும் அறிந்து கொள்வது எவ்வாறு சமுதாய ஒற்றுமைக்கு வழிவகுக்கும் என்பதனை அறிந்திட வலியுறுத்துதல்.

**வி.வ.கூ** : நன்னெறி **உ.சி** : பகுத்தாய்தல் **21ஆம் நூ.தி:** சமூகம்

கருத்துப் படிவம்

# பாடம் 3 ஒற்றுமையே வளம்




**சுபைடா** : நானும் அச்செய்தியைப் படித்தேன். தத்தம் சமயம்தான் பெரிது என்கிற பொறுப்பற்ற சிந்தனையால் பல ஆயிரம் அப்பாவி மக்கள் பலியாவதைக் காணும்பொழுது கண்கள் கலங்குகின்றன. அதில் குழந்தைகளும் அடங்குவர். அவர்கள் செய்த பாவம்தான் என்ன?

**பைரவி** : எல்லாச் சமயமும் அன்பைத்தான் வலியுறுத்துகின்றன என்பதை இவர்கள் மறந்து விட்டார்கள்.

**சுபைடா** : உண்மைதான். பிற சமயத்தவரின் நம்பிக்கைகளை நாம் மதிக்கும் பொழுது, நாடு சுபிட்சம் பெறும்; நாட்டின் பொருளாதாரமும் உயரும்.

**பைரவி** : நம் நாடு பல இன மக்களையும் பல சமயத்தவர்களையும் கொண்டிருந்தாலும் நாம் ஒற்றுமையாக வாழ்ந்து வருகிறோம்.

**நடவடிக்கை**

1. சுபிட்சமான சமுதாய வாழ்க்கைக்குச் சமயக் கல்வி எவ்வகையில் தன் பங்கை ஆற்ற இயலும்? பட்டியலிடுக.

1.3

**ஆசிரியர் குறிப்பு**
- மாணவர்கள் சுபிட்சமான சமுதாய வாழ்வில் சமயக் கல்வி அல்லது நம்பிக்கைகளின் முக்கியத்துவத்தை விவரிக்கும் வகையில் தொங்காடி (mobile) ஒன்றினை உருவாக்குதல்.

**வி.வ.கூ:** எதிர்காலவியல் **உ.சி.தி:** படைத்தல் **21ஆம் நூ.தி:** தொடர்பு

கருத்துப் படிவம்

# பாடம் 4 மதிப்போம் வாரீர்







**நடவடிக்கை**

பிற சமயத்தவர்களின் நம்பிக்கைகளை நாம் மதிப்பதன் வாயிலாகச் சமுதாய நல்லிணக்கத்திற்கு எவ்வாறு துணை புரியலாம் என்பதைக் கூறுக? பட்டியலிடுக.

1.4
1.5

**ஆசிரியர் குறிப்பு**

- சுபிட்சமான சமுதாயத்தை உருவாக்கும் வகையில் சமயம் அல்லது நம்பிக்கைகளைத் திறந்த மனத்தோடு ஏற்று மதித்து நிர்வகிக்கும் வழிமுறைகளைக் கூறுதல்.

**வி.வ.கூ:** சாலைப் பாதுகாப்பு **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூ.தி:** சமூகம்

# பாடம் 5 நாங்கள் மகிழ்கிறோம்







**நடவடிக்கை**

தாங்கள் கலந்து கொண்ட ஏனைய சமுதாயச் சமய நம்பிக்கைகள் தொடர்பான நடவடிக்கைகள் எவ்வகையில் சமுதாய நல்லிணக்கத்திற்கு உதவுகின்றன எனக் கூறுக.

1.5 **ஆசிரியர் குறிப்பு** • சமுதாய நடவடிக்கைகளில் கலந்து கொள்ளும்போது ஏற்பட்ட அனுபவங்களைக் கூறுதல்.

**வி.வ.கூ:** ஆக்கமும் புத்தாக்கமும் **உ.சி.தி:** படைத்தல் **21ஆம் நூ.தி:** சமூகம்

மதிப்பீடு

அ. படங்களின் துணையுடன் நிறைவு செய்க.





இனம் : ________ ________ ________

நடவடிக்கை : ________ ________ ________

ஆ. பல இன, சமய மக்கள் கூடும் நிகழ்வுகளை ஏற்பாடு செய்யும்பொழுது என்னென்ன கூறுகளைக் கவனத்தில் கொள்ள வேண்டும்? கலந்துரையாடிப் பட்டியலிடுக.



உணவு :

உடை :

பழக்க வழக்கம் :

1.1
1.2
1.3
1.4
1.5

ஆசிரியர் குறிப்பு

- பல்லினச் சமுதாயக் கூறுகளில் பிறரின் சமயம், பழக்க வழக்கங்களை மதித்தல், முறையாக நிர்வகிக்கத் துணை புரிதல்.

வி.வ.கூ: தலைமைத்துவம் உ.சி.தி: அமலாக்குதல் 21ஆம் நூ.தி: சமூகம்

குறைநீக்கல்

அ. தாமான் டேசா ரியா மக்கள், தங்களது வாழிடத்தில் எவரையும் கொரோனா - 19 நோய்த் தொற்றுப் பாதிக்காததால் இறைவனுக்கு நன்றி செலுத்தும் வகையில் தத்தம் வழிபாட்டு இடங்களில் பிரார்த்தனை செய்தனர்.

1. நோக்கம்
 ______
2. நன்மைகள்
 ______
3. மனவுணர்வு
 ______



ஆ. கீழ்க்காணும் சூழலினால் ஏற்படும் நன்மைகளை எழுதுக.

| | |
|---|---|
| மேய் லின் தனது பிறந்தநாள் விழாவிற்கு வந்திருந்த நண்பர்களுக்கு 'ஹலால்' உணவுகளைத் தயார் செய்து வைத்திருந்தாள். | நோக்கம் : ______<br>நன்மை : ______<br>மனவுணர்வு : ______ |
| தனது நண்பன் ரோபர்ட் உணவு உண்ணும் முன் இறைவனை வழிபடுவதைப் பார்த்த முருகன் அமைதியானான். | நோக்கம் : ______<br>நன்மை : ______<br>மனவுணர்வு : ______ |
| ஜோனியும் சுவிலானும் வாசனுடன் சேர்ந்து தைப்பூச ஊர்வலத்தில் கலந்து கொண்டவர்களுக்கு நீர்ப் புட்டிகளை வழங்கினர். | நோக்கம் : ______<br>நன்மை : ______<br>மனவுணர்வு : ______ |

1.2
1.3
1.4

ஆசிரியர் குறிப்பு

- வேறுபட்ட சமுதாயக் கூறுகளில் சமுதாய ஒருமைப்பாட்டுக் கூறுகளை நிர்வகிக்கத் துணை புரியச் செய்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூ.தி:** தொடர்பு

திடப்படுத்துதல்

அ. கேள்விகளுக்குப் பதில் அளித்திடுக.



1. தொழுகை நேரத்தின்போது சிறுவர்கள் காற்பந்து விளையாடுவதை நிறுத்தினர். ஏன்?
2. வாழிடச் சமுதாயத்தினரின் சமயம், நம்பிக்கைகள் ஆகியவற்றை மதிப்பதன் அவசியத்தைக் குறிப்பிடுக.

ஆ. தாமான் கௌாடி கோயில் திருவிழாவின் போது முரளி, தெங் செங் ஆகியோர் இலவசத் தண்ணீர்ப் பந்தல் அமைத்தனர்.

1. நீங்கள் இவர்களுக்கு எவ்வாறு உதவ முடியும்?
2. சமுதாய நல்லிணக்கத்திற்கு இவர்களின் பங்கு என்ன?




இ.




1. இவரின் செயல் எதனைக் குறிக்கிறது?
2. இதுபோன்ற செயல்களின் வழி சமுதாயம் அடையும் நன்மைகள் யாவை?

1.5 ஆசிரியர் குறிப்பு

• பிற சமய நம்பிக்கைகளை மதிப்பதன், நிர்வகிப்பதன் அவசியத்தை வலியுறுத்துதல்.

வி.வ.கூ: தலைமைத்துவம் உ.சி.தி: அமலாக்கம் 21ஆம் நூ.தி: தொடர்பு

வளப்படுத்துதல்

**வாழிடச் சமுதாயத்தினரின் சமயம் மற்றும் நம்பிக்கைகளை மதிக்கும் முறைகளைக் குறிப்பிடுக.**

**வழிபாட்டு முறைகளும் நம்பிக்கைகளும்**



தைப்பூச இரத ஊர்வலம்

1. ______________
2. ______________



நோன்புப் பெருநாள் சிறப்புத் தொழுகை

1. ______________
2. ______________



காவாய்த் திருநாள்

1. ______________
2. ______________



விசாகத் தினம்

1. ______________
2. ______________

**நடவடிக்கை**

1. இந்தப் பண்டிகைகள் உணர்த்துவது என்ன?
2. இப்பண்டிகைகளில் காணப்படும் வழிபாட்டு முறைகளையும் நம்பிக்கைகளையும் குமிழி வரைபடத்தில் குறிப்பிடுக.
3. இந்தப் பண்டிகைகள் ஏன் கொண்டாடப்படுகின்றன என்பதனைக் கலந்துரையாடுக.

1.1
1.2
1.3
1.4
1.5

**ஆசிரியர் குறிப்பு**

• அன்றாட வாழ்வில் பிற சமய நம்பிக்கைகளை மதிப்பதன் கூறுகளை விவரித்தல்.

**வி.வ.கூ** : நன்னெறி  **உ.சி.தி** : பகுத்தாய்தல்  **21ஆம் நூதி** : தொடர்பு

# தொகுதி 2 நன்மனம்

## பாடம் 1 உதவும் கரங்கள்

கருத்துப் படிவம்

அதிகாலையில் வீசிய புயல்காற்றில் தாமான் துன் சம்பந்தனில் உள்ள சில வீடுகள் பெரும் சேதத்திற்குள்ளாகின. எனினும், அக்குடியிருப்பில் செயல்படும் ‘உதவும் கரங்கள்’ இயக்கத்தினர் உடனடியாகச் சீரமைப்புப் பணிகளில் இறங்கினர்.



2.1 | ஆசிரியர் குறிப்பு

• மாணவர்கள் சமுதாயத்தின் தேவைகளையும் நலன்களையும் எடுத்துக்காட்டுகளுடன் பட்டியலிட்டுக் கூறுதல்.

**வி.வ.கூ:** நன்னெறி **உ.சி.தி:** அமலாக்கம் **21ஆம் நூ.தி:** சமூகம்




**நடவடிக்கை**

இக்குடும்பத்திற்குத் தேவைப்படும் வேறு சில உதவிகளையும் தேவைகளையும் பட்டியலிடுக.

கருத்துப் படிவம்

# பாடம் 2 வாருங்கள் பழகலாம்




மதிப்பிற்குரிய அவையோர்களே, சமுதாய வாழ்க்கை என்பது இனம், மொழி, சமயம் கடந்தது ஆகும். அவற்றில் சிறிதளவும் சுயநலம் இருக்கக் கூடாது. மாணவர்களாகிய நாம் நம் சமுதாயத்தினரின் தேவைகளையும் நலன்களையும் அறிந்திருப்பதோடு, அக்கறையும் கொண்டிருக்க வேண்டும்.

சமுதாயத்துடன் சுபிட்சமாக வாழ்தல்.

சமுதாய உறுப்பினரை அறிதல்.

சமுதாயத்தினரின் வாழ்க்கை முறையை அறிதல்.

சமுதாயத்தினரின் கலாசாரத்தை அறிதல்.

தேவைப்படும் உதவிகளை வழங்குதல்.

நம் சமுதாயத்தினரை ஒரு குடும்பமாகக் கருதுதல்.




**நடவடிக்கை**

1. சமுதாயத்தினரின் தேவைகளையும் நலன்களையும் அறிந்திருக்க வேண்டிய அவசியத்தைப் பட்டியலிடுக.
2. உங்கள் குடியிருப்புப் பகுதியில் மேற்கொள்ளப்படும் சமுதாய நடவடிக்கைகளைக் கலந்துரையாடுக.

2.2

**ஆசிரியர் குறிப்பு**

• சமுதாயத்தின் பிற தேவைகளையும் நலன்களையும் அடையாளங் காண்பதோடு அவற்றில் அக்கறைக் கொள்ளுதல்.

**வி.வ.கூ:** தலைமைத்துவம் **உ.சி.தி:** புரிதல் **21ஆம் நூ.தி:** ஆக்கம்

கருத்துப் படிவம்

# பாடம் 3 யாரையும் தெரியாது



திரு. லியோங் வெளியூர் சென்று விட்டார். வீட்டில் அவருடைய அம்மா மட்டுமே தனியாக இருந்தார். வெளியூரிலிருந்து பல முறை தன் அம்மாவைத் தொடர்பு கொண்டும் அவருடைய அம்மா தொலைபேசியை எடுக்கவில்லை. அக்குடியிருப்பில் அவருக்கு யாரையும் தெரியாது. என்ன செய்வது என அறியாது தடுமாறியபோது, அச்சமயம் அவரைப் பார்க்க வந்த நண்பரிடம் தகவலைக் கூறினார். அவர் நண்பரும் சற்றும் தாமதிக்காமல் அக்குடியிருப்பில் வசிக்கும் தனது நண்பர் அகமதுவுக்குத் தகவல் தெரிவித்தார்.

திரு. அகமதுவும் அவர் மனைவியும், திரு. லியோங்கின் வீட்டிற்குச் சென்றனர். பலமுறை கதவைத் தட்டியும் அவருடைய அம்மா கதவைத் திறக்கவில்லை. சாரளம் வழியே எட்டிப் பார்த்த திரு. அகமதுவின் மனைவி, அம்மூதாட்டி மயங்கிக் கீழே விழுந்து கிடப்பதைக் கண்டார். அக்கணமே திரு. அகமது காவல்துறைக்கும் மருத்துவமனைக்கும் தகவல் தெரிவித்தார். விரைந்து வந்த காவல்துறையினர் கதவை உடைத்து அம்மூதாட்டியைக் காப்பாற்றி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

**நடவடிக்கை**

1. திரு. அகமது, அவரது மனைவி ஆகிய இருவரின் நன்மனச் செயல்களைக் குறிப்பிடுக.
2. திரு. அகமதுவைப் போல நீங்கள் நன்மனத்துடன் செயல்பட்டுள்ளீர்களா? உங்கள் அனுபவத்தைக் கூறுக.
3. திரு.லியோங் குடியிருப்பாளர்களுடன் அணுக்கமான தொடர்பைக் கொண்டில்லாததன் விளைவுகளை வட்ட வரைபடத்தில் எழுதுக.

2.3 ஆசிரியர் குறிப்பு

- சமுதாயத்தின் தேவைகள், நலன்களைப் பொருட்படுத்தாததன் விளைவுகளைச் சிந்தி - இணை - பகிர் (Think - pair-share) நடவடிக்கை வழி மேற்கொள்ளுதல்.

**வி.வ.கூ:** நன்னெறி **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூ.தி:** தொடர்பு

கருத்துப் படிவம்

# பாடம் 4 எந்தச் சிரமமும் இல்லை




## நடவடிக்கை

1. பாட்டிக்கு உதவியதால் கபிலனுக்கு ஏற்பட்ட மனவுணர்வைப் பட்டியலிடுக.
2. மேற்கண்ட சூழலில் பாட்டியின் தேவை, நலன்களை அறிந்திடுக.
3. நீங்கள் வாழிடச் சமூகத்திற்கு செய்த உதவிகள் யாவை? உங்களுக்கு ஏற்பட்ட மனவுணர்வுகளை வகுப்பில் பகிர்ந்து கொள்க.

## திருக்குறள்

**அதிகாரம் 22: ஒப்புரவு அறிதல்**



**ஒத்தது அறிவான் உயிர்வாழ்வான் மற்றையான்**
**செத்தாருள் வைக்கப் படும் (குறள் 214)**

பிறருக்கு உதவி செய்யும் ஒப்புரவு என்னும் உயர்ந்த குணத்தைவிட உயர்வான ஒன்று இவ்வுலகிலும் இல்லை. விண்ணுலகிலும் இல்லை.

2.4 ஆசிரியர் குறிப்பு

- சமுதாயத்தினரின் தேவைகள், நலன்கள் மீது அக்கறைக் கொள்வதன் வழி ஏற்படும் மனவுணர்வுகளைக் கூறுதல்.

**வி.வ.கூ:** நன்னெறி **உ.சி.தி:** அமலாக்கம் **21ஆம் நூ.தி:** தொடர்பு

கருத்துப் படிவம்

# பாடம் 5 சாரணியர் வாரம்

சாரணியர் வாரத்தை முன்னிட்டு அவ்வியக்கத்தின் பொறுப்பாசிரியர் வழங்கியிருக்கும் இடுபணியை மேற்கொண்டு நாட்குறிப்பு ஒன்றைத் தயாரித்தனர்.

வாழிடத்தினரின் வீடுகளுக்குச் சென்று நான் ____________
ஆண்டு ____________ நான் மேற்கொண்ட நடவடிக்கைகள்.




**நாள் 1**

திகதி :
இடம் :
நடவடிக்கை :



**நாள் 2**

திகதி :
இடம் :
நடவடிக்கை :



**நாள் 3**

திகதி :
இடம் :
நடவடிக்கை :



**நாள் 4**

திகதி :
இடம் :
நடவடிக்கை :



**நாள் 5**

திகதி :
இடம் :
நடவடிக்கை :



**நாள் 6**

திகதி :
இடம் :
நடவடிக்கை :



**நாள் 7**

திகதி :
இடம் :
நடவடிக்கை :

**தெரிந்து கொள்க**

மாணவர்கள் கற்கும் பாடமும், கட்டமைக்கும் அறிவும் மதிநுட்பமும் அவர்கள் உணர்வுடன் திகழும் போது திறன்பெறப் பரிணமிக்கும்.

**நடவடிக்கை**

கீர்த்தனா சமுதாயத்தினருக்கு உதவிய செயல்களைச் சுழல் முறையில் (rotating review) கலந்துரையாடுக.

2.5

ஆசிரியர் குறிப்பு

- சமுதாயத்தின் தேவைகள், நலன்கள் மீது அக்கறை கொள்ளும் செயல்களைப் பாகமேற்று நடிக்கச் செய்தல்.

**வி.வ.கூ:** நன்னெறி **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூ.தி:** தொடர்பு




பின்வரும் சூழல்களில் இவர்களுக்குத் தேவையான உதவிகளைக் குறிப்பிடுக.

1



சூழல் :

உதவி :

2



சூழல் :

உதவி :

3



சூழல் :

உதவி :

4



சூழல் :

உதவி :

2.1 ஆசிரியர் குறிப்பு

- பல்வேறு சூழல்களில் சமுதாயத்தின் தேவைகளையும் நலன்களையும் அறிந்து கூறுதல்.

**வி.வ.கூ:** சுற்றுச் சூழல் கல்வி **உ.சி.தி:** மதிப்பிடுதல் **21ஆம் நூ.தி:** இணைந்து கற்றல்

குறைநீக்கல்

அ. பன்செயற்பாங்கு வரைபடத்தை நிறைவு செய்க.

| | | |
|---|---|---|
| பள்ளிப் பேருந்து கட்டணம் செலுத்த சிரமப்படும் மதியழகனுக்குத் தக்க நேரத்தில் உதவாமல் இருத்தல். | | |
| பணம் இல்லாமல் குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்பாமல் இருக்கும் தனி நபர்களின் மீது அக்கறை இல்லாமல் இருத்தல். | **சமுதாயத்தின் தேவைகளையும், நலன்களையும் பொருட்படுத்தாததால் ஏற்படும் விளைவுகள்.** | |
| சிகிச்சைக்கு நிதி உதவி கேட்டு வந்த மாற்றுத் திறனாளியைக் கண்டும் காணாததுபோல் இருத்தல். | | |

ஆ. கீழ்க்காணும் சூழல்களில் நீங்கள் என்ன செய்வீர்கள் என்பதைக் குறிப்பிடுக.

1. இச்சூழலில் பாதிக்கப்பட்டோருக்கு எவ்வாறு நன்மனத்துடன் உதவுவீர்கள் என்பதைப் பட்டியலிடுக.

   i) ________

   ii) ________

   ii) ________



2.3 ஆசிரியர் குறிப்பு

• சமுதாயத்தின் தேவைகளையும், நலன்களையும் பொருட்படுத்தாததால் ஏற்படும் விளைவுகளைப் பட்டியலிடுதல்.

வி.வ.கூ: நன்னெறி உ.சி.தி: பகுத்தாய்தல் 21ஆம் நூ.தி: சமூகம்

திடப்படுத்துதல்

அ. இவர்களுக்கு உதவுவதன் அவசியத்தைக் குறிப்பிடுக.

1


2


**உதவியைத் திட்டமிடுதல்**

- தேவைப்படும் உதவி.
- ஏன் உதவ வேண்டும்?
- உதவும்போது ஏற்படும் மனவுணர்வு.
- இவ்வுதவியைச் செய்யவில்லையெனில் ஏற்படும் மனவுணர்வு.



3



4


2.3
2.4

ஆசிரியர் குறிப்பு

• மேலும் பல்வேறு வகையில் உதவி தேவைப்படுவோரை அடையாளங் காணுதல்.

**வி.வ.கூ:** எதிர்காலவியல் **உ.சி.தி:** மதிப்பிடுதல் **21ஆம் நூ.தி:** தொடர்பு

வளப்படுத்துதல்

அ. பின்வரும் சூழல்களின் விளைவுகளைக் குறிப்பிடுக.

மனிதன் என்பவன் தெய்வமாகலாம்... x2
வாரி வாரி வழங்கும் போது வள்ளலாகலாம்
வாழைப்போல தன்னைத் தந்து தியாகியாகலாம்
உறுதியோடு மெழுகு போல ஒளியை வீசலாம்
மனிதன் என்பவன் தெய்வமாகலாம்... தெய்வமாகலாம்

ஊருக்கென்று வாழ்ந்த நெஞ்சம் சிலைகளாகலாம்
உறவுக்கென்று விரிந்த உள்ளம் மலர்களாகலாம்... x2
யாருக்கென்று அழுதபோதும் தலைவனாகலாம்
மனம் மனம் அது கோவிலாகலாம்...

மனிதன் என்பவன் தெய்வமாகலாம்... x2

மனம் இருந்தால் பறவைக் கூட்டில் மான்கள் வாழலாம்
வழியிருந்தால் கடுகுக்குள்ளே மலையைக் காணலாம்... x2
துணிந்துவிட்டால் தலையில் எந்தச் சுமையும் தாங்கலாம்
குணம் குணம் அது கோவிலாகலாம்

மனிதன் என்பவன் தெய்வமாகலாம்... x2

நன்றி,
- கவியரசர் கண்ணதாசன்









செய்து மகிழுங்கள்

திருக்குறள்

அதிகாரம் 11: செய்நன்றி அறிதல்



**செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்**
**வானகமும் ஆற்றல் அரிது (குறள் 101)**

தான் ஓர் உதவியும் முன் செய்யாதிருக்கப் பிறன் தனக்குச் செய்த உதவிக்கு மண்ணுலகத்தையும் விண்ணுலகத்தையும் கைமாறாகக் கொடுத்தலும் ஈடு ஆக முடியாது.

2.3
2.4
2.5

ஆசிரியர் குறிப்பு

• சமுதாயத்தின் தேவைகள், நலன்கள் மீது அக்கறை கொள்ளும்போது ஏற்படும் மனவுணர்வை வெளிப்படுத்துதல்.

**வி.வ.கூ:** நன்னெறி **உ.சி.தி:** நாட்டுப்பற்று **21ஆம் நூ.தி:** ஆய்வுச் சிந்தனை

# தொகுதி 3 கடமையுணர்வு

## பாடம் 1 இணைந்தே செயல்படுவோம்

கருத்துப் படிவம்

கேசவனுக்குச் சமுதாயச் சேவை என்றால் மிகவும் பிடிக்கும். யாரேனும் உதவி கேட்டால் உடனே விரைந்து செய்வான். அதனால், பலருக்கும் அவனை மிகவும் பிடிக்கும். இதனைப் பல நாள்களாகக் கண்காணித்த சிவசங்கர், ஒரு நாள் கேசவனிடம் கேள்விக் கனைகளைத் தொடுக்கிறான்.




3.2
3.3

**ஆசிரியர் குறிப்பு**

- சமுதாய உறுப்பினராக ஆற்ற வேண்டியதையும் செயல்படுத்துதலையும் விவரித்தல்.

**வி.வ.கூ:** எதிர்காலவியல் | **உ.சி.தி:** பகுத்தாய்தல் | **21ஆம் நூ.தி:** சமூகம்

**சிவசங்கர்** : நீ எவ்வாறு உன் பொறுப்புகளைச் சமுதாயத்திற்கு ஆற்றுகிறாய்?

**கேசவன்** : சமுதாயமே நம் அருகில் வசிக்கும் உறவாகும். எது நடந்தாலும் அவர்களுக்கே முதலில் தகவல் கிடைக்கும். அவ்வகையில் ஆபத்து அவசர வேளைகளில் அவர்களுக்குத் தேவைப்படும் உதவிகளைச் செய்து நான் எனது பொறுப்பை ஆற்றுகிறேன்.

**சிவசங்கர்** : என்ன செய்தால் குடியிருப்பு மக்களின் சுபிட்சத்தைப் பாதுகாக்க இயலும்?

**கேசவன்** : நாம் சமுதாயத்தினருடன் ஒற்றுமையாகவும் அக்கறையுடனும் நடந்து கொண்டாலே வளமான, ஆரோக்கியமான, நலமான, சுபிட்சமான வாழ்வு வாழலாம். இதுவும் நம் பொறுப்புகளில் அடங்கும்.

**சிவசங்கர்** : மிக்க நன்றி கேசவா. இனிமேல் நானும் உன்னோடு சேர்ந்து மக்களுக்கு எனது பொறுப்புகளை ஆற்றப் போகிறேன்.

**கேசவன்** : மிக்க மகிழ்ச்சி. நாம் இருவரும் இணைந்தே செயல்படுவோம்.



**நடவடிக்கை**

1. சமுதாயத்திற்கு ஆற்ற வேண்டிய பொறுப்புகளைப் பட்டியலிடுக.
2. சமுதாயப் பொறுப்புகளை எவ்வகையில் ஆற்ற முடியும் என்பதையும் விவரித்திடுக.

# பாடம் 2 சமுதாயத்தில் நான்

கருத்துப் படிவம்

செம்பருத்தி அடுக்குமாடி குடியிருப்புச் சங்கத்தினர் கடந்த ஆண்டைப்போல இவ்வாண்டும் பேச்சுப் போட்டி ஒன்றனை ஏற்பாடு செய்திருந்தனர். அப்பேச்சுப் போட்டியின் தலைப்பு, 'சமுதாய உறுப்பினராகக் கடமையாற்ற வேண்டிய வழிமுறைகள்' ஆகும். பேச்சுப் போட்டியின் சுவரொட்டியைக் கண்ட முகுந்தன் அப்போட்டியில் பங்கெடுக்க ஆர்வம் கொண்டான். இணையத்தின் வழி தகவல்களைச் சேகரிக்கத் தொடங்கினான்.



1. உங்களுக்குப் பிடித்த நடவடிக்கையைத் தெரிவு செய்திடுக. புதிய மனிதர்களின் அறிமுகமும் அவர்களின் அனுபவங்களையும் பெற வாய்ப்பளிக்கும்.

2. குடியிருப்பாளர்களோடு சேர்ந்து நடவடிக்கைகளை மேற்கொள்ளவும். கூடைப்பந்து அல்லது பூப்பந்து அரங்குகள், பொதுமண்டபம் போன்ற இடங்களில் நண்பர்களுடன் சில விளையாட்டுகள் அல்லது சமுதாய நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

3. குழு நடவடிக்கையின் மூலம் ஒத்துழைப்பு, நல்லுறவு, தலைமைத்துவம் ஆகிய திறன்களை மேம்படுத்த இயலும்.

4. சமுதாயம் ஏற்பாடு செய்யும் எந்தவொரு நடவடிக்கைக்கும் (கூட்டுப்பணி, விருந்துகள், குடும்ப தினம், விளையாட்டுப் போட்டி அல்லது பிற சமுதாய நடவடிக்கைகள்) தேவைப்படும் உதவியை வழங்குதல்.

**நடவடிக்கை**

மேலும், என்னென்ன வழிகளில் சமுதாயத்திற்குக் கடமையை ஆற்றலாம் என்பதனை வட்ட மேசை (Round Table) நடவடிக்கையின் மூலம் கூறுக.

3.2 **ஆசிரியர் குறிப்பு**
- சமுதாய உறுப்பினராக ஆற்ற வேண்டிய கடமைகளின் வழிமுறைகளை விவரித்துக் கூறுதல்.

**வி.வ.கூ:** தலைமைத்துவம் **உ.சி.தி:** மதிப்பிடுதல் **21ஆம் நூ.தி:** தொடர்பு

கருத்துப் படிவம்

# பாடம் 3 வாழிடச் சமூகம்

தாமான் செந்தோசா குடியிருப்பாளர் சங்க ஆண்டுக் கூட்டம் தொடங்கியது. அக்குடியிருப்பாளர் சங்கத் தலைவர் திரு. சோங் அனைவரையும் வரவேற்றுப் பேசிய பின்னர் அவர்களின் பிரச்சினைகளையும் கருத்துகளையும் கூறச் சொன்னார்.

அப்பொழுது அக்கூட்டத்திற்கு வந்திருந்த இளங்கோ,




**நடவடிக்கை**

இக்குடியிருப்புச் சங்கத்தினர் மேற்கொள்ள வேண்டிய சமுதாயப் பொறுப்புகளையும் அவற்றின் அவசியத்தையும் பட்டியலிடுக.

3.3 **ஆசிரியர் குறிப்பு**

- வாழிடத்தில் இருக்கின்றவர் சமுதாயப் பொறுப்புகளை ஆற்ற வேண்டிய காரண காரியங்களைக் கூறுதல்.

**வி.வ.கூ:** நன்னெறி **உ.சி.தி:** பயன்படுத்துதல் **21ஆம் நூ.தி:** குழுவாகச் செயல்படுதல்

கருத்துப் படிவம்

# பாடம் 4 நம் கடமையன்றோ!

பூங்குன்றன் பொறுப்புமிக்க சிறுவன். அவன் தனக்கு வழங்கப்பட்ட எல்லாப் பொறுப்புகளையும் மிகவும் அக்கறையுடனும் நேர்த்தியாகவும் செய்து முடிப்பான். அவனது ஒவ்வொரு பணியிலும் சமுதாயப் பொறுப்புணர்வு நன்கு வெளிப்படும். அவனது பார்வையில் பின்வரும் சூழல்கள் தென்படுகின்றன.

**அ. விளையாட்டு மையத்திற்குச் செல்லும் வழியில் உள்ள சாக்கடையின் மேல்மூடி உடைந்து விட்டது.**

**ஆ. பொது மண்டபத்திற்கு அருகில் அமைந்துள்ள மின்கம்பத்தின் மின்கம்பி துண்டித்துக் காணப்படுகிறது.**

**இ. தீயணைப்பு நீர்க்குழாய் உடைந்து காணப்படுகிறது.**



நீங்களாக இருப்பின் எப்படி உங்கள் பொறுப்பை ஆற்றுவீர்கள்?

1 ________
2 ________
3 ________

நீங்கள் பொறுப்புடன் செயல்படுவதன் அவசியம் என்ன?

1 ________
2 ________
3 ________

நீங்கள் பூங்குன்றனாக இருப்பின், சமுதாயத்தில் ஏற்படும் சிக்கல்களை எவ்வாறு பொறுப்புடன் தீர்த்து வைப்பீர்கள்?

1 ________
2 ________
3 ________

**நடவடிக்கை**

1. சமுதாய உறுப்பினராக ஆற்ற வேண்டிய பொறுப்புகளைச் செயல்படுத்தும் வகையில் ஏற்படும் மனவுணர்வை எழுதி வளையல் வடிவத்தில் அதனைக் கையில் அணிந்து கொள்ளுதல்.

3.4 **ஆசிரியர் குறிப்பு**

- சமுதாய உறுப்பினராக ஆற்ற வேண்டிய பொறுப்புகளைச் செயல்படுத்துகையில் ஏற்படும் மனவுணர்வைக் கூறுதல்.

**வி.வ.கூ:** நன்னெறி **உ.சி.தி:** உருவாக்குதல் **21ஆம் நூ.தி:** தொடர்பு

கருத்துப் படிவம்

# பாடம் 5 இணைந்தே வெல்வோம்

**தாமான் செந்தோசா வாழிடச் சமூகப் பாதுகாப்புச் செயற்குழு**
**இரவு நேர காவல் சுற்றுப் பணி அட்டவணை**



| கிழமை/நேரம் | நள்ளிரவு 12:00 - 2:00 | அதிகாலை 2:00 - 4:00 |
|---|---|---|
| திங்கள் | திரு. இளங்கோ | திரு. ரஹ்மான் |
| செவ்வாய் | திரு. லிம் | திரு. வின்சென் |
| புதன் | திரு. குமார் | திரு. அகிலன் |
| வியாழன் | திரு. தான் | திரு. அப்துல் |
| வெள்ளி | திரு. மாறன் | திரு. பர்ஹன் |

## நடவடிக்கை

அ. சூழலுக்கு ஏற்பக் கலந்துரையாடுக.

**காவல் சுற்றுப் பணியின் அமலாக்கத்தால் ஏற்படும் நன்மைகள்**

- ஏன் இரவில் காவல் சுற்றுப் பணி செய்ய வேண்டும்?
- காவல் சுற்றுப் பணியின் போது என்ன செய்வார்கள்?
- காவல் சுற்றுப்பணி செய்வதால் ஏற்படும் விளைவுகள் என்ன?

ஆ. சமீப காலமாக உமது வாழிடக் குடியிருப்புப் பகுதியில் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்துக் கொண்டிருக்கின்றன. இச்சூழலைக் களைய நீங்கள் மேற்கொள்ளும் திட்டங்களைப் பட்டியலிடுக.

3.1

**ஆசிரியர் குறிப்பு**

- சமுதாயத்தில் ஆற்ற வேண்டிய வேறு சில பொறுப்புகளை அடையாளங் கண்டு பட்டியலிடுதல்.

**வி.வ.கூ:** நன்னெறி **உ.சி.தி:** படைத்தல் **21ஆம் நூ.தி:** சமூகம்

மதிப்பீடு

அ. தீர்வு காண்க.

**வெய் லிங்கிற்கு இருதய நோய்.**
சிவா நாளிதழில் வெய் லிங்கின் நோய் பற்றிய தகவலை அறிந்தார். வெய் லிங்கின் குடும்பச் சுமையைக் குறைக்க எண்ணினார் சிவா. அவர் தன்னால் இயன்ற நன்கொடையைத் திரட்டித் தந்து, தன் கடமையை ஆற்றினார்.



அ. 1. திரு. சிவாவைப் பற்றிய உமது கருத்து என்ன?

i) ______

ii) ______

iii) ______

2. சிவாவின் சமுதாயப் பொறுப்புகளின் வழி வெய் லிங் அடைந்த நன்மைகள் யாவை?

i) ______

ii) ______

iii) ______

ஆ.



நான் ஒரு மருத்துவர். என் குடியிருப்புப் பகுதியில் மருத்துவ முகாம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. எனது பொறுப்புகள் யாவை?

i) ______

ii) ______

iii) ______

3.1
3.2
3.3
3.4
3.5

ஆசிரியர் குறிப்பு

• சமுதாயத்திற்கு ஆற்ற வேண்டிய ஏனைய பொறுப்புகளை அறிதல்.

வி.வ.கூ: பயனீட்டாளர் கல்வி    உ.சி.தி: பகுத்தாய்தல்    21ஆம் நூ.தி: தொடர்பு

குறைநீக்கல்

சுயமாக மதிப்பிடுக.

**குறிப்பு:**
1 : அறவே இல்லை   2 : எப்பொழுதாகிலும்   3 : அடிக்கடி

| | புள்ளி 1 | 2 | 3 |
|---|---|---|---|
| 1. குடியிருப்புப் பகுதியின் கூட்டுப் பணியில் நான் பங்கெடுத்துக் கொண்டேன். | | | |
| 2. புதியதாகக் குடியிருப்புப் பகுதிக்கு வந்த அண்டை வீட்டாரிடம் நான் என்னை அறிமுகப்படுத்திக் கொண்டேன். | | | |
| 3. நான் பாராட்டை எதிர்பார்த்து மற்றவர்களுக்குக் கடமையாற்றுவேன். | | | |
| 4. நான் எப்பொழுதும் என் கடமைகளில் கண்ணும் கருத்துமாக இருப்பேன். | | | |
| 5. என் வசிப்பிட சமூக மண்டபத்தில் உள்ள பூச்செடிகளுக்கு நீர் ஊற்றுவேன். | | | |
| 6. தனித்து வாழும் தாய்மார்கள் வருமானம் ஈட்ட உதவி புரிகிறேன். | | | |
| 7. வாழிடத்தில் நடைபெறும் குடும்ப விழாவில் கலந்து கொள்ள ஆர்வமாக இருக்கிறேன். | | | |
| 8. வாழிட முதியோர்களுக்கு உதவுவேன். | | | |
| 9. வாழிட மக்களின் பிரச்சினையில் அக்கறை கொள்வேன். | | | |
| 10. நண்பரின் தோட்டத்தில் சிலர் மாம்பழம் பறிப்பதைப் பார்த்துவிட்டு அவர்களுக்கு அறிவுரை கூறுவேன். | | | |

**மொத்தப் புள்ளி**

21-30 : வாழ்த்துகள்! நீங்கள் சமுதாயத்தில் பொறுப்புள்ள நபர் ஆவீர்.
11-20 : திருப்தி. சமுதாயத்தில் உமது பொறுப்புகளை அதிகரிக்க வேண்டும்.
0-10 : சமுதாயத்தில் உமது பொறுப்புகளை மேலும் அதிகரிக்க வேண்டும்.

3.1
3.2

ஆசிரியர் குறிப்பு
- சமுதாயப் பொறுப்புகளை மாணவர்கள் பட்டியலிடுதல்.

வி.வ.கூ: நன்னெறி    உ.சி.தி: பகுத்தாய்தல்    21ஆம் நூ.தி: சமூகம்

திடப்படுத்துதல்

சுழற்றி விளையாடுவோம்.





உங்கள் குடியிருப்புப் பகுதியில் சிறுவர் விளையாட்டு மைதானம் பழுதடைந்துள்ளது. நீங்கள் என்ன செய்வீர்கள்?

உங்கள் வாழிடத்தில் டிங்கிக் காய்ச்சல் கண்டவர் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. உங்கள் குடியிருப்புப் பகுதியின் தலைவர் என்ற முறையில் நீங்கள் என்ன செய்வீர்கள்?

உங்கள் வாழிடத்தில் திறந்த இல்ல உபசரிப்பு ஏற்பாடு செய்கின்றார்கள். உங்கள் கடமை என்ன?

நீங்கள் ஒரு காவல் அதிகாரியாக இருந்தால் சமுதாயத்திற்கு எவ்வகையில் விழிப்புணர்வை ஏற்படுத்த விரும்புவீர்கள்? ஏன்?

எதிர்காலத்தில் நீங்கள் என்ன தொழில் செய்ய விரும்புகிறீர்கள்? அத்தொழிலின் மூலம் நீங்கள் சமுதாயத்திற்கு ஆற்றவேண்டிய கடமை என்ன?

உங்கள் சமுதாயத்திற்குச் சுகாதாரம் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்த என்ன கடமையாற்றுவீர்கள்?

**விதிமுறைகள் :**

1. குழுவாக விளையாட வேண்டும்.
2. கிடைக்கப் பெறும் எண்களுக்கு உரிய கேள்விக்குப் பதில் அளிக்க வேண்டும்.

3.3
3.5

ஆசிரியர் குறிப்பு

- ஏனைய முறைகளைப் பயன்படுத்தி சமுதாயப் பொறுப்புகளை அடையாளங் காணுதல்.

வி.வ.கூ: நன்னெறி    உ.சி.தி: பகுத்தாய்தல்    21ஆம் நூ.தி: தொடர்பு

வளப்படுத்துதல்

**கொடுக்கப்பட்ட படத்தைப் பார்த்துக் கேள்விகளுக்குப் பதிலளித்திடுக.**

இச்சூழல்களில் மாணவர்கள் ஆற்ற வேண்டிய கடமைகள் என்ன?




1. ______
2. ______
3. ______



1. ______
2. ______
3. ______



1. ______
2. ______
3. ______




1. ______
2. ______
3. ______

3.5

ஆசிரியர் குறிப்பு

• சமுதாயப் பொறுப்புகளை ஆற்றும் முறைகளைக் கூறுதல், பட்டியலிடுதல்.

வி.வ.கூ: எதிர்காலவியல் உ.சி.தி: பகுத்தாய்தல் 21ஆம் நூ.தி: தொடர்பு



# தொகுதி 4 நன்றி நவில்தல்

## பாடம் 1 நன்றி! நன்றி!

கருத்துப் படிவம்



பொதுப் பாதுகாப்புப் படை



அரச மலேசிய இராணுவம்





உங்கள் உதவிக்கு நன்றி




தீயணைப்பு மீட்புச் சேவை



அரச மலேசிய போலீஸ் படை




சுகாதாரச் சேவைப் பிரிவினர்

வலைத்தளக் காட்சி

**நடவடிக்கை**

1. இயற்கைப் பேரிடர்களின்போது, சமுதாய உறுப்பினர்கள் (பொதுமக்கள் / தன்னார்வலர்கள்) ஆற்றிய சேவையையும் பங்களிப்பையும் எடுத்துக்காட்டுகளுடன் பட்டியலிடுக.

4.1

**ஆசிரியர் குறிப்பு**

• சமுதாய உறுப்பினர் ஆற்றிய சேவையையும் பங்களிப்பையும் ஒட்டிய புத்தகக் குறியீட்டைத் தயாரித்தல்.

**வி.வ.கூ:** பயனீட்டாளர் கல்வி **உ.சி.தி:** இணைந்து படைத்தல் **21ஆம் நூ.தி:** தொடர்பு

கருத்துப் படிவம்

# பாடம் 2 நன்றி உரைப்போம்

திரு. மாரிமுத்து அடுக்குமாடி வீட்டில் குடியிருப்பவர். ஒரு நாள் அவரும் அவருடைய மகனும் சொகுசு நாற்காலிகளை வாங்கிக் கொண்டு வீடு திரும்பினர். இயந்திரக் கோளாறினால் தற்காலிகமாக மின்தூக்கியின் செயல்பாடு முடக்கப்பட்டிருந்தது. அவர்கள் சிரமப்பட்டுப் பொருள்களைத் தூக்கிக் கொண்டு படிகளில் ஏறினர். அச்சமயம் கீழே இறங்கி வந்த திரு. லோக்மானின் பிள்ளைகள் அவருக்கு உதவி செய்தனர். வீட்டை அடைந்ததும் அவர் அவர்களுக்கு நன்றி கூறிவிட்டுப் பலகாரங்களையும் கொடுத்தனுப்பினார்.




**அறிவழகன்** : அப்பா, அவர்கள் செய்த உதவிக்குத்தான் நாம் நன்றி கூறி விட்டோமே! பிறகு ஏன் அவர்களுக்குப் பலகாரங்களைத் தந்தீர்கள்?

**திரு. முத்து** : **‘காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்**
**ஞாலத்தின் மாணப் பெரிது’ (குறள் 102)**
என்பதை மறக்கக் கூடாது அறிவழகா. அவர்கள் நமக்குத் தக்க சமயத்தில் உதவாமல் சென்றிருந்தால் நம் நிலை என்னவாகியிருக்கும்?

**அறிவழகன்** : ஆமாம், அப்பா. நாம் கனமான பொருள்களைத் தூக்கி வரச் சிரமப்பட்டிருப்போம்.

**நடவடிக்கை**

1. குறளின் பொருளைக் கூறுக. அஃது உணர்த்தும் நெறி என்ன?
2. சமுதாய உறுப்பினர் ஆற்றிய சேவையையும் பங்களிப்பையும் வட்ட (round map) வரைபடத்தில் குறிப்பிடுக.

4.2 **ஆசிரியர் குறிப்பு**

• மாணவர்கள் சமுதாய உறுப்பினர் ஆற்றிய சேவையையும் பங்களிப்பையும் பாராட்டும் வகையில் கவிதை ஒன்றை எழுதச் செய்தல்.

**வி.வ.கூ:** நன்னெறி **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூ.தி:** தொடர்பு

கருத்துப் படிவம்

# பாடம் 3 மிக்க நன்றி

புக்கிட் இம்பியான், நடுத்தர மக்கள் வாழும் ஒரு குடியிருப்புப் பகுதி ஆகும், சில ஆண்டுகளுக்கு முன்பு அக்குடியிருப்பில் முதல் முறையாக கரிகாலன் எனும் மாணவனுக்குப் பல்கலைக்கழகம் செல்லும் வாய்ப்புக் கிடைத்தது. அக்குடியிருப்பில் உள்ளோரின் உதவியுடன் அவன் அப்பா கரிகாலனைப் பட்டப்படிப்பு வரை படிக்க வைத்தார்.

தற்சமயம் புத்ரா ஜெயாவில் அரசு இலாகா ஒன்றில் உயர் அதிகாரியாகப் பணியாற்றும் திரு. கரிகாலன் அக்குடியிருப்பினர் நடத்திய ஆண்டு உபசரிப்பில் கலந்து கொண்டு உரையாற்றுகிறார்.




**நடவடிக்கை**

1. சமுதாயப் பங்களிப்பிற்காக வழங்கப்படும் பாராட்டின் அவசியத்தைப் பட்டியலிடுக.




4.3 **ஆசிரியர் குறிப்பு**

- சமுதாயச் சேவைக்கும் பங்களிப்புக்கும் நன்றி பாராட்டுவதன் அவசியத்தை அறிதல்.

**வி.வ.கூ:** நன்னெறி **உ.சி.தி:** மதிப்பிடுதல் **21ஆம் நூ.தி:** தொடர்பு

கருத்துப் படிவம்

# பாடம் 4 பாராட்டப் பழகுவோம்

திரு. நெடுமாறன் வெற்றிகரமாகத் தொழில் புரியும் ஓர் இளம் தொழிலதிபர் ஆவார். சமுதாயத்தின் ஓர் உறுப்பினர் எனும் முறையில் அவர் கல்வி கற்ற தமிழ்ப்பள்ளியில் கணினி அறை ஒன்றை நிர்மாணித்து, பகுதி நேர கணினிப் பயிற்றுநர் ஒருவரையும் நியமித்து அதற்கான செலவையும் ஏற்றுக் கொள்கிறார். அவரது பங்களிப்பை அவ்வட்டார மக்கள் பெரிதும் போற்றுகின்றனர்.




சமுதாய உறுப்பினர்களின் பங்களிப்பைப் பாராட்டவும் போற்றவும் வேண்டிய அவசியத்தைக் குறிப்பிடுக.

பதில்: ______

மாணவர்கள் கணினிப் பயில்வதைக் காணும் திரு. நெடுமாறனின் மனவுணர்வு எப்படி இருக்கும்?

பதில்: ______

அப்பள்ளி மாணவன் எனும் முறையில் திரு. நெடுமாறனின் பங்களிப்பை எவ்வாறு போற்றுவாய்?

பதில்: ______

**நடவடிக்கை**

1. உமது வாழிடச் சமுதாயத்தினரின் சேவையையும் பங்களிப்பையும் பட்டியலிடுக.
2. அவர்களின் பங்களிப்பைப் போற்றும்பொழுது ஏற்படும் மனவுணர்வைக் குறிப்பிடுக. நன்றியுணர்வை எவ்வாறு வெளிப்படுத்தியிருப்பீர்கள்?

4.4 ஆசிரியர் குறிப்பு

• சமுதாய உறுப்பினர் ஆற்றிய சேவையையும் பங்களிப்பையும் பாராட்டும்போது ஏற்படும் மனவுணர்வுகளை மாணவர்களை முக பாவனையில் வெளிப்படுத்தச் செய்தல்.

**வி.வ.கூ:** நன்னெறி **உ.சி.தி:** மதிப்பிடுதல் **21ஆம் நூ.தி:** தொடர்பு

கருத்துப் படிவம்

# பாடம் 5 அன்று உதவியிருக்காவிட்டால்




**நடவடிக்கை**

1. நாம் பெறுகின்ற உதவிகளுக்கு நன்றி பாராட்டுவது மிக முக்கியம். ஏன்?
2. சமுதாயத்திற்கு நன்றி செலுத்தும் கூறுகளை உள் - வெளி வட்ட (Inside - Outside Circle) நடவடிக்கை வாயிலாகக் கண்டறிந்து எழுதுக.

4.5 **ஆசிரியர் குறிப்பு**

- சமுதாயப் பங்களிப்பை ஆற்றுகின்றவர்களுக்கு நன்றி கூறும் வழிவகைகளை அடையாளங் காணுதல்.

**வி.வ.கூ:** நன்னெறி **உ.சி.தி:** மதிப்பிடுதல் **21ஆம் நூ.தி:** தொடர்பு

மதிப்பீடு

அ. பின்வரும் நன்றி கூறும் சூழல்களுக்கான உரையாடல்களை எழுதி நடித்துக் காட்டுக.

1



2



3



4



5



6



| | | |
|---|---|---|
| 4.4<br>4.5 | ஆசிரியர் குறிப்பு | • சமுதாய வாழ்க்கையில் நன்றி பாராட்டுதலின் முக்கியத்துவம் அறிந்து அதனைச் செயல்படுத்துதல். |

வி.வ.கூ: எதிர்காலவியல்    உ.சி.தி: படைத்தல்    21ஆம் நூ.தி: தொடர்பு

குறைநீக்கல்

அ) நன்றி நவில்தலைக் குறிக்கும் சொற்களை அடையாளம் கண்டு எழுதுக.

குமாரியும் விமலாவும் தஞ்சோங் பூங்கா குடியிருப்பாளர் கழக ஆண்டறிக்கையைக் காண்கின்றனர். அந்த அமைப்பு ஆண்டு முழுதும் பல ஆயிரம் ரிங்கிட்டை வட்டார மக்கள் சேவைக்குப் செலவிட்டுள்ளதை அறிகின்றனர்.

**தஞ்சோங் பூங்கா குடியிருப்பாளர் கழகம் ஆண்டறிக்கை 2020**

**12 - ஜனவரி**
பொங்கல் திருநாளையொட்டி ஏழ்மை நிலையில் உள்ள குடும்பத்தினர்கள் 100 பேருக்குப் பொங்கல் சிறப்புப் பரிசுக் கூடை வழங்கப்பட்டது.

**10 - ஜூன்**
தஞ்சோங் பூங்கா தமிழ்ப்பள்ளி யூ.பி.எஸ்.ஆர். மாணவர்களுக்குச் சிறப்புத் தன்முனைப்புக் கருத்தரங்கு நடத்தப்பட்டது.

**26 - ஆகஸ்ட்டு**
வட்டார மகளிர்களுக்குச் சிறப்புத் தையற்கலைப் பயிற்சி வகுப்பு நடத்தப்பட்டது.

**26 - நவம்பர்**
அரசு ஆதரவில் வீட்டுச் சுயப் பாதுகாப்பு விழிப்புணர்வுக் கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டு; நூறு குடும்பத்தினர் கலந்து கொண்டனர்.

1. தஞ்சோங் பூங்கா குடியிருப்பாளர் கழகத்தினருக்குப் பாராட்டுத் தெரிவிக்க வேண்டிய வழிமுறைகளைக் குறிப்பிடுக.
   i. ________
   ii. ________
   iii. ________
2. நீங்கள் அவர்களைப் பாராட்ட வேண்டியது அவசியமா? விவரித்திடுக.
   ________
3. அரசு சார்பற்ற இயக்கங்களின் சேவை, உதவிப் பெறும்போது உமது மனவுணர்வு எப்படி உள்ளது?
   ________

4.2
4.3

ஆசிரியர் குறிப்பு
• நன்றி பாராட்டும் முறைகளையும் அவற்றின் முக்கியத்துவத்தையும் அறிதல்; அமல்படுத்துதல்.

**வி.வ.கூ:** நன்னெறி **உ.சி.தி:** படைத்தல் **21ஆம் நூ.தி:** அமலாக்குதல்




**அ) நன்றி பாராட்ட பின்வரும் பூச்சாடியை உருவாக்கி வழங்கிடுக.**



**தேவையான பொருள்கள் :**
- காலி நீர்ப்புட்டி
- வண்ணக்கலவை
- நெகிழிப் பூக்கள்
- கத்தரிக்கோல்
- ரப்பர் வளையம்
- வண்ணத் தூரிகை




**ஆ. சமுதாயத்தினருக்கு நன்றி பாராட்டும் முறையைக் கட்டத்தில் எழுதி நிறைவு செய்க.**

1. பழங்கள் வழங்கிய தாத்தாவுக்குப்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பு | | | கை | | டு |

நன்றி கூறினேன்.

2. சுற்றுலாவிற்கு அழைத்துச் செல்ல உதவிய நிறுவனத்திற்குத்

| | | | |
|---|---|---|---|
| தொ | | பே | |

மூலம் நன்றி கூறினேன்.

3. பாடங்களை மீள்பார்வை செய்ய உதவிய அண்டை வீட்டு அண்ணனுக்குப்

| | | |
|---|---|---|
| | ரி | |

வழங்கினேன்.

4. சிறந்த சேவையாற்றிய குடியிருப்புச் சங்கத் தலைவருக்குப்

| | | | |
|---|---|---|---|
| பொ | | னா | |

அணிவித்தனர்.





4.2
4.3
4.4
4.5

**ஆசிரியர் குறிப்பு**
- மேலும் நன்றி பாராட்டும் வழிமுறைகளை அறிதல்.

**வி.வ.கூ:** பயனீட்டாளர் கல்வி **உ.சி.தி:** ஆய்வுச் சிந்தனை **21ஆம் நூ.தி:** அமலாக்கம்

**வளப்படுத்துதல்**

**அ. உருவாக்கிடுக.**

சுங்கைபட்டாணி தமிழ்நெறிக் கழகத்தினர் வாழிட நூலகத்திற்குத் தமிழ், மலாய், ஆங்கில நூல்களை அன்பளிப்புச் செய்தனர். பள்ளி மாணவன் என்ற முறையில் இந்த நூல் அன்பளிப்பு உனக்குப் பெரும் உதவியாக இருந்தது. இவர்களின் சேவையை எண்ணி மனம் மகிழும் நீ அவர்களுக்கு நன்றி பாராட்ட விரும்புகிறாய்.






**ஆ) மேற்கண்ட பிரிவினருக்கு எவ்வாறு நன்றி தெரிவிப்பீர்கள்? வரைந்து, வாசகங்களை எழுதிடுக.**

4.5 **ஆசிரியர் குறிப்பு** • சமுதாயப் பங்களிப்பை ஆற்றுகின்றவர்களுக்கு நன்றி கூறும் வழிவகைகளை அடையாளங் காணுதல்.

**வி.வ.கூ:** பயனீட்டாளர் கல்வி **உ.சி.தி:** படைத்தல் **21ஆம் நூ.தி:** ஆக்கச் சிந்தனை

# தொகுதி 5 உயர்வெண்ணம்

## பாடம் 1 மதித்து வாழ்வோம்

கருத்துப் படிவம்




**நடவடிக்கை**

1. மேற்கண்ட சூழலில் நீங்கள் இருந்தால் உங்களின் அடுத்த நடவடிக்கை என்னவாக இருக்கும்?
2. நீங்கள் சமுதாயத்தோடு இயைந்த வாழ்வில் கடைப்பிடிக்கும் பணிவன்பைக் காட்டும் புத்தகக் குறியீட்டு அட்டையைத் தயாரித்து வகுப்பில் படைத்திடுக.

வலைத்தளக் காட்சி

5.5

**ஆசிரியர் குறிப்பு**

- மாணவர்கள் சமுதாயத்தோடு இயைந்த வாழ்வில் கடைப்பிடிக்கப்படும் பணிவன்பையும் நன்னடத்தையையும் ஒட்டிய திரட்டேட்டைச் செய்தல்.

**வி.வ.கூ:** நன்னெறி  **உ.சி.தி:** படைத்தல்  **21ஆம் நூ.தி:** சமூகம்

கருத்துப் படிவம்

# பாடம் 2 நலம் விசாரிப்போம்

திரு. வேலன் பூங்காவில் மெதுவோட்டம் செல்லும்பொழுது திரு. அஸ்மானைச் சந்திக்கிறார்.




## நடவடிக்கை

1. சமுதாய வாழ்விலிருந்து தங்களை விலக்கிக் கொள்வதையும் உணர்வதில்லை என்பதன் பொருளைக் குறிப்பிடுக.
2. 'இயந்திரமாக வாழ்ந்து வருகின்றனர்' என்னும் கூற்று எதைக் குறிக்கின்றது?
3. சமுதாயத்தோடு இயைந்த வாழ்வில் பணிவன்பையும் நன்னடத்தையையும் கடைப்பிடிப்பதன் முக்கியத்துவத்தை விவரித்திடுக.

5.2
5.3

**ஆசிரியர் குறிப்பு**

- மாணவர்கள் சமுதாயத்தோடு இயைந்த வாழ்வில் பணிவன்பையும் நன்னடத்தையையும் கடைப்பிடிக்கத் துணை புரியும் ஏனைய நடவடிக்கைகளை அறிதல்.

**வி.வ.கூ:** தலைமைத்துவம் **உ.சி.தி:** மதிப்பிடுதல் **21ஆம் நூ.தி:** தொடர்பு

கருத்துப் படிவம்

# பாடம் 3 சமுதாயத்தின் பிரதிபலிப்பு

அ)

இன்றிரவு கம்போங் அத்தாப் கிராமத்தில் பட்டிமன்றம் நடைபெறவுள்ளது. அதில் சந்திரா பங்கெடுக்கவுள்ளாள். அப்பட்டிமன்றத்தில் சமுதாயத்தில் நன்னடத்தையுடனும் ஒழுக்கத்துடனும் நடக்காவிடில் ஏற்படும் விளைவுகளைப் பற்றிப் பேசுவதற்குரிய கருத்துகளைச் சந்திரா சிந்தித்துக் கொண்டிருக்கிறாள்.



சமுதாயத்தோடு இயைந்த வாழ்வில் கடைப்பிடிக்கப்படும் பணிவன்பையும் நன்னடத்தையையும் பொருட்படுத்தாததால் ஏற்படும் விளைவுகளை எழுதுக.

- ஆபத்து அவசர நேரங்களில் உதவி கிடைக்காது.
- 
- 
- 
- ஒற்றுமை குலையும்.

**நடவடிக்கை**

1. மேற்கண்ட விளைவுகளை வல்லுநர் இருக்கை (hot seat) முறையில் நண்பர்களுடன் பகிர்ந்திடுக.
2. சிறு பத்தியில் அவ்விளைவுகளைத் தொகுத்து எழுதிடுக.

5.4

**ஆசிரியர் குறிப்பு**

- மாணவர்கள் சமுதாயத்தோடு இயைந்த வாழ்வில் கடைப்பிடிக்கப்படும் பணிவன்புக்கும் நன்னடத்தைக்கும் எதிர்விளைவுகளை ஏற்படுத்தும் நடவடிக்கைகளை அடையாளங் காணச் செய்தல்.

**வி.வ.கூ:** நன்னெறி **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூ.தி:** சமூகம்

கருத்துப் படிவம்

# பாடம் 4 நல்லோர் வார்த்தை

நல்லவர் சொல்லை நாம் கேட்போம்
நலமாய் வாழ வழி வகுப்போம்
தலைவர்கள் சொன்ன வழி நடப்போம்
தாய் நாட்டினையே வாழ வைப்போம் (நல்லவர்)

அறிவே வாழ்வின் முதல் என்போம் அதன்
தெளிவே தெய்வ அருள் என்போம்
பயமே நமக்குப் பகை என்போம் உள்ளத்
தெளிவே அதற்கு மருந்தென்போம் (நல்லவர்)

பசிக்கும் வயிற்றின் கொடுமைகளை நாம்
பார்த்து வாழக் கூடாது
பதுக்கும் மனிதன் இருந்தாலே அங்குப்
பறிக்கும் மனிதன் தோன்றிடுவான் (நல்லவர்)

ஒன்றாய் வாழப் பழகிடுவோம் நாம்
நன்றாய் வாழக் கற்றிடுவோம்
தினமும் நீயும் உழைத்தாலே
அனுதினமும் நீயும் மகிழ்ந்திடலாம் (நல்லவர்)

நன்றி
கவிஞர் : பட்டுக்கோட்டை குமாரவேல்



**நடவடிக்கை**

1. மேற்கண்ட பாடலில் கவிஞர் வெளிப்படுத்தும் உயர்வெண்ணத்தைக் குறிக்கும் வரிகளைப் பட்டியலிடுக.
2. உயர்வெண்ணத்தைக் கடைப்பிடித்த நீங்கள் பெற்ற மனவுணர்வைக் குறிப்பிடுக.

**சிந்தனைத் திறன்**

உயர்வெண்ணம் சமுதாயத்தை எவ்வகையில் மேம்படுத்தும்? விவாதித்திடுக.

5.4

**ஆசிரியர் குறிப்பு**

- மாணவர்கள் உயர்வெண்ணத்தைக் கடைப்பிடிப்பதால் அடையும் நன்மைகள் தொடர்பான பலரின் மனவுணர்வுகளை அறிதல்.

**வி.வ.கூ:** நாட்டுப் பற்று **உ.சி.தி:** எதிர்காலவியல் **21ஆம் நூ.தி:** ஆய்வுச் சிந்தனை

கருத்துப் படிவம்

# பாடம் 5 நன்னடத்தை மிக்க சமுதாயம்

பள்ளி முடிந்து வீடு திரும்பிய துளசி, தீவிரச் சிந்தனையில் ஆழ்ந்திருந்தாள். அவளின் சிந்தனையைக் கலைத்தது மாமா திரு. முத்துவின் குரல்.




(சில நிமிடங்களுக்குப் பிறகு)

**துளசி** : அம்மா கூறிய வேலைகளையெல்லாம் முடித்துவிட்டேன் மாமா. மாமா, எனக்கு ஒரு சந்தேகம். என் ஆசிரியர் சமுதாயத்தோடு இயைந்த வாழ்வில் நாம் பணிவன்பையும் நன்னடத்தையையும் செயல்படுத்த வேண்டும் என்றார். நன்னடத்தை மிக்க சமுதாயமே நாட்டின் முதுகெலும்பு என்றும் கூறினார்.

**மாமா** : அவர் மிகச் சரியாகக் கூறியுள்ளார். இதில் உனக்கென்ன ஐயம்?

**துளசி** : அன்றாட வாழ்வில் இஃதை எவ்வகையில் கடைப்பிடிக்க வேண்டும் மாமா?

**மாமா** : சமய நம்பிக்கைகளைப் பின்பற்றுதல், நாட்டுப் பற்றுடன் செயல்படுதல், பொறுப்புணர்வுடன் இருத்தல் போன்ற பல பண்புகளை நாம் கொண்டிருத்தல் வேண்டும். அது மட்டுமல்ல, நாம் அணியும் உடையின் நேர்த்தியும், பேசும் முறையும்கூட ஒரு சமுதாயத்தின் பெருமையையும் சிறுமையையும் பிரதிபலிக்கும். நாம் சமுதாயத்தின் கண்ணாடி என்பதை உணர்ந்து செயல்பட்டாலே போதுமானது.

**துளசி** : மிக்க நன்றி மாமா.

**நடவடிக்கை**

1. துளசியின் மாமா குறிப்பிடும் சமுதாய வாழ்வில் உயர்வெண்ண நடவடிக்கைகள் யாவை?
2. பள்ளி மாணவர் எனும் வகையில் அன்றாடச் சமுதாய வாழ்க்கையில் எவ்வகையில் உயர்வெண்ணக் கூறுகளை வெளிப்படுத்த இயலும்? பட்டியலிடுக.

5.5 **ஆசிரியர் குறிப்பு**
- சமுதாய வாழ்வில் மாணவர்கள் வெளிப்படுத்த வேண்டிய உயர்வெண்ணக் கூறுகளை அடையாளங் காணுதல்.

**வி.வ.கூ:** நாட்டுப் பற்று **உ.சி.தி:** எதிர்காலவியல் **21ஆம் நூ.தி:** ஆய்வுச் சிந்தனை

மதிப்பீடு

அ. கேள்விகளுக்குப் பதிலளித்திடுக.

1. நன்னடத்தை மிக்க சமுதாயத்தினர் ________, ________ போன்ற பண்புகளைக் கொண்டிருப்பர்.
2. சமுதாயம் ________ ஈடுபடுவதால் நம் சமுதாயத்திற்குத் ________ ஏற்படும்.
3. ________ ________ மேலோங்க நாம் விட்டுக் கொடுக்கும் பண்பைக் கொண்டிருக்க வேண்டும்.
4. நன்னடத்தை மிக்க சமுதாயத்தினர் ________ வளர்ச்சிக்கும், நாட்டின் மேம்பாட்டுக்கும் வித்திடுவர்.

- இறை நம்பிக்கை
- தலை குனிவு
- உயர்வெண்ணம்
- சமுதாய
- சமுதாயத்தினரிடையே
- ஒற்றுமை
- சீர்கேடுகளில்

ஆ. கீழ்க்காணும் சூழலில் பணிவன்பையும் நன்னடத்தையையும் எவ்வாறு கடைப்பிடிப்பாய்?




5.5

ஆசிரியர் குறிப்பு
• மாணவர்கள் சமுதாயத்தோடு இயைந்த வாழ்வில் கடைப்பிடிக்கப்படும் பணிவன்பும் நன்னடத்தையும் தொடர்பான சூழல்களைக் நடித்துக் காட்டுதல்.

வி.வ.கூ: நாட்டுப்பற்று  உ.சி.தி: மதிப்பிடுதல்  21ஆம் நூ.தி: இணைந்து கற்றல்

## குறைநீக்கல்

1. இங்கு வெளிப்படுத்த வேண்டிய பணிவன்பு, நன்னடத்தைக் கூறுகளைக் குறிப்பிடுக.



**ஆ. வாக்கியங்களை நிறைவு செய்க.**

1. நாம் __________ கொண்டவர்களிடம் நட்பு கொள்ள வேண்டும்.
2. உயர்வான __________ மிக்கவர்களையே உத்தமர் என்று கூறுவர்.
3. பிறரிடம் பேசும்போது __________ சொற்களையே பயன்படுத்த வேண்டும்.
4. சமுதாயத்தினரிடம் __________ கொள்ள வேண்டும்.
5. __________ நிறைந்தவர்களையே பலரும் போற்றுவர்.
6. செய்த தவற்றை __________

5.1

**ஆசிரியர் குறிப்பு**

- சமுதாய வாழ்க்கையில் பணிவண்பையும் நன்னடத்தையையும் குறிப்பிடும் வேறு சில வாக்கியங்களை எழுதச் செய்தல்.

**வி.வ.கூ:** நன்னெறி **உ.சி.தி:** பகுதாய்தல் **21ஆம் நூ.தி:** இணைந்து கற்றல்




**கீழ்க்காணும் சூழல்களை வாசித்துக் கேள்விகளுக்குப் பதிலளித்திடுக.**

அ) குணப்பிரியாவின் தந்தை திரு. மதியழகன் ஒரு மருத்துவராவார். தற்போது அவர் பணி மாற்றம் பெற்றுச் சரவாக் சென்றுள்ளார். அவர் குடியிருக்கும் பகுதியில் வாழும் பழங்குடியினர் விருந்து உபசரிப்பு ஏற்பாடு செய்து திரு. மதியழகனையும் அவரது குடும்பத்தினரையும் அவ்விருந்தில் கலந்து கொள்ள அழைப்பு விடுத்துள்ளனர். குணப்பிரியா அவ்விருந்துபசரிப்புக்கு நவநாகரிக உடையில் செல்லத் திட்டமிட்டுள்ளாள்.



1. குணப்பிரியாவின் எண்ணம் சரியா?

2. குணப்பிரியா நவநாகரிக உடையில் சென்றிருந்தால் என்ன நேரிட்டிருக்கும் என்பதை ஊகித்து எழுதுக.

ஆ) தாமான் டேசா ரியாவில் சமுதாய இயக்கத்தினர், சுதந்திர மாதத்தை முன்னிட்டு அனைவரின் இல்லத்திலும் தேசியக் கொடியை ஏற்றினர். மேலும், அன்றைய தினம் பல போட்டி விளையாட்டுகளையும் ஏற்பாடு செய்துள்ளனர்.



1. நீங்கள் அவ்வாழிடச் சமுதாயத்தினரோடு இயைந்து எவ்வாறு அந்நிகழ்ச்சி வெற்றி பெற உதவுவீர்கள்?

2. நீங்கள் விளையாட்டுப் போட்டியில் பங்கெடுக்கும் பொழுது, எவ்வாறு பணிவன்பையும் நன்னடத்தையையும் கடைப்பிடிப்பீர்கள்?



5.5

**ஆசிரியர் குறிப்பு**

• சமுதாயத்தினருடன் இயைந்த வாழ்வில் பணிவன்பையும் நன்னடத்தையையும் வெளிக் கொண்டு வருவதற்கான வேறு சில நடவடிக்கைகளை அடையாளங் காணுதல்.

**வி.வ.கூ:** நன்னெறி **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூ.தி:** சமூகம்

**வளப்படுத்துதல்** சரியான விடைக்கு வட்டமிடுக.

1. சமுதாயத்தில் ________ நடந்து கொள்வதால் சமுதாயத்தோடு இணைந்து வாழ முடியும்.

   அ. அவமதிப்புடன்
   ஆ. மரியாதைக் குறைவுடன்
   இ. நன்னடத்தையுடனும் ஒழுக்கத்துடனும்

2. ________ நடந்து கொள்வதால் அனைவரும் நம்மைப் போற்றுவர்.

   அ. உயர்வெண்ணத்துடன்
   ஆ. தற்பெருமையாக
   இ. ஆத்திரமாக

3. அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சி, சமுதாயப் பிணைப்பில் ________ ஏற்படுத்துவதைத் தவிர்க்க வேண்டும்.

   அ. இடைவெளியை
   ஆ. நல்லுறவை
   இ. புரிந்துணர்வை

4. சமூகத்தினரின் சாதனையைப் ________ வேண்டும்.

   அ. பழிக்க
   ஆ. பரிகசிக்க
   இ. பாராட்ட

5. வயதில் மூத்தவர்களின் அறிவுரைகளுக்கு ________ பேசுவது நல்ல செயலாகும்.

   அ. பணிந்து
   ஆ. தாழ்ந்து
   இ. கோபமாகப்

5.1, 5.2, 5.3, 5.4, 5.5

**ஆசிரியர் குறிப்பு**

- சமுதாயத்தில் பணிவன்பையும் நன்னடத்தையையும் பொருட்படுத்தாத பட்சத்தில் ஏற்படும் விளைவுகளையும் மனவுணர்வுகளையும் மாணவர்களைக் கூறச் செய்தல்.

**வி.வ.கூ:** அறிவியல் தொழில் நுட்பம் **உ.சி.தி:** பயன்படுத்துதல் **21ஆம் நூ.தி:** சமூகம்

# தொகுதி 6 மரியாதை

## பாடம் 1 கலாச்சாரம் மதிப்போம்

கருத்துப் படிவம்

பள்ளி விடுமுறையில் சுமதி கிராமத்தில் உள்ள தன் தாத்தாவின் வீட்டிற்குச் சென்றாள். அவள் தாத்தா வசிக்கும் புதுக் கிராமத்தின் குடியிருப்புப் பகுதியில் பல இன மக்கள் வாழ்ந்து வருகின்றனர். மாலை வேளை சுமதி அண்டை வீட்டுப் பாட்டியைக் காணச் செல்கிறாள்,




**நடவடிக்கை**

மலேசியர்கள் தங்களுக்கே உரித்தான உடை, விளையாட்டு, வாழ்க்கை முறை, ஆகியவற்றில் வேறுபட்டிருக்கின்றனர். அனைவரின் பண்பாட்டை அறிந்திருப்பது சமுதாய வாழ்க்கைக்கு மிக இன்றியமையாதது ஆகும். விவரித்திடுக.

6.1 **ஆசிரியர் குறிப்பு** • சமுதாய வாழ்க்கையில் பல்வேறு பண்பாட்டுக் கூறுகளை அறிந்து கூறுதல்.

வி.வ.கூ: பயனீட்டாளர் கல்வி  உ.சி.தி: அமலாக்குதல்  21ஆம் நூ.தி: சமூகம்

கருத்துப் படிவம்

# பாடம் 2 சமுதாயத்தை மதிப்போம்

பல்லின மக்கள் வாழும் இம்மலேசிய நாட்டில் நாம் ஒருவரை ஒருவர் மதித்தும், விட்டுக் கொடுத்தும், புரிந்துணர்வுடனும் வாழ வேண்டும். நாம் பிற இனத்தவர்களின் பண்பாட்டை மதிக்க வேண்டும். பிற இனத்தவரின் பண்பாட்டு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டும். இதன் மூலம் பிற இனப் பண்பாட்டுக் கூறுகளை அறிந்து கொள்ள வாய்ப்புக் கிடைக்கிறது. அவர்களின் பாரம்பரியங்களையும் பழக்க வழக்கங்களையும் புரிந்து கொள்ள முடிகிறது.



**மலாய்க்காரர்கள்**

| | |
|---|---|
| உடை | - பாஜூ கூரோங் |
| | - பாஜூ மலாயு |
| விளையாட்டு | - பல்லாங்குழி |
| | - பிரம்புப் பந்து |
| | - வாவ் (பட்டம்) |
| | - பம்பரம் |
| | - சீலாட் |
| நடனம் | - ஜோகேட் மாக்யோங் |

**இந்தியர்கள்**

| | |
|---|---|
| உடை | - வேட்டி |
| | - புடவை |
| | - பட்டுப் பாவாடை |
| விளையாட்டு | - கபடி |
| | - சதுரங்கம் |
| | - சிலம்பம் |
| | - ஜல்லிக்கட்டு |
| | - உறிமரம் ஏறுதல் |
| நடனம் | - பரதம் |
| | - கும்மியாட்டம் |





**சீனர்**

| | |
|---|---|
| உடை | - சொங்சாம் |
| | - சாம்பூ |
| விளையாட்டு | - கோ |
| | - சியாங்கி |
| | - யோ-யோ |
| நடனம் | - சிங்க நடனம் |
| | - நாக நடனம் |

**கடசான்/ஈபானியர்**

| | |
|---|---|
| உடை | - பின்னல் தொப்பி |
| | - சொங்கேட் மலாயு |
| விளையாட்டு | - கெண்டாங் பாம்பாத் |
| | - தீபோவ் |
| | - பீசா |
| நடனம் | - சுமாசாவ் |
| | - மூங்கில் நடனம் |
| | - ஙாஜாட் |
| | - சாப்பே |



**நடவடிக்கை**

வல்லுநர் இருக்கை (Hot seat) முறையில் பிற இனத்தவரின் பண்பாட்டை மதிக்கும் செயல்களை அமல்படுத்துவதைக் கலந்துரையாடுக.

6.2

**ஆசிரியர் குறிப்பு**

- சமுதாயத்தோடு இயைந்த வாழ்வில் பல்வகைப் பண்பாட்டை அடையாளங் கண்டு அவற்றை மதிக்கும் வழிகளைக் கூறச் செய்தல்.

**வி.வ.கூ:** நாட்டுப் பற்று **உ.சி.தி:** புரிதல் **21ஆம் நூ.தி:** தொடர்பு

கருத்துப் படிவம்

# பாடம் 3 பணி ஓய்வு உபசரிப்பு

டாமாய் கிராமத் தலைவர் திரு. ரசாக் அவர்கள் பணியில் இருந்து ஓய்வு பெறுகிறார். அதனை முன்னிட்டு அக்கிராமத்துப் பள்ளியில் பயிலும் மாணவர்கள் பிரியாவிடை விருந்து உபசரிப்பு ஏற்பாடு செய்வதற்காக ஒன்று கூடினர்.




கடந்த 10 ஆண்டுகளாகத் திரு. ரசாக் அவர்கள் கிராமத் தலைவராக இருந்து இப்பள்ளியின் வளர்ச்சிக்கு அரும்பங்காற்றி இருக்கிறார். எனவே, பணி ஓய்வு பெறும் அவரை உபசரித்து வழியனுப்புவது அவசியமாகும்.

**நடவடிக்கை**

பல்வேறு இனத்தவர்களின் பண்பாட்டை மதிப்பதால் ஏற்படும் நன்மைகள் யாவை? கலந்துரையாடுக.




**இளங்கோ** : ஆமாம், ஒன்றுபட்ட மலேசியர்களின் உருவாக்கத்திற்கு நாம் நமது எல்லா நடவடிக்கைகளிலும் நற்பண்புகளையும் நன்னடத்தையையும் கடைப்பிடிக்க வேண்டும்.

**சுமதி** : இளங்கோ, இந்த விருந்தை நாம் வியாழக்கிழமை மதியம் செய்வோம். காரணம் வெள்ளிக்கிழமை மதியம் அவரின் தொழுகை நேரம். அத்துடன், பெரும்பாலும் இந்துக்கள் அன்றைய தினம் மரக்கறி உணவு வகைகளையே உண்பார்கள்.

**வாசுகி** : இஸ்லாமியர் ஒரு நாளைக்கு ஐந்து வேளை தொழுகை மேற்கொள்வர். நாம் ஏற்பாடு செய்யும் விருந்து அவருடைய தொழுகை நேரத்தைப் பாதிக்கக்கூடாது.

**இளங்கோ** : மேலும், நம் கிராமத் தலைவர் மலாய்க்காரர் என்பதால் அன்றைய நிகழ்ச்சியின் ஏற்பாடு, அலங்கரிப்பு அனைத்தும் மலாய்ப் பண்பாட்டை வெளிக்காட்டுவதாக இருந்தால் மிகச் சிறப்பாக இருக்கும் எனக் கருதுகிறேன்.

**சைமன்** : நல்ல யோசனை. எல்லாச் சமயத்தினருக்கும் இதுபோன்ற நம்பிக்கைகள் உள்ளன. பல்லின மக்கள் வாழும் மலேசியத் திருநாட்டின் சுபிட்சத்திற்கும் வளப்பத்திற்கும் பிற சமயத்தினரின் சமய நம்பிக்கைகளை மதித்து நடப்பது நமது நற்பண்பாகும்.

**சொற்களஞ்சியம்**

'ஹாலால்' உணவு இஸ்லாமியக் கோட்பாட்டின்படி உணவு வகைகளில் அனுமதிக்கப்பட்டவை.

**வலைத்தளக் காட்சி**

6.3 **ஆசிரியர் குறிப்பு**

• மாணவர்கள் சமுதாயத்தோடு இயைந்த வாழ்வில் பல்வகைப் பண்பாட்டை மதிப்பதன் முக்கியத்துவத்தையொட்டி அறிவோட்டவரையைத் தயாரித்திடச் செய்தல்.

**வி.வ.கூ:** நாட்டுப் பற்று **உ.சி.தி:** மதிப்பிடுதல் **21ஆம் நூ.தி:** தொடர்பு

கருத்துப் படிவம்

# பாடம் 4 பெருமிதம் கொள்வோம்

**சுதந்திர மாதக் கொண்டாட்டத்தையொட்டி, பண்டார் பாரு பண்பாட்டுக் கழகத்தினர் ஏற்பாடு செய்யும், ‘பல்வகைப் பண்பாட்டை மதித்தல்’ எனும் தலைப்பிலான பேச்சுப் போட்டியில் நீங்கள் பங்கேற்கின்றீர்கள்.**




### கருத்து 1

பல்வகைப் பண்பாடு
1. உடை
2. ______
3. ______

### கருத்து 2

மதிக்கும் முறை
1. பிறர் இன உரிமை
2. ______
3. ______

### கருத்து 3

பல்வகைப் பண்பாட்டை மதிக்கும் அவசியம்
1. நல்ல புரிதலை ஏற்படுத்துதல்
2. ______
3. ______

### கருத்து 5

கருத்துரை
1. ______
2. ______
3. ______

### கருத்து 4

ஏற்படும் மனவுணர்வுகள்
1. மகிழ்ச்சி
2. ______
3. ______

### நடவடிக்கை

1. முழுமையான பேச்சை (உரையை) எழுதுக.
2. பல்வகைப் பண்பாட்டைப் பொருட்படுத்தாத பட்சத்தில் ஏற்படும் விளைவுகளைக் குறிப்பிடுக.

6.4
6.5

**ஆசிரியர் குறிப்பு**
- மாணவர்கள் சமுதாயத்தோடு இயைந்த வாழ்வில் பல்வகைப் பண்பாட்டை மதிப்பதால் ஏற்படும் மனவுணர்வுகளைக் கலந்துரையாடுதல்.

**வி.வ.கூ:** நாட்டுப் பற்று **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூ.தி:** ஆய்வுச் சிந்தனை

கருத்துப் படிவம்

# பாடம் 5 மதிக்கப் பழகுவோம்

காசிமும் இனியனும் தங்கள் ஆசிரியர் வழங்கிய பல இனப் பண்பாட்டுக் கூறுகள் தொடர்பான தகவல்களைத் திரட்ட தாமான் அங்சானா வசிப்பிட இணைய மையத்தில் தகவல் தேடுகின்றனர்.

**மலாய் சமூகத்தினர்**



**இந்திய சமூகத்தினர்**



**சீன சமூகத்தினர்**



**கடசான் டூசூன் சமூகத்தினர்**



**அ. வாருங்கள் மேற்கண்ட பண்பாட்டுக் கூறுகள் தொடர்பான சாவிக் கொத்துத் தயாரிப்போம்.**

**தேவையான பொருள்கள்:**
இடுக்கி
தாள்
கத்தரிக்கோல்
இரும்பு வளையம்

**சாவிக் கொத்துச் செய்யும் முறைகள்**

1. தகவல்களை எழுதிடுக.
2. நெகிழிப் பையால் மடித்திடுக.
3. துவாரமிடுக.
4. சாவிக் கொத்துத் தயார்.

1



2



3



4




**நடவடிக்கை**

1. பல்லினச் சமுதாயத்தினரின் வேறு சில பண்பாட்டுக் கூறுகளை அடையாளங் கண்டு கூறுக.
2. மேற்கண்ட பண்பாட்டுக் கூறுகள் தொடர்பாகச் சாவிக் கொத்து உருவாக்குக.

6.5

**ஆசிரியர் குறிப்பு**

• பல இனச் சமுதாயப் பண்பாட்டுக் கூறுகளை அடையாளம் கண்டு, அவற்றைப் பல்வேறு சூழல்களில் வெளிப்படுத்துதல்.

**வி.வ.கூ:** நன்னெறி **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூ.தி:** சமூகம்

மதிப்பீடு

**கீழ்க்காணும் சூழல்களில் என்ன செய்வீர்கள் என்பதைக் குறிப்பிடுக.**

அ) 1. நாம் பிற இனத்தவரை விருந்தோம்பலுக்கு அழைக்கும்போது கவனத்தில் கொள்ள வேண்டிய பண்பாட்டுக் கூறுகள் யாவை?

i. ______________________

ii. ______________________

2. இந்நிகழ்ச்சி சிறப்பாக நடந்தேற நீங்கள் ஆற்ற வேண்டிய பங்கு என்ன?

i. ______________________

ii. ______________________




ஆ) 1. மலர்விழி அருகில் உள்ள ஆலயத்தில் நடைபெறும் திருமண நிகழ்ச்சியில் கலந்து கொள்ள தன் அம்மாவுடன் புறப்படத் தயாராகிறாள். அவள் கடைப்பிடிக்க வேண்டிய பண்பாட்டுக் கூறுகளைக் குறிப்பிடுக.

i. ______________________

ii. ______________________

iii. ______________________

2. மேலே குறிப்பிட்டுள்ளவற்றின் அவசியம் என்ன?

i. ______________________

ii. ______________________

iii. ______________________



6.1
6.2

**ஆசிரியர் குறிப்பு**

- பண்பாட்டுக் கூறுகளைக் கடைப்பிடிக்க வேண்டிய ஏனைய நிகழ்ச்சிகளை அறிந்து கூறுதல்.

**வி.வ.கூ:** சிந்தனையாற்றல் **உ.சி.தி:** புரிதல் **21ஆம் நூ.தி:** நன்னெறி

குறைநீக்கல்

## அறிந்து செயல்படுக.

குடியிருப்புப் பகுதியில் உள்ள ஆலயத்தில் பண்பாட்டு விழா நடைபெறவுள்ளதால், அவ்வட்டாரத்தில் நடைபெறவிருந்த கேளிக்கை நிகழ்ச்சியை ஏற்பாட்டுக் குழுவினர் ஒத்தி வைத்தனர்.

முகிலன், இம்ரான், ஆமேங் மூவரும் தத்தம் இல்ல நிகழ்வுகள் அனைத்திலும் கலந்து கொள்வர்.

நாம் நம் குடியிருப்பாளர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்க வேண்டும்.

பொது மண்டபத்தில் நடைபெறவுள்ள நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொள்ள சங்கரி பண்பாட்டு உடையுடன் சென்றாள்.

பாத்திமா வயது முதிர்ந்தவர்களிடம் மரியாதையாகப் பேசுவாள்.



**அ) விடை எழுதுக**

1. நாம் மேற்கண்டவாறு நடந்து கொள்வதால் ஏற்படும் நன்மைகள் யாவை?

   i) ______________________

   ii) ______________________

   iii) ______________________

2. இம்மாதிரியான வேறு சில சூழல்களைப் பற்றிக் கலந்துரையாடுக; எழுதுக.

   ______________________

   ______________________

6.3
6.5

**ஆசிரியர் குறிப்பு**

- மாணவர்களை அன்றாட நடவடிக்கைகளில் நற்பண்பையும் நன்னடத்தையையும் கடைப்பிடித்தல்.

**வி.வ.கூ:** நன்னெறி **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூ.தி:** சமூகம்

திடப்படுத்துதல்

அ) சரியான பதிலை எழுதுக.

1. ______________ வீடுகளில் வசிப்பது ஈபானியர்களின் பண்பாடுகளில் ஒன்றாகும்.

2. நல்ல எண்ணமும் பிற சமுதாயத்தினரை மதிக்கும் பண்பும் கொண்டவர்களே நல்ல ______________ ஆவர்.

3. திரு. லியோங் உங்கள் குடியிருப்புப் பகுதியில் வசிக்கும் சீனராவார். அவரின் பண்பாட்டு நிகழ்ச்சியில் கலந்து கொண்ட மனவுணர்வுகளைக் குறிப்பிடுக.

i. ______________

ii. ______________

iii. ______________

ஆ) நிறைவு செய்க.

நங்கை சமூக மண்டபத்தில் நடைபெற்ற பல்லினப் பண்பாட்டு விழாவில் கலந்து கொள்ள பண்பாட்டு உடை அணிந்து சென்றாள்.




6.4
6.5

ஆசிரியர் குறிப்பு

- பல இனச் சமுதாயத்தினரின் பண்பாட்டை மதித்தலையும் மதிக்கும்போது ஏற்படும் மன உணர்வுகளையும் விவரிக்கக் கூறுதல்.

**வி.வ.கூ:** ஆக்கமும் புத்தாக்கமும் **உ.சி.தி:** மதிப்பிடுதல் **21ஆம் நூ.தி:** இணைந்து கற்றல்

வளப்படுத்துதல்

அ) விடை தருக.



**பிறரின் நம்பிக்கையை மதித்துச் செயல்படுக.**

1. பிறரின் பண்பாட்டை மதிக்காவிடில் ஏற்படும் விளைவுகளைக் குறிப்பிடுக.

   i) ______________________________

   ii) ______________________________

2. பிறரின் பண்பாட்டை மதிக்கும்போது ஏற்படும் மனவுணர்வுகளைக் குறிப்பிடுக.

   i) ______________________________

   ii) ______________________________

3. நீங்கள் பிற சமுதாயத்தினருடைய உணர்வுகளுக்கு எப்படி மதிப்பளிப்பீர்கள் என்பதை எழுதுக.

   i) ______________________________

   ii) ______________________________

ஆ) பிறரின் பண்பாட்டை மதிப்பதை வலியுறுத்தும் வகையில் சுவரொட்டி ஒன்றை வரைக.



**திருக்குறள்** | **அதிகாரம் 14: ஒழுக்க முடைமை**

**உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்**
**கல்லார் அறிவிலர் தார் (குறள் 140)**

உலகத்தவரோடு பொருந்தி ஒழுகும் தன்மையை அறியாதவர், பல நூல்களைக் கற்றிருந்தாலும் அறிவில்லாதவரே ஆவர்.

6.3
6.4
6.5

ஆசிரியர் குறிப்பு

- எல்லா இனத்தவரின் பண்பாட்டை மதிக்கும் நற்சிந்தனையை விதைக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

**வி.வ.கூ.:** நன்னெறி **உ.சி.தி:** படைத்தல் **21ஆம் நூ.தி:** தொடர்பு

# தொகுதி 7 அன்புடைமை

## பாடம் 1 அனைவரையும் நேசிப்போம்







**செல்வி சுகுணா** : ஐயா, ஏழ்மை நிலையில் கல்வியைத் தொடர இயலாமல் இருக்கும் மாணவர்களைத் தத்தெடுத்து அவர்களின் கல்வி வளர்ச்சிக்கு உதவி வருவதாக அறிந்தோம். மிக்க நன்றி ஐயா.

**திரு. கணபதி** : உண்மைதான் சுகுணா. பொருளாதாரச் சிரமத்தினால் அவதியுறும் குடும்பத்தினரின் குழந்தைகளுக்கு உதவி வருகிறோம். எங்களின் முயற்சிக்கு நம் பள்ளியின் முன்னாள் மாணவர்கள் பலரும் உதவி வருவது குறிப்பிடத்தக்கது ஆகும்.

**செல்வி சுகுணா** : ஐயா, தங்களின் ‘உதவும் கரங்கள்’ திட்டம் பற்றி விளக்க இயலுமா?

**திரு. கணபதி** : நிச்சயமாக சுகுணா. தாராளமாக விவரிக்கின்றேன்.

**செல்வி சுகுணா** : நீங்கள் குடியிருக்கும் வாழிடத்தைச் சேர்ந்தவர்களுக்கு உதவி வருவதை நினைத்தால் மிகவும் பெருமையாக உள்ளது. இத்திட்டத்தில் வெற்றி பெற பல சவால்களைக் கடந்து வந்திருப்பீர்களே?

**திரு. கணபதி** : உண்மைதான். நமது அடிப்படை வாழ்க்கையே சிக்கலாக இருக்கும்போது வாழ்க்கையில் வெறுப்பு, ஏமாற்றம், கோபம் இருப்பது இயல்புதானே. அச்சிறுவர்களிடத்தும் அதைத்தான் கண்டோம். அன்பு மட்டுமே எங்களின் ஆயுதம். அன்பினால் மட்டுமே இந்தத் திட்டத்தை எங்களால் செயல்படுத்த முடிந்தது.

**செல்வி சுகுணா** : மிகவும் அழகாகச் சொன்னீர்கள் ஐயா. உங்களின் திட்டம் மேலும் வெற்றி பெற எங்களின் வாழ்த்துகள். இறுதியாக, மாணவர்களாகிய எங்களுக்கு ஏதும் சொல்ல விரும்புகிறீர்களா?

**திரு. கணபதி** : நாம் சமுதாயத்தின் மீது காட்டும் அன்பும் அக்கறையுமே சமுதாயம் வளம் பெற உதவும் என்ற சிந்தனையை விதைத்தாலே, ஒவ்வொரு சமுதாயமும் மேம்பாடடையும் என்பது திண்ணம்.

**செல்வி சுகுணா** : சிரமம் பாராமல் பேட்டி வழங்கியதற்கு மிக்க நன்றி ஐயா.

**நடவடிக்கை**

1. திரு. கணபதி அவர்களின் சேவையைப் பற்றி உங்கள் கருத்து என்ன?
2. உங்கள் வாழிடச் சமுதாயத்தினருக்குக் கிடைக்கப் பெறும் உதவிகளைப் பற்றி வட்ட மேசை நடவடிக்கையின் மூலம் கலந்துரையாடுக.
3. மேற்கண்ட நேர்காணலைப் பாகமேற்று நடித்திடுக.



7.1

**ஆசிரியர் குறிப்பு**

• மாணவர்கள் சமுதாயத்தின் மீது அன்பு செலுத்தும் நடவடிக்கைகளை அடையாளங் காணச் செய்தல்.

**வி.வ.கூ:** நன்னெறி **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூ.தி:** சமூகம்

கருத்துப் படிவம்

# பாடம் 2 நேசித்துப் பார்

கம்போங் பாடாங் புதுக் கிராமத்தில் ஒவ்வொரு மாதமும் அன்பை வெளிப்படுத்தும் வகையில் ஏதேனும் நிகழ்ச்சிகளை நடத்துவர். இம்முறை அப்பகுதியில் இருக்கும் அன்பு இல்லத்தில் அந்நிகழ்ச்சியை நடத்தத் திட்டமிட்டனர்.




**செயல் திட்டங்கள்**

- அன்பு இல்லத்தைச் சுற்றிலும் துப்புரவுப் பணி மேற்கொள்ளுதல்
- மதிய உணவைத் தயாரித்து அவர்களுடன் உண்ணுதல்
- கேளிக்கை விளையாட்டுகள் நடத்துதல்
- ஒவ்வொரு மாதமும் அக்குழந்தைகளின் பிறந்தநாளைக் கொண்டாடுதல்

**நடவடிக்கை**

1. சமுதாயத்தில் அன்பை வளர்க்கும் வழிகளையொட்டிய கருத்துகளை மனவோட்டவரையில் எழுதுக.

7.2

ஆசிரியர் குறிப்பு

- சமுதாய உறுப்பினர்களிடையே அன்பை வெளிப்படுத்தும் வழிகளை வட்ட வரைபடத்தில் எழுதி விவரித்தல்.

வி.வ.கூ : தலைமைத்துவம் உ.சி.தி : மதிப்பிடுதல் 21ஆம் நூ.தி : நன்னெறி

# பாடம் 3 அன்பாகப் பழகு







**நடவடிக்கை**

1. மாற்றுத் திறனாளிகளுக்கு உதவுவதன் வழி ஏற்படும் மனவுணர்வுகளைப் பட்டியலிடுக.
2. வாழிடச் சமுதாயத்தினரிடையே அன்பை வெளிப்படுத்தும் பண்பை வளர்த்துக் கொள்வது அவசியம். ஏன்?

7.3

**ஆசிரியர் குறிப்பு**

- சமுதாய உறுப்பினர்களிடம் அன்பாக நடந்து கொள்வதன் நன்மைகளைத் தொகுத்துக் கூறுதல்.

வி.வ.கூ : நன்னெறி உ.சி.தி : படைத்தல் 21ஆம் நூ.தி : தொடர்பு

கருத்துப் படிவம்

# பாடம் 4 சிறுவனைக் கண்டு பிடி

குடியிருப்புப் பகுதியில் காணாமல்போன ஒரு சிறுவனை நால்வர் தேடுகின்றனர். இவ்விளையாட்டில் காணப்படும் அன்புடைமையை வெளிப்படுத்தும் சூழல்களை அடையாளங் கண்டு கலந்துரையாடுக.






**விளையாட்டு விதிமுறைகள் :**

1. வேண்டிய பொருள்கள்
   - தாயக்கட்டை
   - நகர்த்தும் கட்டை
2. நான்கு பேர் இவ்விளையாட்டில் பங்கேற்கலாம்.
3. தாயைக்கட்டையை உருட்டி, கிடைக்கும் எண்ணை அறிந்திடுக.
4. தாயக்கட்டையில் கிடைத்த எண்ணிற்கேற்ப உங்கள் கட்டையை நகர்த்திடுக. உங்களது நகர்த்தும் கட்டத்தில் இருக்கும் எண்ணில் கட்டளைகள் கொடுக்கப்பட்டிருந்தால் அதனைப் பின்பற்றுக.
5. விளையாட்டுப் பயணத்தை முதலில் முடித்துச் சிறுவனைக் கண்டு பிடிப்பவரே வெற்றியாளராகக் கருதப்படுவார்.

**நடவடிக்கை**

அனைவரின் சுபிட்சத்திற்காக அன்பை வெளிப்படுத்தும் அவசியத்தைப் பற்றிக் கலந்துரையாடுக.

7.4

**ஆசிரியர் குறிப்பு**

• காணாமல் போன சிறுவனைத் தேடும் முயற்சியில் மாணவர்கள் அடைந்த மனவுணர்வுகளைத் தொகுத்து எழுத வழிகாட்டுதல்.

கருத்துப் படிவம்

# பாடம் 5 அன்பே தெய்வம்




**சிந்தனைத் திறன்**

திரு. குமார் தன் வீட்டுக்கு அருகில் இருக்கும் குழந்தைகள் காப்பகத்தில் உள்ள ஒரு சிறுவனுக்குக் கல்விப் பயில நிதி உதவி செய்கிறார். அவரின் செயலைப்பற்றி உனது கருத்து என்ன?

**நடவடிக்கை**

குடியிருப்புப் பகுதியின் தலைவராக இருந்தால் அன்பை வெளிப்படுத்தும் வகையில் நீங்கள் எத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்வீர்கள்? விவரித்திடுக.

7.5 **ஆசிரியர் குறிப்பு**

- சமுதாய உறுப்பினர்களிடையே அன்பு செலுத்தும் பண்பை அமல்படுத்துதலை ஊக்குவித்தல்.

**வி.வ.கூ:** நன்னெறி **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூ.தி:** தொடர்பு




அ. குடியிருப்புப் பகுதி மக்களிடம் அன்பு செலுத்துவதன் விளைவைப் பன்செயற்பாங்கு வரைபடத்தில் எழுதுக.

**சமுதாயத்தினர் மீது அன்பு செலுத்துவதன் விளைவுகள்.**

- இரத்ததானம் செய்தல்.
- ஏழை மாணவர்களுக்குப் பள்ளிச் சீருடை வழங்குதல்.
- மாற்றுத் திறனாளிகளுக்குச் சிறுதொழில் திறன் வழங்குதல்.
- சிறுவர் இல்லங்களுக்கு நிதி திரட்டுதல்.

ஆ. வாழிடச் சமுதாயத்தின் மீது அன்பு செலுத்தும் வழிமுறைகளைக் குழுவில் கலந்துரையாடி பின்வருமாறு பட்டியலிடுக.

| சிந்தனை | செயல் | பேச்சு |
|---|---|---|
| 1. நன்மனம் கொண்டிருத்தல் | மரியாதையாகப் பேசுதல் | பெரியோரை மதித்தல் |
| 2. ____ | ____ | ____ |



7.3 **ஆசிரியர் குறிப்பு**

- அன்பு செலுத்துவதை வலியுறுத்தும் ஏனைய நடவடிக்கைகளைத் திட்டமிடுதல்.

**வி.வ.கூ:** ஆக்கமும் புத்தாக்கமும் **உ.சி.தி:** மதிப்பிடுதல் **21ஆம் நூ.தி:** நன்னெறி

**குறைநீக்கல்**

**பின்வரும் செயல் திட்டத்தை நிறைவு செய்க.**

தேவி, முஸ்தாப்பா, மெய் லிங் ஆகிய மூவரும் தாமான் பூங்கா ராயா குடியிருப்போர் கழக அன்புடைமை விழாவில் கலந்து கொள்ள எண்ணினர். அதற்காக அவர்கள் பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.







**படவில்லை 1**

தலைப்பு : ______

பெயர் : ______

வசிப்பிடம் : ______

**படவில்லை 2**

அன்புடைமை வழிமுறைகள்

1. மக்களின் சுபிட்சத்திற்கு முக்கியம்
2. ______
3. ______

**படவில்லை 3**

அன்புடைமை நடவடிக்கைகள்.

1. முதியோர்களுக்காக நேரத்தை ஒதுக்குதல்
2. ______
3. ______

**படவில்லை 4**

அன்புடைமை பேணும் முறைகள்

1. ______
2. ______
3. ______

7.1
7.2

ஆசிரியர் குறிப்பு

- அன்புடைமை நோக்கங்களை எடுத்துக் காட்டுகளுடன் கூறுதல்.

வி.வ.கூ : நன்னெறி    உ.சி.தி : படைத்தல்    21ஆம் நூ.தி : சமூகம்




**அ. நிறைவு செய்க.**

**அனைவரின் வளப்பத்திற்காக சமுதாயத்தின்பால் அன்பு செலுத்தும் பண்பு**

- அன்பு செலுத்துவதன் முக்கியத்துவம் → ______ / ______
- அன்பு செலுத்தும்போது ஏற்படும் மனவுணர்வு → ______ / ______
- அன்பு செலுத்தும் வழிகள் → ______ / ______



**ஆ. சமுதாயத்தில் அன்பை வளர்க்கும் வழிகளைக் குறிக்கும் கூற்றுகளுக்குச் சரி (✔) எனக் குறியிடுக.**

1. வாழிடச் சமுதாயத்தில் நோய் வாய்ப்பட்டிருப்பவர்களை நேரில் சந்தித்து நலம் விசாரிக்க வேண்டும்.
2. சமுதாயத்தில் பிறருடன் நன்னடத்தையையும் ஒழுக்கத்தையும் பேணக் கூடாது.
3. நம்மைவிட வயதில் மூத்தவர்களிடம் மரியாதையாக நடந்து கொள்ள வேண்டும்.
4. சமுதாயத்தில் இருக்கும் மாற்றுத் திறனாளிகள் சாலையைக் கடக்க உதவி செய்ய வேண்டும்.
5. சமுதாயத்தின்பால் அக்கறையுள்ளதை உணர்த்தும் வகையில் நம் பணத்தில் சிறுதொகையை நன்கொடையாக வழங்கலாம்.



7.2 **ஆசிரியர் குறிப்பு**

- சமுதாயத்தில் அன்பை வளர்க்கும் வழிகளைக் கூறுதல்.

வி.வ.கூ : நன்னெறி    உ.சி : பகுத்தாய்தல்    21ஆம் நூ.தி : சமூகம்




**கூற்றுக்கு ஏற்ற சரியான விடைகளை எழுதுக.**



1. படத்தின் துணையுடன் அனைவரின் வளப்பத்திற்காக சமுதாயத்தின்பால் அன்பு செலுத்தும் பண்பைப் பட்டியலிடுக.
   i. ____________
   ii. ____________
   iii. ____________



2. எம்மாதிரியான சூழல்களில் சமுதாயத்தின்பால் அன்பு செலுத்த இயலும் என்பதை எழுதுக.
   i. ____________
   ii. ____________
   iii. ____________






3. சமுதாயத்தின்பால் அன்பு செலுத்துவதால் ஏற்படும் நன்மைகளை எழுதுக.
   i. ____________
   ii. ____________
   iii. ____________

4. இவர்களிடத்தில் நாம் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும்?
   i. ____________
   ii. ____________
   iii. ____________





7.5

**ஆசிரியர் குறிப்பு**

- சமுதாயத்தின்பால் அன்பு செலுத்துவதன் முக்கியத்துவத்தையும் ஏற்படும் மனவுணர்வையும் வெளிப்படுத்துதல்.

# தொகுதி 8 நடுவுநிலைமை

## பாடம் 1 நல்ல தீர்ப்பு

கருத்துப் படிவம்

தாமான் இந்தானில் மருதப்பன், முத்துசாமி என்ற நண்பர்கள் வசித்து வந்தனர். மருதப்பன் இரும்புப் பட்டறை ஒன்றை வைத்திருந்தார். வியாபாரம் நட்டம் அடையவே தம் இரும்புப் பட்டறையை மூடிவிட்டு வெளியூருக்குச் சென்றார். அவர் திரும்பி வரும்வரை தம் இரும்புப் பட்டறையைத் முத்துசாமியைப் பார்த்துக் கொள்ளச் சொன்னார்.

ஆனால், முத்துசாமியோ அக்கடையிலிருந்த இரும்புகளை விற்றுப் பணத்தை எடுத்துக் கொண்டார். சில ஆண்டுகள் கழித்து மீண்டும் தம் சொந்த ஊர் திரும்பிய மருதப்பன் இரும்புப் பட்டறைக்குச் சென்றார். அங்கிருந்த இரும்புகள் காணாமல் போய் இருப்பதைக் கண்டு முத்துசாமியிடம் கேட்டார். அதற்கு அவரோ,



சில நாள்கள் கழித்து முத்துசாமி மருதப்பனிடம் “நான் அவசரமாக வெளியூர் செல்ல வேண்டியுள்ளது. என் பையனைப் பார்த்துக் கொள்,” என்றார். ஓரிரு நாளில் வீடு திரும்பிய முத்துசாமி தம் பையனை அழைத்துச் செல்ல வந்தார். ஆனால், மருதப்பன் கவலை தோய்ந்த முகத்தோடு,




ஆத்திரமடைந்த முத்துசாமி குடியிருப்புப் பகுதித் தலைவரிடம் முறையிட்டார். “என்னதான் நீங்கள் இருவரும் என் உற்றத் தோழர்களாக இருந்தாலும் நான் நன்கு ஆராய்ந்து பார்த்த பிறகே தீர்ப்புச் சொல்ல முடியும்,” என்றார்.

இரண்டு நாள் கழித்து மருதப்பனையும் முத்துசாமியையும் குடியிருப்புப் பகுதித் தலைவர் அழைத்தார். “எப்படி எலிகள் மருதப்பனின் இரும்புகளைத் தின்னும் சாத்தியம் உண்டோ, அதே போல் உமது குழந்தையையும் புறா தூக்கிச் செல்ல சாத்தியம் உண்டு,” என்றார்.

அப்பொழுதுதான் தம் தவற்றை உணர்ந்த முத்துசாமி, மருதப்பனிடம் மன்னிப்புக் கேட்டுப் பணத்தைக் கொடுத்தார். மருதப்பனும் முத்துசாமியைத் திருத்தவே தாம் அவ்வாறு செய்ததாகக் கூறினார். தலைவரின் நடுவுநிலைமையான தீர்ப்பை அனைவரும் பாராட்டினர்.

**நடவடிக்கை**

1. மருதப்பனின் செயல்களைப் பற்றி உனது கருத்து என்ன?
2. குடியிருப்புப் பகுதித் தலைவரின் தீர்ப்புச் சரியானதா? விவாதித்திடுக.

**வலைத்தளக் காட்சி**

8.1

**ஆசிரியர் குறிப்பு**

- மாணவர்கள் சமுதாய வாழ்க்கையில் நடுவுநிலைமையோடு நடந்து கொள்ளும் உதாரணங்களை நடித்துக் காட்டுதல்.

**வி.வ.கூ:** நன்னெறி **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூ.தி:** சமூகம்

கருத்துப் படிவம்

# பாடம் 2 யார் மடிக்கணினி

வளவன் ஒவ்வொரு வார இறுதியிலும் பொது நூலகத்திற்குச் செல்வான். அன்றும் அவ்வாறு சென்று திரும்பும்போது தனது மடிக்கணினி காணாதது கண்டு அதிர்ச்சியடைகிறான். அங்கு வந்த மற்றொரு மாணவர் அவனது மடிக்கணினியை எடுத்துச் செல்வதைக் கவனிக்கிறான். அவனை அணுகிக் கேட்கும்போது அவன் அம்மடிக்கணினியைக் காண்பிக்க மறுக்கிறான்.




**நடவடிக்கை**

1. இராமு, தன் நண்பன் முருகனுக்கும் வளவனுக்கும் இடையிலான இப்பிரச்சினையில் எப்படி நடுவுநிலைமையுடன் செயல்பட வேண்டும்? கூறுக.

8.2

**ஆசிரியர் குறிப்பு**

• சமுதாய வாழ்க்கையில் நடுவுநிலைமையோடு நடந்து கொள்வதன் அவசியத்தை விளக்குதல்.

**வி.வ.கூ** : நன்னெறி

**வி.வ.கூ** : பகுத்தாய்தல் **21ஆம் நூ.தி:** தொடர்பு

கலந்துரையாடுக.




## இங்கு நடுவுநிலைமையுடன் செயல்படும் முறைகள்.

- கணினியைத் திறந்து பார்ப்பேன்.
- யார் தொடர்பான தகவல்கள் உள்ளே இருக்கிறது என்பதை ஆராய்வேன்.
- இருவரிடமும் மடிக்கணினி விபரங்களைக் கேட்பேன்.

### சிந்தனைத் திறன்

இராமு தன் நண்பன் முருகனுக்குச் சாதகமாகச் செயல்பட்டால் என்ன நிகழும்?

இங்கு உண்மையை நிலைநாட்ட அடுத்து எடுக்க வேண்டிய நடவடிக்கை என்ன?



### திருக்குறள் — அதிகாரம் 12: நடுவுநிலைமை

**நன்றே தரினும் நடுவிகந்தாம் ஆக்கத்தை**
**அன்றே ஒழிய விடல் (குறள் 113)**

தீமை பயக்காமல் நன்மையே தருவதானாலும் நடுவுநிலைமை தவறி உண்டாகும் ஆக்கத்தை அப்போது கைவிட வேண்டும்.

கருத்துப் படிவம்

# பாடம் 3 நடுவுநிலைமையான செயல்

கந்தன், கிம்லான், அஜ்மி ஆகியோர் சமூகநல உதவி தொடர்பான சுற்றறிக்கைகளைத் தங்கள் வாழிட மக்களுக்கு விநியோகம் செய்யப் பணிக்கப்பட்டிருந்தனர்.




**நடவடிக்கை**

1. இவ்வுரையாடலில் வெளிப்படும் நடுவுநிலைமைக் கூறுகள் யாவை?
2. நாம் ஏன் நடுவுநிலைமையாகச் செயல்பட வேண்டும்? குறிப்பிடுக.

8.2

**ஆசிரியர் குறிப்பு**

- மாணவர்கள் சமுதாயத்தோடு இயைந்த வாழ்வில் நடுவுநிலைமைப் பண்பின் முக்கியத்துவத்தைச் சிறு குறிப்பாக எழுதச் செய்தல்.

**வி.வ.கூ** : நன்னெறி **வி.வ.கூ** : பகுத்தாய்தல் **21ஆம் நூ.தி:** ஆய்வுச் சிந்தனை

கருத்துப் படிவம்

# பாடம் 4 பட்டம் விடுவோம்




கம்போங் முகிபாவில் பட்டம் செய்து விடும் போட்டி நடைபெற்றது. அப்போட்டியில் திரு. அபிராமின் மகனும் கலந்து கொண்டான். அப்போட்டிக்கு அவ்வாழிடச் சமுதாயத்தினர் அனைவரும் ஆதரவு வழங்கினர்.

போட்டியன்று பட்டம் செய்யும் போட்டிக்குத் திரு. அபிராம்தான் நீதிபதி. தன் மகன் அல்லும் பகலும் போட்டிக்குத் தயாரானதை நன்கு அறிந்திருந்தார். இருப்பினும், தன் மகனைக் காட்டிலும் திரு. ரிச்சர்ட்டின் மகன் திறமையாகப் பட்டத்தைச் செய்திருந்தான். திரு. அபிராம் அச்சிறுவனுக்கே பரிசையும் வழங்கினார். அவரின் நடுவுநிலைமையான தீர்ப்பை அனைவரும் பாராட்டினர். திரு. அபிராமின் மகன் தந்தையை நினைத்துப் பெருமிதம் கொண்டான்.

**நடவடிக்கை**

1. பட்டத்தைச் செய்து அஃதில் உங்களின் மனவுணர்வுகளை எழுதிடுக.
2. பட்டத்தைப் பறக்க விட்டு விளையாடுக.
3. மேற்கண்ட சூழலை நடித்துக் காட்டுக.

8.4

**ஆசிரியர் குறிப்பு**

- சமுதாய வாழ்க்கையில் நடுவுநிலைமையான முடிவுகளால் அடையும் மனவுணர்வுகளை மாணவர்கள் கூறுதல்.

**வி.வ.கூ:** ஆக்கமும் புத்தாக்கமும் **உ.சி.தி:** ஆக்கம் **21ஆம் நூ.தி:** படைத்தல்

கருத்துப் படிவம்

# பாடம் 5 பகிர்ந்தளிப்போம்

**இன்ப உலா**
**குடியிருப்போர் தினக் கொண்டாட்டம்.**

முல்லை அடுக்குமாடி குடியிருப்போர் கழகத்தினர் எதிர்வரும் பள்ளி விடுமுறையில் குடியிருப்போர் தினக் கொண்டாட்டத்தை நடத்துவதற்குத் திட்டமிட்டனர். இந்நிகழ்ச்சிக்கான பணிக்குழுத் தலைவராக நீ நியமிக்கப்படுகிறாய். அதற்கான பணிகளை மேற்கொள்ள வேலைகளைப் பகிர்ந்தளிக்கிறாய்.



குமார்
பொது உறவு முறையில் சிறந்தவர்



லிம்
சமையல் கலையில் ஆர்வம்



சுகந்தி கணினி வடிவமைப்பாளர்

**பணிக்குழு**

- அனுமதி விண்ணப்பம்
- உணவு
- நிதி திரட்டுதல்
- விளம்பரம்
- அலங்கரிப்பு



வில்லியம்
ஓவியத்தில் ஆர்வம்



அப்துல்
கணக்காய்வாளர்



அமினா
கலைத்துறையில் ஆர்வம் மிகுந்தவர்

**நடவடிக்கை**

1. திறமைக்கு ஏற்பப் பணிகளைப் பகிர்ந்து வழங்குவதன் நன்மை என்ன?

8.5 **ஆசிரியர் குறிப்பு**

- சமுதாய வாழ்வில் நடுவுநிலைமையோடு செயல்படுத்தலை வலியுறுத்தல்.

**வி.வ.கூ:** நன்னெறி **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூ.தி:** தொடர்பு




**பேச்சுப் போட்டிக்குத் தயாராகுக. கருத்துகளைத் திரட்டுக.**

அவைத் தலைவர் அவர்களே,
நீதி வழுவா நீதிபதிகளே,
மாணவ நண்பர்களே, . . . . .




**கருத்து 1**

சமுதாயத்தோடு இயைந்த வாழ்வில் நடுவுநிலைமைச் செயல்களைப் பட்டியலிடுக.

i. ______
ii ______
iii. ______

**கருத்து 2**

சமுதாயத்தோடு இயைந்த வாழ்வில் நடுவுநிலைமைப் பண்பின் முக்கியத்துவத்தை எழுதுக.

i. ______
ii ______
iii. ______

**கருத்து 3**

சமுதாயத்தோடு இயைந்த வாழ்வில் நடுவுநிலைமைப் பண்பினைப் பொருட்படுத்தாததால் ஏற்படும் விளைவுகளை எழுதுக.

i. ______
ii ______
iii. ______

**கருத்து 4**

சமுதாயத்தோடு இயைந்த வாழ்வில் நடுவுநிலைமையைப் பேணுவதில் ஏற்படும் மனவுணர்வுகளை எழுதுக.

i. ______
ii ______
iii. ______

**கருத்து 5**

சமுதாயத்தோடு இயைந்த வாழ்வில் நடுவுநிலைமையை உய்த்துணர்ந்து அன்றாட வாழ்வில் செயல்படுத்தும் வழிமுறைகளைப் பட்டியலிடுக.

i. ______
ii ______
iii. ______



8.1
8.2
8,3

**ஆசிரியர் குறிப்பு**

- நடுவுநிலைமையோடு செயல்பட வேண்டிய சமுதாய நடவடிக்கைகளை அடையாளம் கண்டு கூறுதல்.

**வி.வ.கூ:** நன்னெறி **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூ.தி:** சமூகம்




நடுவுநிலைமையை விளக்கும் சூழலைத் தெளிவாக எழுதுக.



சமமாக

சூழல்



பேதமின்றி

சூழல்



பாரபட்சமின்றி

சூழல்



நடுவுநிலைமையுடன்

சூழல்



ஏற்றத்தாழ்வின்றி

சூழல்

| | |
|---|---|
| 8.1<br>8.2<br>8.3 | ஆசிரியர் குறிப்பு • நடுவுநிலைமையை அன்றாட சமுதாய வாழ்வில் கடைப்பிடித்தலைக் கூறுதல். |

வி.வ.கூ : நன்னெறி  உ.சி.தி : மதிப்பிடுதல்  21ஆம் நூ.தி : தொடர்பு

திடப்படுத்துதல்

**உங்கள் நிலைப்பாட்டை ஏற்ற சான்றுகளுடன் விளக்குக.**



அலோர் ரியாவில் விருந்து ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இவ்வாழிடத் தலைவராக நீங்கள் இருந்தால் பணிக்குழு அமைப்பதில் நடுவுநிலைமையாக எவ்வாறு நடந்து கொள்வீர்கள்?

1. ______
2. ______

குடும்பத் தினத்தை முன்னிட்டு தாமான் ரியா மக்கள் சமையல் போட்டிக்கு ஏற்பாடு செய்திருந்தனர். அப்போட்டியின் தலைமை நீதிபதியாக திருமதி சல்மா வந்திருந்தார். அதே நேரத்தில் அவரின் மகளும் அப்போட்டியில் பங்கெடுத்தார். அவர் எவ்வாறு நடுவு நிலைமையாகச் செயல்பட வேண்டும்?

1. ______
2. ______






திரு. குமாரவேலுவின் மகன் தயாளானால் தாமான் ரின்சிங் இளைஞர்களுக்கும் தாமான் மக்மோர் இளைஞர்களுக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டது. கிராமத் தலைவரான திரு. குமாரவேல் தன் மகனின் தவற்றை மறைக்க முயல்வது சரியா?

1. ______
2. ______

வெள்ளப் பேரிடன்போது கிராமப் பாதுகாப்புச் செயற்குழுத் தலைவர் எனும் வகையில் தம்மிடம் வழங்கப்பட்ட உணவுப் பொட்டலங்களைத் திரு. யூசோப் எவ்வகையில் பகிர்ந்தளிக்க வேண்டும்?

1. ______
2. ______



8.2
8.3
8.4

ஆசிரியர் குறிப்பு

• நடுவுநிலைமையான முடிவுகளுக்கான சான்றுகளை மாணவர்கள் கூறுதல்.

**வி.வ.கூ** : நன்னெறி　　**உ.சி.தி** : பகுத்தாய்தல்　　**21ஆம் நூ.தி** : தொடர்பு

**வளப்படுத்துதல்**

**சமுதாய வாழ்க்கையில் எவ்வாறு நடுவுநிலைமையைக் கடைப்பிடிப்பீர்கள் என எழுதுக.**

விஷப்பெட்டி விளையாட்டில் எப்படி நடுவுநிலைமையைக் கடைப்பிடிப்பீர்கள்?

1. ____________
2. ____________
3. ____________

சமுதாயத்தோடு இயைந்த வாழ்வில் நடுவுநிலைமையின் அவசியத்தை வலியுறுத்தும் கவிதையை எழுதுக.

____________
____________
____________



சமுதாயத்தோடு இயைந்த வாழ்வில் நடுவுநிலைமைப் பண்பைப் பொருட்படுத்தாததால் ஏற்படும் விளைவுகளைச் சிறு கட்டுரையாக எழுதுதல்.

____________
____________
____________

சமுதாயத்தோடு இயைந்த வாழ்வில் நடுவுநிலைமை அனுபவங்களைக் குறிப்பு வடிவில் எழுதுக.

1. ____________
2. ____________
3. ____________

**திருக்குறள்** — **அதிகாரம் 12: நடுவுநிலைமை**



**சமன்செய்து சீர்தூக்குங் கோல்போல் அமைந்தொருபால்**
**கோடாமை சான்றோர்க் கணி (குறள் 118)**

முன்னே தான் சமமாக இருந்து, பின்பு பொருளைச் சீர்தூக்கும் துலாக்கோல் போல் அமைத்து, ஒரு பக்கமாகச் சாயாமல் நடுவுநிலைமை போற்றுவது சான்றோர்க்கு அழகாகும்.

8.1 **ஆசிரியர் குறிப்பு**

- சமுதாய வாழ்க்கையில் நடுவுநிலைமையோடு நடந்து கொள்ள வேண்டிய சூழல்களை அறிந்து அதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துதல்.

**வி.வ.கூ** : நன்னெறி **உ.சி.தி** : பகுத்தாய்தல் **21ஆம் நூ.தி** : சமூகம்

# தொகுதி 9 துணிவு

## பாடம் 1 தீர்வு காண வேண்டும்

கருத்துப் படிவம்




வலைத்தளக் காட்சி

**நடவடிக்கை**

1. தொலைபேசி உரையாடலைக் கலந்துரையாடுக.
2. காவல் துறையினரின் நடவடிக்கையை ஊகித்துக் கூறுக.
3. உங்கள் குடியிருப்புப் பகுதியில் போதைப் பித்தர்களின் நடமாட்டத்தை உணருகிறீர்கள். இதை எப்படிக் காவல் துறைக்குத் தெரிவிப்பீர்கள்? உரையாடலை எழுதி நடித்துக் காட்டுக.

9.1 **ஆசிரியர் குறிப்பு**

• சமுதாய வாழ்க்கையில் துணிச்சலை வெளிப்படுத்தும் வேறு சில உதாரணங்களை 'இரு பெட்டிப் புகுமுகம் (Two Box Induction) நடவடிக்கையின் மூலம் விளக்குதல்.

**வி.வ.கூ:** நன்னெறி **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூ.தி:** தொடர்பு

கருத்துப் படிவம்

# பாடம் 2 முன்னோக்கிச் செல்வோம்



கம்போங் முர்னி நகரத்திலிருந்து இருபத்தைந்து கிலோ மீட்டர் தொலைவில் உள்ள கிராமம் ஆகும். இக்கிராமத்தில் பெரும்பாலோர் காய்கறிகள் விவசாயமே செய்து வருகின்றனர். தங்களின் விவசாயப் பொருள்களுக்கு நியாயமான விலை கிடைக்க வேண்டி இடைத் தரகர்கள் இன்றி நேரிடையாகப் பயனீட்டாளர்களுக்கு விற்க முடிவெடுத்தனர்.



தங்களின் கிராமம் கூட்டரசு சாலையில் அமைந்திருந்ததால், சாலையிலிருந்து பாதுகாப்பான தூரத்தில் தங்கள் காய்கறிகளைத் தாங்களே விற்பனை செய்ய முடிவெடுத்தனர்.

①

**திட்டம் : நேரடி விற்பனை**

இடம் : பிரதான சாலைக்கு அப்பால்
நாள் : எல்லா நாள்களிலும்
நேரம் : மாலை 4:00-7:00 வரை

②

**எதிர்நோக்கும் சவால்கள்**

1. அனுபவமின்மை
2. விலை நிர்ணயம்
3. விளம்பரம் குறைவு

தொடக்கத்தில் குறைவானவர்களே வந்தனர். இருப்பினும், நாளடைவில் சுற்றுவட்டாரத்தைச் சேர்ந்தவர்களும் வெளியூர்களிலிருந்து அவ்வழியில் பயணம் செய்வோரும் வரத் தொடங்கினர். வாகன நெரிசல் ஏற்படாத வண்ணம் தேவையான அளவு வாகன நிறுத்துமிடங்களையும் ஏற்பாடு செய்து கொடுத்தனர்.

கிராமச் செயற்குழுவினர் அவ்வப்போது ஒன்றுகூடி ஏற்படும் சிக்கல்களுக்குத் தீர்வு கண்டனர்.

④

**அன்புடன் செயல்படல்**

1. வாழிடத் தலைவரின் உறுதியான தலைமைத்துவம்
2. தரமான/தூய்மையான காய்கறிகளை விற்பனைக்கு வைத்தல்
3. ஊக்கத்தை வழங்குதல்.

⑤

**வெற்றி**

1. மக்களின் வருகை அதிகரித்தது.
2. நல்ல வருமானம் கிடைத்தது.
3. காய்கறி பயிரிடுதலில் ஈடுபட முடியாத குடும்ப உறுப்பினர்கள், விற்பனையில் ஈடுபட்டனர்.

**நடவடிக்கை**

அ) 1. வாழிட மக்கள் துணிவுடன் மேற்கொண்ட நடவடிக்கைகளைப் பட்டியலிடுக.
2. கம்போங் முர்னி கிராமத்தினரின் துணிவான நடவடிக்கைகளால் அவர்கள் அடைந்த நன்மைகளைக் குறிப்பிடுக.

| கல்வி | பொருளாதாரம் | வாழ்க்கை முறை |
|---|---|---|
| 1. ______<br>2. ______ | 1. ______<br>2. ______ | 1. ______<br>2. ______ |

ஆ) அண்மையில் தமிழர் திருநாளின்போது நீங்கள் மேற்கொண்ட குளிர்பான வியாபாரத்தில் நட்டம் ஏற்பட்டது.

| சிக்கல் | மதிப்பீடு | செயல்திட்டம் |
|---|---|---|
| தோல்வி | 1. ______<br>2. ______ | 1. ______<br>2. ______ |

9.2

**ஆசிரியர் குறிப்பு**

• சமுதாய வாழ்க்கையில் துணிச்சலுடன் செயல்படுகையில் எதிர்கொள்ளும் சவால்களை விளக்கிக் கூறுதல்.

**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூ.தி:** தொடர்பு

கருத்துப் படிவம்

# பாடம் 3 உறுதி வேண்டும்






மனதி லுறுதி வேண்டும்,
வாக்கினி லேயினிமை வேண்டும்;
நினைவு நல்லது வேண்டும்,
நெருங்கின பொருள் கைப்பட வேண்டும்;
கனவு மெய்ப்பட வேண்டும்,
கைவசமாவது விரைவில் வேண்டும்;
தனமும் இன்பமும் வேண்டும்,
தரணியிலே பெருமை வேண்டும்.
கண் திறந்திட வேண்டும்,
காரியத்தி லுறுதி வேண்டும்.
பெண் விடுதலை வேண்டும்,
பெரிய கடவுள் காக்க வேண்டும்;
மண் பயனுற வேண்டும்,
வானகமிங்கு தென்பட வேண்டும்
உண்மை நின்றிட வேண்டும்
ஓம் ஓம் ஓம் ஓம்.

நன்றி,
மகாகவி பாரதியார்



**நடவடிக்கை**

1. மேற்கண்ட பாடலில் கவிஞர் வலியுறுத்தும் துணிவுகரமான செயல்கள் யாவை?
2. வாழிடச் சமுதாயத்தில் துணிவுடன் செயல்படுவதன் தேவைகள் யாவை? பட்டியலிடுக.

9.3 **ஆசிரியர் குறிப்பு**

- சமுதாய வாழ்க்கையில் துணிச்சலுடன் செயல்படுவதன் முக்கியத்துவத்தை மாணவர்கள் அனுமானித்துக் கூறச் செய்தல்.

**வி.வ.கூ.:** நன்னெறி **உ.சி.தி:** மதிப்பிடுதல் **21ஆம் நூ.தி:** தொடர்பு

கருத்துப் படிவம்

# பாடம் 4 துணிவே துணை



சம்ரி : முருகன், தினமும் பயிற்சி எடுக்கிறாயே, என்ன காரணம்?

முருகன் : மாற்றுத் திறனாளிகளுக்கான மேசைப் பந்துப் போட்டியில் கலந்து கொள்ள விரும்புகிறேன். எப்படியும் இம்முறையும் வெற்றி பெற எண்ணியுள்ளேன்.



மங்கை : ஏன் கவலையாக இருக்கிறாய்?

சுகுணா : ஆமாம், மங்கை. இம்முறையும் குடியிருப்பாளர்களுக்கிடையிலான பூப்பந்துப் போட்டியில் தோல்வி அடைந்திடுவோமா, எனப் பயமாக உள்ளது.



அப்துல் : என்ன கந்தா அவசரமாக எங்கோ சென்று கொண்டிருக்கிறாய்? நான் உங்களைப் பார்க்கத்தான் வந்தேன்.

கந்தன் : என் மகன் அடுத்த வாரம் நடைபெறவுள்ள வட்டார யோகாசனப் போட்டியில் கலந்து கொள்ளவுள்ளான். விபத்து ஒன்றில் கை முறிவு ஏற்பட்டதால் உடற்பயிற்சி மேற்கொள்ள மருத்துவமனைக்கு அழைத்துச் செல்கிறேன்.

**நடவடிக்கை**

1. வாழிடச் சமுதாயத்தினரின் நற்பெயரைக் காக்கச் செய்திட மேற்கொள்ள வேண்டிய வழிமுறைகளைக் கூறுக.
2. மேற்கண்ட சூழலில் சுகுணாவிற்குத் தாங்கள் கூறும் ஆலோசனை என்ன?

9.5 | ஆசிரியர் குறிப்பு

- சமுதாய வாழ்க்கையில் துணிவைப் பொருத்தமான இடங்களில் பயன்படுத்துதல்.

**வி.வ.கூ:** நன்னெறி **உ.சி.தி:** படைத்தல் **21ஆம் நூ.தி:** சமூகம்

கருத்துப் படிவம்

# பாடம் 5 குமரனின் துணிவு



**வளர்மதி, பூச்சோங், சிலாங்கூர்.**

கேள்வி : அண்ணா, நீரில் மூழ்கிய சிறுவனைக் காப்பாற்றியதற்கு வாழ்த்துகள். அச்சிறுவன் தங்களுக்குத் தெரிந்தவனா?

பதில் : நன்றி தங்கை. உயிருக்குப் போராடுபவரைக் காப்பாற்றுவதற்கு அவர் நமக்குத் தெரிந்தவராக இருக்க வேண்டிய அவசியம் இல்லை. நான் வாழும் சமுதாயத்தில் ஒருவரைக் காப்பாற்றியதற்குப் பெருமிதம் கொள்கிறேன்.





**லீலா, கெப்போங், சிலாங்கூர்.**

கேள்வி : உங்கள் உயிரையும் பொருட்படுத்தாமல் காப்பாற்றியதற்கு வாழ்த்துகள். உங்கள் மனநிலை எவ்வாறு இருக்கிறது?

பதில் : பாராட்டுக்கு நன்றி சகோதரி. நான் மிகவும் மனம் நெகிழ்கிறேன்.





**நளினி, கூலாய், ஜொகூர்.**

கேள்வி : அண்ணா, உங்களின் இத்தகைய இளகிய மனவுணர்வுக்கு யார் காரணம்?

பதில் : குறிப்பிட்டுச் சொல்ல இயலாது. சமுதாய வாழ்க்கையில் ஒருவருக்கொருவர் இணைந்தே வாழ வேண்டியுள்ளது. அவ்வகையில் என் சமுதாய உறுப்பினர் ஒருவரின் உயிரைக் காப்பாற்றியதற்கு இறைவனுக்கு நன்றி கூறிக் கொள்கிறேன். மனிதன் இறைவனின் உன்னத படைப்பு.



குமரனுடன் சில மணித்துளிகள்...

**நடவடிக்கை**

1. உங்கள் சமுதாய வாழ்க்கையில் மேற்கொண்ட துணிச்சலான நடவடிக்கைகளைக் குறிப்பிடுக.
2. துணிச்சலான செயலை மேற்கொள்ளும்போது ஏற்படும் மனவுணர்வுகளைக் கூறுக.

9.4
9.5

**ஆசிரியர் குறிப்பு**

- சமுதாய வாழ்க்கையில் துணிச்சலுடன் செயல்பட்டதால் ஏற்பட்ட மனவுணர்வைக் கூறச் செய்தல்.
- வாழிடச் சமுதாயத்தினரிடையே எத்தகைய சூழல்களில் துணிவுடன் செயல்படலாம் என்பதை விளக்குதல்.

**வி.வ.கூ:** நன்னெறி **உ.சி.தி:** மதிப்பிடுதல் **21ஆம் நூ.தி:** தொடர்பு

மதிப்பீடு

அ. துணிவான செயல்களுக்கு மட்டும் (✔) அடையாளமிடுக. சொல் உருவாக்குக.

| | | |
|---|---|---|
| 1. உண்மையை உரைக்கப் பயப்படமாட்டேன். | ◯ | வே |
| 2. உரக்கப் பேசினால் பயமாக இருக்கிறது. | ◯ | ப |
| 3. தவறுகளைத் தட்டிக் கேட்கத் தவறமாட்டேன். | ◯ | ணி |
| 4. மாலவன் திருடர்களின் நடவடிக்கையை மறைந்திருந்து பார்த்தான். | ◯ | து |
| 5. அனுமதி பெற்றுப் பறிக்க வேண்டும். | ◯ | வு |
| 6. மீதப் பணத்தைக் கேட்டு வாங்கினேன். | ◯ | து |
| 7. பகடிவதை செய்த சிறுவர்களைத் தடுத்தேன். | ◯ | ணை |

ஆ. பின்வரும் சூழலில் மேற்கொள்ள வேண்டிய துணிகர நடவடிக்கைகளைக் குறிப்பிடுக.






9.1
9.2
9.3
9.4

ஆசிரியர் குறிப்பு

- சமுதாய நலன்களுக்கு எதிரான செயல்களைத் தடுக்கும் துணிவினைப் பெற வலியுறுத்துதல்.

**வி.வ.கூ:** பயனீட்டாளர் கல்வி **உ.சி.தி:** அமலாக்குதல் **21ஆம் நூ.தி:** தொடர்பு




அ. கீழ்க்காணும் சூழலில் நீ எப்படித் துணிவைக் கடைப்பிடிக்கலாம்? கலந்துரையாடுக.



1. ஒரு பள்ளிச் சிறுவன் பகடிவதைக்கு உள்ளாகுவதைப் பார்க்கிறாய்.



2. மளிகைக் கடையில் பொருள்கள் வாங்கும் பொழுது அங்குக் காலாவதியான பொருள்கள் விற்கப்படுவதைக் காண்கிறாய்.



3. தொடர்வண்டி தண்டவாளத்திற்கு அருகில் சிலர் விளையாடிக் கொண்டிருப்பதைப் பார்க்கிறாய்.

ஆ. 1. மேற்கண்ட சூழல்களில் சமூக வாழ்க்கையில் துணிவாகச் செயல்பட எம்மாதிரியான சவால்களை எதிர்கொள்வீர்கள்?

2. சமுதாயத்தினரிடையே துணிவான செயல்களின் அவசியத்தை விவாதித்துக் கூறுக.

9.1 ஆசிரியர் குறிப்பு

• துணிவை உணர்த்தும் சம்பவங்களை இணையம், நாளிதழ்களிலிருந்து சேகரித்துத் திரட்டேடு தயாரித்திடுதல்.

**வி.வ.கூ:** பயனீட்டாளர் கல்வி **உ.சி.தி:** மதிப்பிடுதல் **21ஆம் நூ.தி:** தொடர்பு

திடப்படுத்துதல்

**கீழ்க்காணும் சூழலை வாசித்துக் கேள்விகளுக்குப் பதிலளித்திடுக.**

**சூழல் 1**

முகுந்தன் தனது வாழிடத்திலுள்ள பொது மண்டபத்தைச் சுற்றி நிறைய காலி டின்களும் நெகிழிப் புட்டிகளும் குவிந்திருப்பதைக் கண்டான். அவ்வாழிட மக்களின் பொறுப்பற்ற செயல் அவனுக்கு அருவருப்பை ஏற்படுத்துகின்றன.



- மேற்கண்ட சூழலில் நீங்கள் எவ்வாறு துணிவுடன் செயல்படுவீர்கள்?
- இவ்வேளையில் நீங்கள் எத்தகைய சவால்களை எதிர்நோக்குவீர்கள்?
- நீங்கள் துணிவுடன் செயல்படும் போது உங்களுக்கு ஏற்படும் மனவுணர்வுகளைச் சக மாணவர்களுடன் பகிர்க.

**சூழல் 2**

கபடிப் போட்டியின் இறுதிச் சுற்றுக்குத் தேர்வு பெற்ற தமிழினியன் குழுவினர், தாங்கள் எதிர்த்து விளையாடவிருக்கும் எதிரணியினரின் விளையாட்டாளர்கள் அனைவரும் தங்களைவிட உடல் ரீதியில் மிக வலிமையானவர்களாக இருந்ததைக் கண்டனர்.



- மேற்கண்ட சூழலில் உனது மனநிலை என்ன?
- இச்சூழலை எதிர்கொள்ள நீங்கள் எப்படிச் செயல்படுவீர்கள்?
- தமிழினியன் குழுவினர் பெற்றிருக்க வேண்டிய மனத்திடம் யாவை?

9.1
9.2
9.3
9.4
9.5

**ஆசிரியர் குறிப்பு**

- வாழிடச் சமுதாயத்தினருடன் துணிச்சலுடன் கருத்துகளை வெளியிடும் போது எதிர்நோக்கும் சவால்களைக் கலந்துரையாடுதல்.

**வி.வ.கூ:** பயனீட்டாளர் கல்வி **உ.சி.தி:** மதிப்பிடுதல் **21ஆம் நூ.தி:** சமூகம்

## வளப்படுத்துதல்

**சூழல்** : பொது நீச்சல் குளத்தைப் பயன்படுத்த வருபவர்களுள் சிலர் அங்குக் கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறைகளைப் பின்பற்றுவதில்லை. இதனைக் கவனித்த முகிலன், அவர்களிடம் நீச்சல் குளத்தில் பின்பற்ற வேண்டிய விதிமுறைகளைத் துணிவாக எடுத்துக் கூறினான்.

### பொது நீச்சல் குளத்தின் ஐந்து விதிமுறைகள்



**விதிமுறை 1**
நீச்சல் குளத்தில் சாப்பிடக் கூடாது.

**விதிமுறை 2**
நீச்சல் குளத்தில் ஓடி ஆடி விளையாடக் கூடாது.

**விதிமுறை 3**
__________

**விதிமுறை 4**
__________



**விதிமுறை 5**
__________

**நடவடிக்கை**

1. மேற்கண்ட சூழலை வகுப்பில் பாகமேற்று நடித்துக் காட்டுக.
2. முகிலனின் கருத்துக்கு அவர்கள் செவி சாய்க்கவில்லையெனில், அடுத்த கட்ட நடவடிக்கையாக என்ன செய்யலாம் என்பதைக் கூறுக.

9.4
9.5

**ஆசிரியர் குறிப்பு**

- சமுதாய வாழ்க்கையில் துணிவை அமல்படுத்துதலின் பலன்களை விவரித்தல்.

**வி.வ.கூ:** பயனீட்டாளர் கல்வி **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூ.தி:** தொடர்பு



# தொகுதி 10 நேர்மை

## பாடம் 1 நேர்மையின் பரிசு

கருத்துப் படிவம்

தாமான் அங்காசாபுரி வாழிட மக்கள் ஒவ்வோர் ஆண்டும் குடும்ப தினக் கொண்டாட்டத்தை மேற்கொள்வர். இந்த ஆண்டும் குடும்ப தினத்தைக் கொண்டாட வேண்டும் என்று எண்ணினர். அதற்கான பணிக்குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுப் பொறுப்புகளும் பகிர்ந்து கொடுக்கப்பட்டன. திரு. மோகன் குடும்பத்தினருக்குத் தமிழர் பாரம்பரிய உணவுகள் தயாரிக்கும் பொறுப்புக் கிடைத்தது. எனவே, உணவு தயாரிக்கத் தேவையான பொருள்களை வாங்கி வரச் சொல்லி பாரதியைக் கடைக்கு அனுப்பினார். அப்போது கடையில்.....



**திரு. நிசார்** : பாரதி, நலமாக இருக்கின்றாயா? உன்னைப் பார்த்து வெகு நாள்களாகி விட்டதே!

**பாரதி** : நலமாக உள்ளேன் ஐயா. நீங்கள் எப்படி இருக்கிறீர்கள்? எங்கே திருமதி நோரா அவர்கள்?

**திரு. நிசார்** : நான் நலமாக இருக்கிறேன். திருமதி நோரா பொருள்கள் எடுக்க வீட்டிற்குச் சென்றுள்ளார்.

**பாரதி** : நாளை நடைபெறவுள்ள குடும்ப தினக் கொண்டாட்டத்திற்குச் சமைப்பதற்கான சில பொருள்களை அம்மா வாங்கி வரச் சொன்னார்.

**திரு. நிசார்** : ஆமாம் பாரதி. எங்களுக்கும் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது. சரி, உனக்கு என்னென்ன பொருள்கள் வேண்டும்? பொருள் பட்டியல் கொண்டு வந்துள்ளாயா?

**பாரதி** : கொண்டு வந்துள்ளேன் ஐயா. இதோ அந்தப் பட்டியல்.

**திரு. நிசார்** : நீ சற்று நேரம் காத்திரு. நான் உனக்குத் தேவையான பொருள்களை எடுத்து வைக்கிறேன்.




(சில நிமிடங்களுக்குப் பின்னர் திரு. நிசார், பாரதி கேட்டிருந்த அனைத்துப் பொருள்களையும் கொண்டு வந்தார்.)

**திரு. நிசார்** : பாரதி, இதோ நீ கேட்ட பொருள்கள். ஒருமுறை சரி பார்த்துக் கொள்.

**பாரதி** : அனைத்துப் பொருள்களும் உள்ளன ஐயா. இவை அனைத்தும் எவ்வளவு?

**திரு, நிசார்** : இவை யாவும் ரிங்கிட் மலேசியா 15.90 ஆகும்.




(பாரதி அவரிடம் ரிங்கிட் மலேசியா 20.00யைக் கொடுத்துவிட்டு மீதப் பணத்தைப் பெற்றுக் கொண்டு கடையை விட்டு வெளியேற ஆயத்தமானாள். மீதப்பணம் அதிகம் இருப்பதை உணர்கிறாள்.)

**பாரதி** : ஐயா, மீதப்பணம் அதிகம் கொடுத்துள்ளீர்கள்?

**திரு. நிசார்** : ஆமாம் பாரதி. மறதியில் கொடுத்து விட்டேன். மீதப் பணத்தைத் திரும்பக் கொடுத்ததற்கு நன்றி.

**பாரதி** : நன்றி. ஐயா. நான் சென்று வருகிறேன்.

**நடவடிக்கை**

1. சமுதாயத்தோடு இயைந்த வாழ்வில் வேறு சில நேர்மையைக் குறிக்கும் செயல்களைப் பட்டியலிடுக.
2. சமுதாயத்தோடு இயைந்த வாழ்வில் நேர்மைப் பண்பு இல்லாவிட்டால் என்ன நடக்கும் என்பதனைக் கலந்துரையாடிக் கூறுக.
3. சமுதாயத்தோடு இயைந்த வாழ்வில் நேர்மைப் பண்பினைக் காட்டும் வேறு செயல்களைப் பட்டியலிடுக.

10.1 **ஆசிரியர் குறிப்பு**
- சமுதாயத்தோடு இயைந்த வாழ்வில் நேர்மைச் செயல்களை அடையாளம் கண்டு பட்டியலிடுதல்.

**வி.வ.கூ:** நன்னெறி **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூ.தி:** சமூகம்

கருத்துப் படிவம்

# பாடம் 2 உண்மையே உயர்வு




- சமுதாயத்தில் முக்கியப் பதவியை வகிக்கும் பொழுது முறை தவறி செயல்படக்கூடாது.
- பொறுப்புணர்வுடன் நேர்மையுடன் கடமையை ஆற்ற வேண்டும்.
- சமுதாய நலன்களுக்குத் தீங்கு விளைவிக்காமல் இருக்க வேண்டும்.
- பிறருக்குச் சேர வேண்டியவற்றைச் சுயநலத்திற்காகத் தடுக்கக் கூடாது.
- சமுதாயத்தில் யாரையும் ஏமாற்றி இலாபம் பெறலாகாது.

## நடவடிக்கை

1. சமுதாயத்தோடு இயைந்த வாழ்வில் நேர்மைப் பண்பினை வளர்க்கும் வேறு சில வழிமுறைகளை ‘ரேலி ரோபின்’ (Rally Robin) முறையில் கண்டறிக.
2. கண்டறிந்த வழிமுறைகளைக் கொண்டு சிற்றறிக்கை ஒன்றினை உருவாக்கி வகுப்பில் படைத்திடுக.

10.2

**ஆசிரியர் குறிப்பு**
- சமுதாயத்தோடு இயைந்த வாழ்வில் நேர்மைப் பண்பினை வளர்க்கும் வழிகளை அடையாளங் கண்டு கூறுதல்.

**வி.வ.கூ:** நன்னெறி **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூ.தி:** இணைந்து கற்றல்

கருத்துப் படிவம்

# பாடம் 3 பேச்சில் நேர்மை

சூழல் 1




சூழல் 2




**நடவடிக்கை**

1. கோமதியின் பதிலைப் பற்றி உமது கருத்து என்ன?
2. சமுதாயத்தோடு இயைந்த வாழ்வில் நேர்மைப் பண்பைக் கடைப்பிடிக்காவிடில் ஏற்படும் விளைவுகள் என்ன?

10.2 **ஆசிரியர் குறிப்பு**

- சமுதாயத்தோடு இயைந்த வாழ்வில் நேர்மைப் பண்பினைக் கடைப்பிடித்ததன் முக்கியத்துவத்தை விவரித்துக் கூறுதல்.

**வி.வ.கூ:** நன்னெறி **உ.சி.தி:** மதிப்பிடுதல் **21ஆம் நூ.தி:** சமூகம்

கருத்துப் படிவம்

# பாடம் 4 பாண்டியனின் தீரம்




**நடவடிக்கை**

1. காவல்துறை அதிகாரி, பாண்டியனை எவ்வாறு பாராட்டினார்?
2. காவல்துறை அதிகாரி பாராட்டும்போது பாண்டியனின் மனவுணர்வு எப்படி இருந்திருக்கும்?
3. இச் சூழலில் நீங்கள் இருந்தால் இருப்பின் எவ்வாறு செயல்படுவீர்கள்?

10.4

**ஆசிரியர் குறிப்பு**

- மாணவர்கள், சமூக வாழ்க்கையில் நேர்மையைக் கடைப்பிடிக்கும்போது ஏற்படும் மனவுணர்வுகளைக் கூறச் செய்தல்.

**வி.வ.கூ:** நன்னெறி **உ.சி.தி:** மதிப்பீடு **21ஆம் நூ.தி:** தொடர்

கருத்துப் படிவம்

# பாடம் 5 நேர்மையாகச் செயல்படுவோம்

**சூழல் 1**

ஐயா, நான் உங்களுக்காகத்தான் காத்திருந்தேன். உங்கள் அனுமதியுடன் நான் இந்த மலர்களைப் பறித்துக் கொள்ளலாமா?



**சூழல் 2**

திருமதி ரத்னா, நீங்கள் தொலைத்த காதணி என்னிடம்தான் உள்ளது. இதை அந்தப் பூச்சாடியின் அருகில் கண்டெடுத்தேன்.



**சூழல் 3**

ஐயா, இஃது உங்களுடையதா? உங்கள் பணப் பையைப் பூங்காவில் தவற விட்டு விட்டீர்கள். இதோ உங்களுடைய பணப்பை.



**சூழல் 4**

நீ பேருந்து நிலையத்தில் கண்டெடுத்து அனுப்பி வைத்த தேர்வுச் சான்றிதழ்களைப் பெற்றுக் கொண்டதாகவும், அனுப்பி வைத்ததற்காக அவ்விளைஞர் நன்றியும் கூறியுள்ளார்.



நேர்மையான செயல்கள் எப்பொழுதும் பாராட்டுக்குரியவை.

**நடவடிக்கை**

1. மேற்கண்ட சூழல்களை வகுப்பின் முன் நடித்துக் காட்டுக.

10.5

**ஆசிரியர் குறிப்பு**

- சமுதாயத்தோடு இயைந்த வாழ்வில் நேர்மைப் பண்பினைச் செயல்படுத்துவதன் முக்கியத்துவத்தைக் கூறுதல்.

**வி.வ.கூ:** நன்னெறி **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூ.தி:** சமூகம்

மதிப்பீடு

குறிப்பிடுக.

1. பவித்ரா தனது அடுக்குமாடி வீட்டின் மேல்தளத்திலிருந்து தண்ணீர் கொட்டி விட்டாள்.

தீர்வு :

மனவுணர்வு :

2. பேருந்து நிலையத்தில் வைக்கப்பட்ட பூச்சாடி கந்தனின் கைப் பட்டுக் கீழே விழுந்து உடைந்து விட்டது.

தீர்வு :

மனவுணர்வு :

3. மாறன், வியாபாரத்தில் தன் கவனக் குறைவால் ஏற்பட்ட இழப்பிற்குப் பொறுப்பேற்றான்.

தீர்வு :

மனவுணர்வு :

4. இரண்டு குழுவினரின் சண்டைக்குத் தானே காரணம் எனச் சித்தார்த்தன் உண்மையைக் கூறினான்.

தீர்வு :

மனவுணர்வு :

5. இளமாறன் தன் வீட்டுக் குடியிருப்புப் பகுதியின் சிறுவர் பூங்காவில் உள்ள ஊஞ்சலை உடைத்துவிட்டுச் சென்று விட்டான்.

தீர்வு :

மனவுணர்வு :

10.1
10.2

ஆசிரியர் குறிப்பு

• வாழிடச் சமுதாயத்தில் நேர்மைப் பண்பினை வலியுறுத்தும் நடவடிக்கைகளைக் கூறச் செய்தல்.

**வி.வ.கூ:** நன்னெறி **உ.சி.தி:** மதிப்பிடுதல் **21ஆம் நூ.தி:** தொடர்பு

குறைநீக்கல்

பொருத்தமான மதிப்பீட்டை வழங்குக.

குறிப்பு: 1 : அறவே இல்லை 2 : எப்பொழுதாகிலும் 3 : அடிக்கடி

| எண் | செயல் | புள்ளி 1 | 2 | 3 |
|---|---|---|---|---|
| 1. | தவறுதலாக நடைப்பாதை மின்விளக்கை மோதி உடைத்து விட்டதாக உண்மையைக் கூறினேன். | | | |
| 2. | யாரோ பொது நீச்சல் குளத்திற்கு அருகில் மறந்து விட்டுச் சென்ற கைப்பேசியை நான் எடுத்து ஒளித்து வைத்தேன். | | | |
| 3. | நான் செய்த தவற்றை ஒப்புக் கொண்டேன். | | | |
| 4. | நான் பொது நூலகத்தில் இரவல் பெற்ற புத்தகத்தைத் தொலைத்துவிட்ட உண்மையைக் கூறினேன். | | | |
| 5. | நான் புரிந்த குற்றத்தை மறைக்க திரு. மணியத்தின் மகளின் மீது பழி சுமத்தினேன். | | | |
| 6. | கீழே விழுந்து கிடந்த மகிழுந்துச் சாவியை வசிப்பிடக் காவலரிடம் ஒப்படைத்தேன். | | | |
| 7. | நான் பெரும் சிரமத்திற்கிடையே நேர்மையான வழியில் வசிப்பிட மக்களுக்கான குடிநீர்த் தேவையை நிறைவு செய்தேன். | | | |
| 8. | என் வாடகை வாகனத்தில் பயணி ஒருவர் விட்டுச் சென்ற பணப்பையை எடுத்துக் கொண்டேன். | | | |

**மொத்தப் புள்ளி**

17-24 : வாழ்த்துகள்! நீங்கள் சமுதாயத்தில் பொறுப்புள்ள நபர் ஆவீர்.

9-16 : திருப்தி. சமுதாயத்தில் உனது பொறுப்புகளை அதிகரிக்க வேண்டும்.

0-8 : சமுதாயத்தில் உனது பொறுப்புகளை மேலும் அதிகரிக்க வேண்டும்.

10.3
10.4

ஆசிரியர் குறிப்பு

- நேர்மையான வழிமுறைகளை அடையாளங் கண்டு பதில் கூறுதல்.

வி.வ.கூ: நன்னெறி உ.சி.தி: மதிப்பிடுதல் 21ஆம் நூ.தி: சமூகம்

**திடப்படுத்துதல்**

**படத்தின் துணையுடன் நேர்மையைக் கடைப்பிடிப்பதால் ஏற்படும் நன்மைகளைப் பட்டியலிடுக; கலந்துரையாடுக.**

1. நேர்மைச் செயல் எடுத்துக் காட்டு:





5. நேர்மைப் பண்பைச் செயல்படுத்துவது எப்படி?

2. நேர்மைப் பண்பினை வளர்க்கும் வழிமுறைகள்:

**நீங்கள் சமுதாய வாழ்க்கையில் எத்தகைய நேர்மைப் பண்புகளைக் கடைப்பிடிப்பீர்கள்?**






4. நேர்மைப் பண்பினைக் கடைப்பிடிக்கையில் ஏற்படும் மனவுணர்வு:

3. நேர்மைப் பண்பினைக் கடைப்பிடிப்பதன் முக்கியத்துவம்:



10.5

**ஆசிரியர் குறிப்பு**

- மாணவர்களைச் சமுதாய வாழ்க்கையில் எத்தகைய நேர்மைப் பண்புகளைக் கடைப்பிடிக்கலாம் என்பதை எழுதி விளக்குதல்.

**வி.வ.கூ:** நன்னெறி **உ.சி.தி:** படைத்தல் **21ஆம் நூ.தி:** தொடர்பு

**வளப்படுத்துதல்**

**படத்தின் துணையுடன் நேர்மையைக் குறிக்கும் கதையை உருவாக்குக.**




உங்கள் வாழ்க்கையில் சமுதாயத்தைத் தொடர்புபடுத்தி நடந்த நேர்மைச் சம்பவத்தை வகுப்பில் பகிர்ந்து கொள்க.

10.2 **ஆசிரியர் குறிப்பு**

- மாணவர்கள் சமுதாயத்தோடு இயைந்த வாழ்வில் நேர்மைப் பண்பினை வளர்க்கும் வழிகளைக் கூறுதல்.

**வி.வ.கூ:** நன்னெறி **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூ.தி:** சமூகம்



# தொகுதி 11 ஊக்கமுடைமை

## பாடம் 1 முயற்சியின் பயன்

கருத்துப் படிவம்

சுங்கை பினாங்கு கிராமத்தில் பொதுநல வசதிகள் குறைவாகவே இருந்தன. அங்கு வாழ்ந்து வந்த மக்கள், அக்கிராமத்தில் பொதுநல வசதிகளை மேம்படுத்த பல முறை முயற்சிகள் மேற்கொண்டனர்.

அவர்களின் முயற்சிகள் வீண் போகவில்லை. அண்மையில் நிறைவேற்றப்பட்ட வட்டார மேம்பாட்டுத் திட்டத்தின் வழி சுங்கை பினாங்கு கிராமத்திற்கு ஒரு பொதுச் சுகாதார நிலையம், நடமாடும் நூலகம், தெரு விளக்குகள் ஆகியன கிடைக்கப் பெற்றன.




**நடவடிக்கை**

இக்கிராம மக்கள், தங்கள் கிராம மேம்பாட்டிற்கு என்னென்ன செய்திருப்பார்கள்? விவரித்திடுக.

11.1 **ஆசிரியர் குறிப்பு**
- சமுதாய வாழ்க்கையில் ஊக்கத்துடன் செயல்பட்டு வெற்றி பெற்றவர்கள் பற்றி அறிதல்.

**வி.வ.கூ:** அறிவியல் தொழில்நுட்பம் **உ.சி.தி:** படைத்தல் **21ஆம் நூ.தி:** ஆக்கச் சிந்தனை

கருத்துப் படிவம்

# பாடம் 2 வெற்றிக் கனி

செந்தோசா குடியிருப்பில் இன்று கருத்தரங்கு ஒன்று நடைபெற்றது. இளைஞர் விளையாட்டுத் துறையின் ஏற்பாட்டில் நடைபெற்ற அக்கருத்தரங்கில், ஊக்கத்தின் அமலாக்கத்தைப் பற்றி அக்குடியிருப்பின் இளம் தொழிலதிபர், சுடரொளி விவேகன் பேசினார். அவரின் சொற்பொழிவின் சில தகவல்கள்:

**ஊக்கமுடைமை நமக்கு நம்பிக்கையூட்டும். தோல்வி நிலையானது இல்லை. வெற்றிக் கனியைப் பறிக்க உதவுவது ஊக்கமுடைமையே.**

**ஊக்கமுடைமை வெற்றிக்கு வழிவகுக்கும். முடியாதது என்று எதுவும் இல்லை. முயற்சி செய்தால் அனைத்தும் சாத்தியமே.**

**ஊக்கமுடைமை ஒரு செயலைச் சிறப்பாகச் செய்யத் துணை புரியும்.**

**ஊக்கமுடைமையுடன் செயல்படும்போது சமுதாயத்தினரோடு நாம் நல்லுறவை வளர்த்துக் கொள்ள முடியும்.**



**ஊக்கமுடைமையுடன் செயல்பட்டால், தனக்கும் சமுதாயத்திற்கும் அது பல நன்மைகளைத் தரும்.**

**நடவடிக்கை**

1. உங்கள் வாழ்க்கையில் ஊக்கமுடைமையைக் கடைப்பிடித்ததால் அடைந்த நன்மைகளைக் குறிப்பிடுக.
2. இக்கருத்தரங்கில் கலந்து கொண்டவர்கள் என்னென்ன நன்மைகளை அடைந்திருப்பர் என்பதை விளக்குக.

11.2 | **ஆசிரியர் குறிப்பு**

• சமுதாய வாழ்க்கையில் ஊக்கத்தைக் கடைப்பிடிப்பதன் முக்கியத்துவத்தை அறிந்து கூறுதல்.

**வி.வ.கூ:** நன்நெறி **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூ.தி:** சமூகம்

கருத்துப் படிவம்

# பாடம் 3 ஊக்கத்தால் உயர்ந்த தீரன்

திரு. சிவா ஒரு வியாபாரி. தன் ஊர் மக்களை வணிகத் துறையில் ஈடுபடுத்த எண்ணினார். எனவே, அவர் தம் நண்பர்கள் சிலரின் துணையுடன் கூட்டுறவுக் கடை ஒன்றைத் தொடங்கினார்.

கடையின் நிர்வாகத்தை அவரின் மகன் மதன் நிர்வாகம் செய்யத் துணை புரிந்தான். கடையில் உதவிக்கு அவ்வூர் இளைஞர்கள், மாணவர்கள் எனப் பலரும் எவ்வித ஊதியமும் பெறாமல் சுழல் முறையில் ஊக்கத்துடன் பணியாற்றி வந்தனர்,

இதனிடையே, மதன் உயர் கல்வியைத் தொடர கோலாலம்பூர் சென்று விட்டதால், கடையை நிர்வகிக்க திரு. சிவா பெரிதும் சிரமப்பட்டார். தனது அண்டை வீட்டார் திரு. வோங்கிடம் சொல்லிப் புலம்பினார். வேலைக்கு ஆள் கிடைத்தால் உதவியாக இருக்கும் என்று கூறும்போது திரு. வோங்கிற்கு திரு. முருகேசுவின் மகன் தீரனின் ஞாபகம் வந்தது.




இதைப்பற்றி திரு. முருகேசுவிடம் கூற, அவரும் சம்மதம் தெரிவித்தார். தீரனின் பணியும் அக்கடையில் தொடங்கியது. ஆனால், சில நாள்களுக்குப் பிறகு தீரன் பணி விதிமுறைகளை மீறத் தொடங்கினான். காலையில் வேலைக்குத் தாமதமாகச் செல்பவன் மாலையில் விரைவாக வீடு திரும்புவான். வேலைகளைச் சரிவரச் செய்வதில்லை. கடையின் வியாபாரம் குறையத் தொடங்கியது.

இதனையறிந்த திரு முருகேசு, தன் மகனை அழைத்து அறிவுரை கூறினார். திரு சிவாவின் அருமை பெருமைகளை எடுத்துரைத்தார். மறுநாள் காலையில் சூரிய உதயத்திற்கு முன்னதாகவே கடைக்கு வந்து கடை வேலைகளைத் தொடங்கினான் தீரன். அல்லும் பகலும் கடுமையாக உழைத்தான். கூட்டுறவுக் கடை புதுப்பொழிவுப் பெற்று வியாபாரமும் வளர்ந்தது.

**நடவடிக்கை**

1. தீரனின் ஊக்கமுடமை மக்கள் கூட்டுறவுக் கடையின் வளர்ச்சியில் ஏற்படுத்திய மாற்றங்கள் யாவை?

11.3

**ஆசிரியர் குறிப்பு**

- சமுதாய வாழ்க்கையில் ஊக்கத்தைக் கடைப்பிடிக்காவிடில் ஏற்படும் விளைவுகளை விளக்கச் செய்தல்.

**வி.வ.கூ:** எதிர்காலவியல் **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூ.தி:** தொடர்பு

கருத்துப் படிவம்

# பாடம் 4 ஊக்கத்துடன் செயல்படு




## நடவடிக்கை

1. நீங்கள் படத்தில் எதைக் காண்கிறீர்கள்?
2. இச்சூழலை எங்குக் காணலாம்?
3. சமுதாயத்தினரோடு இயைந்து ஊக்கத்துடன் செயல்படும்பொழுது ஏற்படும் நன்மைகள் இரண்டைக் குறிப்பிடுக.
4. இந்நடவடிக்கையில் சமுதாயத்தினர் ஊக்கமின்றி நடந்து கொண்டால் என்ன நிகழும் என்பதைக் கூறுக.
5. இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபடுகிறவர்களுக்கு ஏற்படும் மனவுணர்வுகளைக் கூறுக.

11.4
11.5

**ஆசிரியர் குறிப்பு**

• சமுதாய வாழ்க்கையில் ஊக்கமுடைமையைக் கடைப்பிடிப்பதால் ஏற்படும் மன உணர்வுகளைக் கூறப் பணித்தல்; ஊக்கமுடைமைப் பண்பினைச் செயல்படுத்த ஊக்குவித்தல்.

**வி.வ.கூ:** பயனீட்டாளர் கல்வி **உ.சி.தி:** மதிப்பிடுதல் **21ஆம் நூ.தி:** தொடர்பு

கருத்துப் படிவம்

# பாடம் 5 ஊக்கமிகு கிராமம்




இவ்வாண்டுக்கான 'ஊக்கமிகு கிராமம்' எனும் விருது பெர்லிஸ் கம்போங் முஹிபா கிராமத்திற்கு வழங்கப்பட்டது. அக்கிராமத்துத் தலைவரை நமது ஞாயிறு ஒளி நிருபர் நேர்காணல் செய்கிறார்.

**நிருபர்** : வணக்கம் ஐயா. கிராமத்துத் தலைவர் என்னும் முறையில் உங்கள் மனநிலை எவ்வாறு இருக்கிறது?

**கிராமத் தலைவர்** : நாங்கள் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம்.

**நிருபர்** : பழுதடைந்த நிலையில் இருந்த ஒரு பாலத்தைக் கிராம மக்கள் அனைவரும் இணைந்து ஊக்கமுடன் செயல்பட்டுக் கட்டி முடித்ததற்காக இவ்விருது வழங்கப்பட்டது என அறிகிறோம். உங்களின் இந்த முயற்சிக்கு வித்திட்டவர் யார்?

**கிராமத் தலைவர்** : என் கிராம மக்களே ஆவர், எல்லாவற்றையும் அரசே செய்யும் என்று எதிர்பார்க்காமல் நாமே ஊக்கமுடன் செயல்பட்டு நமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள வேண்டும் எனக் கருதிச் செயல்பட்டோம். இதுவே எங்கள் வெற்றிக்குக் காரணம்.

**நடவடிக்கை**

கம்போங் முஹிபா கிராம மக்களின் நடவடிக்கைகள் உணர்த்துவது என்ன?

11.5

**ஆசிரியர் குறிப்பு**
- சமுதாயத் தேவைகளை ஊக்கமுடன் செயல்பட்டு நிறைவுசெய்து கொண்ட படங்களைச் சேகரித்துத் திரட்டேடு தயாரித்தல்.

**வி.வ.கூ.:** பயனீட்டாளர் கல்வி **உ.சி.தி:** மதிப்பிடுதல் **21ஆம் நூ.தி:** தொடர்பு

மதிப்பீடு

அ. கவிதையில் காணப்படும் ஊக்கமுடைமைச் செயல்களைக் குறிப்பிடுக.



### முயற்சி

முயற்சித் திருவினையாக்கும் - என்ற
பயிற்சி உறுதுணையாக்கும்!

வானம் புதிதுதான்!
இந்த வையகமும் புதிதுதான்! - நம்
வாழ்க்கையும் புதிதுதான்!
வீணாய் வருந்தாதே!



கடந்த காலத்தில் நிகழ்ந்த தோல்விகளை - நினைத்து
வீட்டில் முடங்குவதை நிறுத்து!
இடிவிழுந்து இமயமலை சாய்வதில்லை!
காகம் பறந்து கடலலை ஓய்வதில்லை!
இமயமலைபோல் நீ நிமிர்ந்து நில்!




சின்னச் சின்ன தோல்வி கண்டு
ஓய்ந்து போகாமல் - கடலலை போல்!
தொடர்ந்து ஓயாமல் போராடு!
தன்னம்பிக்கை இருந்தால் - தடைக் கற்கள்தானே!
படிக்கற்களாய் மாறும்!

உன்னால் முடியுமென நம்பு!
உன்னால் முடியும்வரை நம்பு!

நன்றி,
நா. சுரேஷ் குமார்



**சிந்தனைத் திறன்**

இடி விழுந்து இமயமலை சாய்வதில்லை என்பதன் பொருள் அறிக.

**நடவடிக்கை**

1. ஊக்கமுடைமையால் வெற்றி பெற்ற பிற சாதனையாளர்களைப் பற்றி ஆராய்க.
2. மாணவர்கள் சமுதாயத்தோடு இயைந்த வாழ்வில் ஊக்கமுடைமையைப் பொருட்படுத்தாததால் ஏற்படும் விளைவுகளைப் பற்றிய துண்டுப் பிரசுரம் தயாரித்திடுக.

11.3

**ஆசிரியர் குறிப்பு**

• மாணவர்கள் சமுதாய வாழ்க்கையில் ஊக்கமுடைமைப் பண்பைப் பொருட்படுத்தாததால் ஏற்படும் விளைவுகளைக் கூறப் பணித்தல்.

**வி.வ.கூ:** நன்னெறி **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூ.தி:** சமூகம்

ஆ) பதில் அளித்திடுக.

1. இக்குறள் எதைப் பற்றியது?



**முயற்சி திருவினை யாக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்**



______________________

______________________

2. உமது வசிப்பிடச் சூழலில் பொருளாதாரத்தில் வளர்ச்சியடைய எம்மாதிரியான நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்?

i. ______________________

ii. ______________________



3. உமது வசிப்பிட விவசாயிகள் மேற்கொண்ட முயற்சிகள் வெற்றி பெறும்போது ஏற்படும் மனவுணர்வுகள் யாவை?

i. ______________________

ii. ______________________



4. உங்கள் குடியிருப்புப் பகுதி மக்களுடன் சேர்ந்து என்னென்ன ஊக்கமுடைமைச் செயல்களில் ஈடுபடுவீர்கள் என்பதைப் பட்டியலிடுக.

i. ______________________

ii. ______________________



5. ஊக்கம் கொண்டு வெற்றி பெற்றவர்களை மேலும் ஊக்கமூட்டும் வழிகளைக் குறிப்பிடுக.

i. ______________________

ii. ______________________





11.4
11.5

**ஆசிரியர் குறிப்பு**

• சமுதாயத்தில் அன்றாட நடவடிக்கைகளில் ஊக்கத்தைக் கடைப்பிடிப்பதனால் ஏற்படும் மனவுணர்வுகளைக் கூறுவதோடு, ஊக்கமுடைமையையும் செயல்படுத்துதல்.

**வி.வ.கூ:** ஆக்கமும் புத்தாக்கமும் **உ.சி.தி:** படைத்தல் **21ஆம் நூ.தி:** தொடர்பு

குறைநீக்கல்

**நீங்கள் வாழும் சமுதாயத்தில் ஊக்கத்துடன் செயல்பட்ட செயல்களை எழுதுக.**




ஊக்கமுடைமைச் செயல் :

முக்கியத்துவம் :

மனவுணர்வு :




ஊக்கமுடைமைச் செயல் :

முக்கியத்துவம் :

மனவுணர்வு :




ஊக்கமுடைமைச் செயல் :

முக்கியத்துவம் :

மனவுணர்வு :




ஊக்கமுடைமைச் செயல் :

முக்கியத்துவம் :

மனவுணர்வு :

11.2
11.5

ஆசிரியர் குறிப்பு

- சமுதாய வாழ்க்கையில் ஊக்கத்தின் முக்கியத்துவத்தை அறிந்து செயல்பட ஊக்குவித்தல்.

**வி.வ.கூ:** நன்னெறி **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூ.தி:** சமூகம்

**திடப்படுத்துதல்**

அ) வாக்கியத்தை வாசித்துச் சரி அல்லது பிழை எனக் கூறுக.

புக்கிட் செமாராக் மக்கள் அருகில் உள்ள செமாராக் மலை ஏற முயன்றனர். அதற்காக ஒவ்வொரு நாளும் அயராது பயிற்சியில் ஈடுபட்டனர். மலையேறும் நாளும் வந்தது. அனைவரும் மிகுந்த ஆர்வத்தில் மலையேறத் தொடங்கினர்.






**நடவடிக்கை**

1. புக்கிட் செமாராக் மக்களின் ஊக்கமுடைமைக் கூறுகளைக் கலந்துரையாடுக.
2. இவர்களின் நடவடிக்கைக்கு முக்கியமானவை யாவை?
3. அவர்களுக்கு ஏற்பட்ட மனவுணர்வைக் குறிப்பிடுக.

11.3
11.5

**ஆசிரியர் குறிப்பு**

• ஊக்கமுடைமை தொடர்பான வேறு சில பயிற்சிகளைச் செய்தல்.

**வி.வ.கூ:** நன்னெறி **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூ.தி:** தொடர்பு



**வளப்படுத்துதல்**

## சரியான பதிலைக் கொண்டு நிறைவு செய்க.

1. குமரனின் வெற்றிக்கு அவனுடைய ☐☐☐☐ காரணம் ஆகும்.
2. எறும்பு போல் ☐☐☐☐☐☐த் தன்மையுடன் உழைத்தால் வெற்றி நிச்சயம்.
3. காலம் நேரம் பாராமல் ☐☐☐☐☐☐ நாட்டுக்கு உழைக்கும் தலைவர்களுக்கு மரியாதை செலுத்த வேண்டும்.
4. ☐☐☐☐☐ ஊக்கமும் ஒருவரின் உயர்வுக்கு வழி வகுக்கும்.
5. கடின ☐☐☐☐ நல்ல பலனைக் கொடுக்கும்.
6. இராமுவின் முட்டை வியாபாரம் ஊக்கம் ☐☐☐ காரணமாக வீழ்ச்சி அடைந்தது.
7. குடியிருப்பு மக்கள் ஒற்றுமையுடனும் ☐☐☐☐☐☐☐☐ கூட்டுப் பணியில் ஈடுபட்டனர்.
8. தாமான் டேசா குடியிருப்பு மக்கள் அனைத்து வேலைகளையும் ☐☐☐☐☐☐☐ மேற்கொள்வர்.
9. ☐☐☐☐ எழுவது சுறுசுறுப்பைக் கொடுக்கும்.
10. முயற்சி ☐☐☐☐ அளிக்கும்.



| சுறுசுறுப்பு | காலையில் | உழைப்பு | வெற்றியை |
|---|---|---|---|
| குறைவு | ஆக்கமும் | ஊக்கம் | |
| முழுமூச்சுடனும் | ஊக்கமுடன் | அக்கறையுடன் | |



11.5

**ஆசிரியர் குறிப்பு**

- சமுதாய வாழ்க்கையில் ஊக்கத்தைக் கடைப்பிடித்தல் முறைகளை அறிதல்.

**வி.வ.கூ:** நன்னெறி **உ.சி.தி:** படைத்தல் **21ஆம் நூ.தி:** சமூகம்

# தொகுதி 12 ஒத்துழைப்பு

## பாடம் 1 ஒத்துழைத்து ஒழிப்போம்!

கருத்துப் படிவம்

தாமான் சூரியா மக்கள் பெரும்பாலோர் டிங்கிக் காய்ச்சலால் பாதிப்புற்றனர். எனவே, அக்குடியிருப்புப் பகுதியில் வாழும் மக்கள் ஒத்துழைத்து ஏடிஸ் கொசுவை ஒழிக்கும் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

இதன்வழி தங்கள் குடியிருப்புப் பகுதியின் சுகாதாரத்தையும் பாதுகாப்பையும் பேணுவது அனைவரின் பொறுப்பு என்பதை உணர்த்தினர்.









**ஏடிஸ் கொசுவை ஒழிப்போம்**
**டிங்கிக் காய்ச்சலைத் தவிர்ப்போம்.**

### நடவடிக்கை

1. ஏடிஸ் கொசு ஒழிப்பில் ஒரு வாழிடச் சமுதாயத்தினர் வேறு எவ்வகையில் அவர்களின் ஒத்துழைப்பை வழங்க முடியும்? பட்டியலிடுக.
2. வேறு எம்மாதிரியான சூழல்களில் உமது வாழிட மக்களுடன் ஒத்துழைத்துச் செயல்படுவீர்கள் என்பதைக் கலந்துரையாடித் திரட்டேடு தயாரித்திடுக.

### சிந்தனைத் திறன்

குற்றச் செயல்களை ஒழிப்பது காவல் துறையினரின் பங்கு மட்டும் அல்ல. ஏன்? விவாதித்திடுக.

12.1 ஆசிரியர் குறிப்பு

- சமுதாய வாழ்க்கையில் ஒத்துழைத்துச் செயல்படுவதன் எடுத்துக் காட்டுகளைக் கூறச் செய்தல்.

வி.வ.கூ: பயனீட்டாளர் கல்வி   உ.சி.தி: பகுத்தாய்தல்   21ஆம் நூ.தி: சமூகம்

கருத்துப் படிவம்

# பாடம் 2 நிலை நிறுத்துவோம்

பாலா தன் வசிப்பிட மக்களுடன் ஒன்றிணைந்து செயல்பட மாட்டான். எல்லாவற்றிலும் எதிர்மாறாகத்தான் செயல்படுவான். இதைக் கவனித்து வந்த அவனுடைய தாத்தா,







**ஒத்துழைப்பின் முக்கியத்துவம்**

* அவனின் அன்றாட நடவடிக்கைக்குச் சமுதாயத்தின் உதவி கட்டாயம் தேவைப்படும்.
* ஆபத்து அவசர வேளையில் உதவி பெற முடியும்.
* நமது பாதுகாப்புக்குச் சமுதாயத்தின் ஒத்துழைப்பு மிகவும் அவசியம்.
* குடும்ப நிகழ்வுகளுக்குச் சமுதாயத்தின் ஒத்துழைப்புத் தேவை.

**நடவடிக்கை**

1. நாம் ஏன் சமுதாயத்தினரோடு ஒத்துழைத்து வாழ வேண்டும்?
2. சமுதாயத்தோடு ஒத்துழைத்து வாழாவிட்டால் ஏற்படும் விளைவுகளைக் கலந்துரையாடுக.

12.2 | **ஆசிரியர் குறிப்பு** • சமுதாய வாழ்க்கையில் ஒத்துழைப்பின் அவசியத்தை விவரித்தல்.

**வி.வ.கூ:** நன்னெறி **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூ.தி:** சமூகம்

கருத்துப் படிவம்

# பாடம் 3 ஒற்றுமையே பலம்

கம்போங் பாரு குடியிருப்புப் பகுதியில் வசிக்கும் மக்கள் ஆண்டு விழாவிற்கு ஏற்பாடு செய்திருந்தனர். அவற்றில் ஓர் அங்கம்தான் மனமகிழ்வு விளையாட்டுப் போட்டிகள். அவ்விளையாட்டுப் போட்டியை ஏற்பாடு செய்யவும் திடலைச் சுத்தம் செய்யவும் அனைவரையும் அழைத்தனர். கம்போங் பாரு தமிழ்ப்பள்ளி மாணவர்கள் தங்களின் பங்காகச் செம்பிறைச் சங்க முதலுதவி முகாமை அமைத்தனர்.




**நடவடிக்கை**

1. மேற்கண்ட செய்தியில் அவர்கள் செய்த நடவடிக்கைகளைக் குறிப்பிடுக.
2. நாம் சமுதாயத்தோடு ஒத்துழைத்துச் செல்லாவிட்டால் ஏற்படும் விளைவுகளைக் குமிழி வரைபடத்தில் குறிப்பிடுக.

12.3 **ஆசிரியர் குறிப்பு**

- சமுதாய வாழ்க்கையில் ஒத்துழைப்பின்றிச் செயல்படுவதன் விளைவுகளைக் காணொலி வாயிலாக அறியச் செய்தல்.

**வி.வ.கூ:** நன்னெறி **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூ.தி:** சமூகம்

கருத்துப் படிவம்

# பாடம் 4 ஒத்துழைத்து மலர்வோம்



தமிழ்த் தென்றல் குடியிருப்புக் கழகத்தினர் அண்மையில் எழுவர் காற்பந்துப் போட்டி ஒன்றை நடத்தினர். அப்போட்டியில், ஆரம்பப் பள்ளிகளுக்கான போட்டிப் பிரிவில், கம்போங் ராஜா குழுவினர் வெற்றி பெற்றனர். அக்குழுவின் தலைவர் தம் மனவுணர்வை இவ்வாறு வெளிப்படுத்துகிறார்.

| தயார்நிலை | செயல்நிலை | தொடர்நிலை | மதிப்பீடு |
| --- | --- | --- | --- |
| உளப்பூர்வமாக ஒத்துழைத்தோம். | திறனுக்கேற்ப பணியை ஏற்றோம். | தவறுகளை/ குறைகளை ஏற்றோம். | ஒருமித்துக் கலந்துரையாடினோம். |

**நடவடிக்கை**

1. கம்போங் ராஜா குழுவினரின் வெற்றிக்குக் காரணம் என்ன?
2. அவர்களின் மனவுணர்வைக் குறிப்பிடுக; உணர்வுகளைப் பட்டியலிடுக.
3. பெண்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்ட கபடிப் போட்டியில் செந்தாமரைக் குழுவினர் தோல்வியுற்றனர்.
   i. அவர்களின் மனவுணர்வு என்ன?
   ii. அவர்கள் தொடர்ந்து செய்ய வேண்டியது என்ன?

12.4

**ஆசிரியர் குறிப்பு**

- சமுதாய வாழ்க்கையில் ஒத்துழைத்துச் செயல்படுவதன் மூலம் ஏற்படும் மனவுணர்வுகளைக் கூறுதல் அவற்றைச் செயல்படுத்துதல்.

**வி.வ.கூ:** நன்னெறி **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூ.தி:** தொடர்பு

கருத்துப் படிவம்

# பாடம் 5 பத்து ரிங்கிட்

பந்தாய் டாலாம் குடியிருப்போர் கழகத்தினர் ஒவ்வொரு மாதமும் பத்து ரிங்கிட்டைக் குழந்தைகள் பராமரிப்பு மையத் திட்டத்திற்கு நன்கொடையாகக் கொடுப்பது என முடிவெடுத்தனர்.




**தனபாலன்** : மன்னிக்க வேண்டும். இத்திட்டத்தில் எனக்கு உடன்பாடில்லை. பத்து ரிங்கிட் மிக அதிகம் என நினைக்கிறேன்.

**ஜாம்ரி** : நண்பரே, தாங்கள் சொல்வது சரிதான். எனினும், நமக்கு ஒரு குழந்தைகள் பராமரிப்பு மையம் இருப்பது மிகவும் அவசியம். செலவு அதிகமாக இருப்பினும் இதனை ஏற்க வேண்டிய நிலையில் உள்ளோம்.

**கிம் லெங்** : தலைவர் அவர்களே, இப்பொழுது இத்திட்டத்தைத் தொடருவோம். பின்னர் மாற்றுவழி காண்போம்.

தனபாலன் : ஆமாம், அதுவும் சரிதான்.

**நடவடிக்கை**

1. இக்கூட்டத்தில் கலந்து கொண்டவர்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?
2. குழந்தைப் பாராமரிப்பு மையத் திட்டத்தின் வெற்றிக்குக் காரணம் என்ன?

**சிந்தனைத் திறன்**

செயல்படுத்தப்படும் ஒரு திட்டம் வெற்றி பெற காரணங்களாக அமைவன யாவை?

14.5 **ஆசிரியர் குறிப்பு**

• சமுதாயத்தினரோடுடனான அன்றாட வாழ்வில் விட்டுக் கொடுக்கும் பண்பினைச் செயல்படுத்துதல்.

**வி.வ.கூ:** நன்னெறி **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூ.தி:** தொடர்பு




அ) ஒத்துழைப்புத் தொடர்பான சரியான விடையை எழுதிடுக.

1. இன்றைய சமுதாயத்தினருடன் ஒன்று சேர்ந்து எவ்வித நன்மையும் பாராமல் வேலையைச் செய்வதே ______ ஆகும்.
2. வாழிடச் சமுதாயத்தினரிடையே ஏற்படும் பகைமையைத் தவிர்க்க ______ செயல்பட வேண்டும்.
3. ஊர் மக்கள் அடிக்கடி திடீர்வெள்ளம் ஏற்படுவதை அறிந்து அனைவரும் ______ தூர் வாரினர்.
4. மாவட்ட காற்பந்து சம்மேளனம் ஏற்பாடு செய்துள்ள காற்பந்து விளையாட்டில் வெற்றி பெற ______ மிகவும் அவசியம்.
5. பொதுநல வசதிகளைப் பிறருடன் ஒத்துழைத்து ______ நம் கடமையாகும்.

ஆ) உங்கள் வாழிட மக்கள் ஒன்றிணைந்து மேற்கொள்ளும் நடவடிக்கைகளைக் குறிப்பிடுக.

i. ______ ii. ______ iii. ______

இ) ஒருவருக்கொருவர் ஒத்துழைத்துச் செயல்படுவதால் ஏற்படும் நன்மைகளைக் குறிப்பிடுக.







12.1
12.2

ஆசிரியர் குறிப்பு

• சமுதாய வாழ்கையில் ஒத்துழைப்பின் நன்மைகளை அறிதல்.

வி.வ.கூ: நன்னெறி உ.சி.தி: மதிப்பிடுதல் 21ஆம் நூ.தி: தொடர்பு

குறைநீக்கல்

**சமுதாயத்தில் ஒத்துழைப்பதனால் ஏற்படும் நன்மைகளைக் குறுக்கெழுத்துக் கட்டங்களில் நிறைவு செய்து எழுதுக.**




**ஒத்துழைப்பு.....**

திட்டம் என்பது மக்கள் திட்டமாக இருக்க வேண்டும். அத்துடன் மக்கள் ஒத்துழைப்பு இல்லாமல் எந்தத் திட்டமும் வெற்றி பெற முடியாது.




12.1
12.2
12.3

ஆசிரியர் குறிப்பு

• சமுதாயத்தின் ஒத்துழைப்பின் நன்மைகளை அறிதல்.

**வி.வ.கூ:** நன்னெறி **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூ.தி:** தொடர்பு

**திடப்படுத்துதல்**

**அ) நேர்காணலை நிறைவு செய்து, போலித்தம் செய்திடுக.**



**நிகழ்ச்சி நெறியாளர்** : அனைவருக்கும் வணக்கம். இன்று 'நம் சமுதாயத்தில் ஒத்துழைப்பு' எனும் தலைப்பையொட்டிப் பேச உள்ளோம். இன்றைய நம் நிகழ்ச்சிக்குத் தேசிய ஒற்றுமை அமைச்சின் பொது உறவு அதிகாரி திருவாளர் டாக்டர் கதிரேசன், மாவட்டக் காவல்துறை அதிகாரி துவான் ஜைனல் ஆகியோர் வந்துள்ளனர். எனது முதல் கேள்வி சமுதாயத்தில் ஒத்துழைப்பு இருக்கிறதா? இல்லையா?

**டாக்டர் கதிரேசன்** : ______

______

**துவான் ஜைனல்** : ______

______

______

**ஆ) சூழலை வாசித்து அதற்கேற்ற நடவடிக்கைகளை எழுதுக.**

1. உங்கள் குடியிருப்புப் பகுதியில் கலை நிகழ்ச்சி ஒன்றுக்கு ஏற்பாடு செய்துள்ளீர்கள். நீங்கள் உங்கள் நண்பர்களுடன் ஒன்றிணைந்து இக்கலைநிகழ்ச்சி வெற்றி பெற நீங்கள் மேற்கொள்ளும் நடவடிக்கைகளைச் செயற்பாங்கு வரைபடம் மூலம் விவரித்திடுக.




12.3
12.5

**ஆசிரியர் குறிப்பு**

• சமுதாய வாழ்க்கையில் ஒத்துழைப்பின் அவசியத்தை அறியப் பணித்தல்.

**வி.வ.கூ:** நன்னெறி **உ.சி.தி:** மதிப்பிடுதல் **21ஆம் நூ.தி:** சமூகம்

வளப்படுத்துதல்

அ) எவ்வாறு ஒத்துழைப்பு வழங்குவீர்கள்?



நிகழ்ச்சிக்கு முன்னர்
_______________

நிகழ்ச்சியின் போது
_______________

நிகழ்ச்சி முடிந்து
_______________

நிகழ்ச்சிக்கு முன்னர்
_______________

நிகழ்ச்சியின் போது
_______________

நிகழ்ச்சி முடிந்து
_______________





போட்டிக்கு முன்னர்
_______________

போட்டியின் போது
_______________

போட்டி முடிந்து
_______________

12.3
12.5

ஆசிரியர் குறிப்பு

- ஒத்துழைப்பின் விளைவுகளை மாணவர்கள் அறிதல்.

வி.வ.ந.நன்னெறி | உ.சி.தி: பகுப்பாய்தல் | 21ஆம் நூ.தி: தொடர்பு

ஆ. கீழ்க்காணும் பழமொழிகளைப் படித்து, அவற்றைத் தொடர்ந்து வரும் வினாக்களுக்கு விடையளித்திடுக.

கூடி வாழ்ந்தால் கோடி நன்மை

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

ஒற்றுமையே பலம்

ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்.



1. இப்பழமொழிகளில் நீங்கள் அறிந்து கொண்ட கருத்துகள் யாவை?

2. இப்பழமொழிகளில் ஏதேனும் ஒன்றைத் தேர்ந்தெடுத்து, அதனை உமது வாழ்க்கையோடு தொடர்புபடுத்திக் கூறுக.

3. ஊர் மக்களுடன் இணைந்து செயல்படாமல் தனித்துச் செயல்படும் ஒருவர் என்னென்ன விளைவுகளைச் சந்திப்பார் என்பதனை விளக்குக.

4. மேற்கண்ட பழமொழிகளின் கருத்தை உள்ளடக்கிய ஏனைய பழமொழிகளைக் குறிப்பிடுக.

5. நீங்கள் புதிதாகக் குடியேறியிருக்கும் குடியிருப்புப் பகுதியில் வாழும் மக்கள் கூட்டுப் பணியின் மூலம் ஒரு பூப்பந்து முற்றம் அமைக்கிறார்கள். அவர்களுக்கு நீங்கள் எவ்வாறு உதவ முடியும் என்பதைக் கூறுக.

   i. ____________________

   ii. ____________________

12.5 ஆசிரியர் குறிப்பு

• ஒத்துழைப்பு நடவடிக்கைகளை அறிதல், பட்டியலிடுதல்.

**வி.வ.ந:** பயனீட்டாளர் **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூ.தி:** தொடர்பு

# தொகுதி 13 மிதமான மனப்பான்மை

## பாடம் 1 மேனகாவின் தற்பெருமை

கருத்துப் படிவம்



மேனகா வசதியான குடும்பத்தைச் சேர்ந்தவள். இருப்பினும், அவள் எல்லாரிடமும் அன்பாகவும், பண்பாகவும் பழகுவாள். தனது பெருமையை யாரிடமும் காட்டிக் கொள்ள மாட்டாள்.

தீபாவளியன்று அவள் அப்பா திறந்த இல்ல உபசரிப்பு நடத்தினார். அவர் அவ்வட்டார மக்கள் அனைவரையும் அழைத்திருந்தார். எவ்வித ஏற்றத் தாழ்வும் இன்றி மேனகா அனைவரிடமும் சேர்ந்து பலகாரங்கள் சாப்பிட்டுக் கொண்டு மகிழ்ச்சியாகக் காணப்பட்டாள்.

தீபாவளிக்காக என்னென்ன ஆடை அணிகலன்கள் வாங்கினாய் என்று தோழிகள் வினவியதற்கு, தான் இரண்டு சட்டைகள் மட்டுமே வாங்கியதாகவும், காலணிகள், ஆபரணங்கள் ஏதும் புதியதாக வாங்கவில்லை என்றும் கூறினாள்.

சிறிது நேரத்தில் மேனகாவின் தாயார் அனைவரையும் உணவருந்த அழைத்தார். மேசையில் பலதரப்பட்ட உணவு வகைகள் வைக்கப்பட்டிருந்தன. இருப்பினும், அவர்கள் தங்களுக்குப் தேவையான உணவையே எடுத்துச் சாப்பிட்டனர்.

**நடவடிக்கை**

மேனகாவின் குடும்பத்தினர் மிதமான மனப்பான்மையைக் கடைப்பிடித்ததற்கான சான்றுகளைக் குறிப்பிடுக.

i. ______ ii. ______

13.1 **ஆசிரியர் குறிப்பு**

- சமுதாய வாழ்க்கையில் மிதமானப் மனப்பான்மையை வெளிப்படுத்தும் வேறு உதாரணங்களைப் பட்டியலிட்டுக் கூறுதல்.

**வி.வ.கூ:** நன்னெறி **உ.சி.தி:** மதிப்பிடுதல் **21ஆம் நூ.தி:** சுற்றுச்சூழல் கல்வி

கருத்துப் படிவம்

# பாடம் 2 சமுதாய வாழ்க்கை

பெருமதிப்பிற்குரிய அவைத் தலைவர், நீதிபதிகள், சக மாணவ நண்பர்கள் அனைவருக்கும் வணக்கம். 'மிதமான வாழ்க்கையே சமுதாய வாழ்க்கை' என்பதே நான் பேச வந்த தலைப்பு.

அவையோர்களே, மலேசியா பல இனம், சமயம், கலாசாரம் நிறைந்த மக்கள் வாழும் நாடாகும். மேலும், சமுதாயம் என்பது ஏழை, பணக்காரன், படிக்காதவன், படித்தவன் என எல்லாத் தரப்பினரும் உள்ளடக்கியதாகும்.

எனவே, சமுதாய வாழ்க்கையில் நாம் ஏற்றத் தாழ்வுகளைப் பாராமல் அனைவரிடமும் சரிசமமாகவும் மிதமாகவும் நடந்து கொள்ள வேண்டும். இதுவே சமுதாய அமைதிக்கு வழிவகுக்கும்.



முதல் பேச்சாளர்

சமுதாய வாழ்க்கையில் நாம் அனைவரையும் மதித்து வாழக் கற்றுக் கொள்ள வேண்டும். பேச்சு, நடவடிக்கை, உடை ஆகியவற்றில் மிதமான மனப்பான்மையைக் கடைப்பிடிக்க வேண்டும். குறிப்பாக, ஏழைகளிடத்தில் நமது ஆடம்பரத்தினைக் காட்டுவது முற்றிலும் தவறு ஆகும்.



இராண்டாம் பேச்சாளர்

## நடவடிக்கை

**கேள்விகளுக்கு விடையளிக்கவும்.**

1. முதல் பேச்சாளர் பல இன மலேசியர்களை எவ்வாறு வகைப்படுத்துகிறார்?
2. இச்சமுதாயத்தில் நாம் எப்படி வாழ வேண்டும் எனக் கூறப்படுகிறது?
3. இரண்டாவது பேச்சாளர் எவற்றில் மிதமான மனப்பான்மையைக் கடைப்பிடிக்க வேண்டும் என வலியுறுத்துகிறார்?

13.2 ஆசிரியர் குறிப்பு

- சமுதாய வாழ்க்கையில் மிதமான மனப்பான்மையைக் கடைப்பிடிப்பது என்பதைப் பற்றிக் கூறுதல்.

**வி.வ.கூ** : தலைமைத்துவம் **உ.சி.தி** : மதிப்பிடுத்தல் **21ஆம் நூ.தி** : அமலாக்கம்

கருத்துப் படிவம்

# பாடம் 3 அம்மாவின் அறிவுரை

நித்யகவினாவின் ஆசிரியர் சமுதாயத்தினரிடையே மிதமான மனப்பான்மையைக் கடைப்பிடிப்பதன் முக்கியத்துவத்தை எழுதி வரச் சொன்னார். தனக்குப் போதிய கருத்துகள் கிடைக்காததால் நித்யகவினா தன் அம்மாவின் உதவியை நாடினாள்.




**நடவடிக்கை**

மேற்கண்ட உரையாடலில் உள்ள பண்புகளைப் பட்டியலிடுக; பாகமேற்று நடித்துக் காட்டுக.




13.3

**ஆசிரியர் குறிப்பு**

- சமுதாய வாழ்க்கையில் மிதமான மனப்பான்மையைக் கடைப்பிடிப்பதன் முக்கியத்துவத்தை விளக்கச் செய்தல்.

**வி.வ.கூ:** நன்னெறி | **உ.சி.தி:** படைத்தல் | **21ஆம் நூ.தி:** இணைந்து கற்றல்

கருத்துப் படிவம்

# பாடம் 4 மிதமான வாழ்வு




நண்பனின் பெயர் : ______________________

வகுப்பு : ______________________

| | |
|---|---|
|  நீர் | **எகா:** நான் நீர் நிறைந்து வழிய விடமாட்டேன் |
|  பணம் | ______________________ |
|  மின்சாரம் | ______________________ |
|  உணவு | ______________________ |

**நடவடிக்கை**

நீங்கள் உங்கள் வாழ்க்கையில் இதுபோன்ற நிகழ்வுகளைச் சந்தித்தது உண்டா? விளக்கிக் கூறுக.

13.4

**ஆசிரியர் குறிப்பு**

- சமுதாய வாழ்க்கையில் மிதமான மனப்பான்மையைக் கடைப்பிடிப்பதனால் ஏற்படும் மனவுணர்வைச் சிறு அன்பளிப்புக் கொடுத்துத் தெரிவித்தல்.

**வி.வ.கூ** : ஆக்கமும் புத்தாக்கமும் **உ.சி.தி** : படைத்தல் **21ஆம் நூ.தி** : சமூகம்

கருத்துப் படிவம்

# பாடம் 5 கற்றது ஒழுகு




## நடவடிக்கை

1. படங்களைக் கொண்டு கருத்துகளைக் கூறுக.
2. மேற்கண்ட நிகழ்வுகளின்போது, மிதமான மனப்பான்மையைக் குறிக்கும் உரையாடல்களை ஊகித்து எழுதுக.
3. உமது குடியிருப்புப் பகுதியில் குற்றச் செயல்கள் அதிகரித்து வருகின்றன. அவற்றை எப்படித் தவிர்க்கலாம்?

13.5

**ஆசிரியர் குறிப்பு**

- சமுதாய வாழ்க்கையில் மிதமான மனப்பான்மையை அமல்படுத்தும் மற்றும் அமல்படுத்தாத கூற்றைக் கலந்து இணைத்து (Mix and Match) நடவடிக்கையின் மூலம் செய்வித்தல்.

**வி.வ.கூ:** ஆக்கமும் புத்தாக்கமும் **உ.சி.தி : படைத்தல்** **21ஆம் நூ.தி:** சமூகம்




அ) சரி (✓) அல்லது பிழை (✗) எனக் குறியிடுக.

1. சமூகத்தில் ஏற்றத் தாழ்வு பாராமல் பழக வேண்டும்.
2. கோபத்தில் இருந்த முருகன், வழிகேட்டு வந்த பெரியவரிடம் தெரியாது எனக் கூறினான்.
3. இராமு, சோமுவின் வறுமையை இழித்துப் பேசினான்.
4. பொதுக் கழிப்பறையில் வைக்கப்பட்டுள்ள தூய்மைத் திரவங்களைக் கண்ணன் விரயம் செய்தான்.
5. தவறுதலாக மோதிவிட்டதால் சம்பந்தப்பட்ட வாகன உரிமையாளரிடம் இனியவன் மன்னிப்புக் கேட்டான்.

அ) பின்வரும் இடங்களில் எவ்வாறு மிதமான மனப்பான்மையுடன் நடந்து கொள்வீர்கள்?

1. திருமண விருந்து

| | ஏற்படும் மனவுணர்வு |
|---|---|
| i. உடை | |
| ii. உணவு | |
| iii. பேச்சு | |

2. மண்டபம்

| | ஏற்படும் மனவுணர்வு |
|---|---|
| i. மின்சாரம் | |
| ii. நீர் | |
| iii. தளவாடம் | |





13.5 ஆசிரியர் குறிப்பு
- சமூக வாழ்க்கையில் மிதமான மனப்பான்மையின் மனவுணர்வுகளைக் கூறுதல்.

**வி.வ.கூ:** நன்னெறி **உ.சி.தி:** மதிப்பிடுதல் **21ஆம் நூ.தி:** தொடர்பு

குறைநீக்கல்

**நீங்கள் வாழும் பகுதியில் வறட்சியின் காரணமாக நீர்ப்பங்கீட்டு முறை அமல்படுத்தப்படுகிறது.**

| வாழிடச் சமூதாயத்தினர் | வழிமுறை | நடவடிக்கை |
|---|---|---|
| தனிநபர் | தொட்டிகளில் நீர் பிடித்துக் குளித்தல். |  |
| குடும்பப் பெண்கள் | துணிகளைக் கையால் துவைத்தல். |  |
| விவசாயிகள் | நீர் ஊற்ற பூவாளியைப் பயன்படுத்துதல். |  |

**நடவடிக்கை**

1. மேற்கண்ட செயல்களின் அவசியத்தைக் கூறுக.
2. மேலும் எவ்வாறு நீர்த்தட்டுப்பாட்டைக் குறைக்க ஒத்துழைப்பு வழங்க இயலும்? பட்டியலிடுக.

13.5 **ஆசிரியர் குறிப்பு**
• சமுதாய வாழ்க்கையில் மிதமான மனப்பான்மையின் மனவுணர்வுகளைக் கூறுதல்.

**வி.வ.கூ:** நன்னெறி **உ.சி.தி:** மதிப்பிடுதல் **21ஆம் நூ.தி:** தொடர்பு



## திடப்படுத்துதல்

தீர்வு காண்க.

நீங்கள் கலந்து கொண்ட திருமண விருந்து மிகவும் ஆடம்பரமாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மிக அதிகமான உணவு வகைகள் தயார் செய்யப்பட்டிருந்தன.

**சிக்கல்**

தாமான் மக்கோத்தாவில் புதியதாகத் திறக்கப்பட்ட பேரங்காடியில் மலிவு விற்பனை நடைபெற்றது. அக்குடியிருப்பு மக்கள் கூட்டங் கூட்டமாகச் சென்று அதிகமான பொருள்களை வாங்கினர்.

**யார்?**

1. 
2. 
3. 

**எதிர்கொள்ளும் சிரமங்கள்**

1. 
2. 
3. 

**காரணங்களை ஆராய்தல்**

1. 
2. 
3. 

**தீர்வு**

1. 
2. 
3. 



13.5 ஆசிரியர் குறிப்பு
- அன்றாட வாழ்வில் மிதமான மனப்பான்மையைச் செயல்படுத்துதல்.

வி.வ.கூ: நன்னெறி    உ.சி.தி: பகுத்தாய்தல்    21ஆம் நூ.தி: இணைந்து கற்றல்

## வளப்படுத்துதல்

**அ) பின்வரும் சூழல்களில் மிதமான மனப்பான்மையைக் கடைப்பிடிக்கும் முறைகளையும் நன்மைகளையும் குறிப்பிடுக.**

1. திறந்த இல்ல உபசரிப்பில் வாழிட மக்களில் சிலர் அளவுக்கும் அதிகமாக உணவு எடுத்தல்.

   இச்சூழலில் நீங்கள் என்ன செய்வீர்கள்?
   அடைந்த நன்மை : ____________________

2. குடியிருப்புப் பகுதி பொதுமண்டபத்தில் பகலில் மின்விளக்குகள் எரிந்து கொண்டிருக்கின்றன.

   இச்சூழலில் நீங்கள் என்ன செய்வீர்கள்?
   அடைந்த நன்மை : ____________________

3. நீர்த்தடையின் போது நீர் இலாகாவினர் வழங்கிய நீரைச் சிலர் தேவைக்கு அதிகமாகச் சேகரித்துக் கொள்ளுதல்.

   இச்சூழலில் நீங்கள் என்ன செய்வீர்கள்?
   அடைந்த நன்மை : ____________________

**ஆ. அன்னையர் தின விழாவில் எவ்வாறு மிதமான மனப்பான்மையைக் கடைப்பிடிக்க முடியும்? பட்டியலிடுக.**

1. ____________________
2. ____________________
3. ____________________

**ஆ. வெள்ளப் பேரிடரில் பாதிக்கப்பட்டு, தற்காலிக முகாமில் தங்க வைக்கப்பட்டிருக்கும் தங்கள் கிராமத்தினருக்குக் குறைந்த அளவிலான நிவாரணப் பொருள்களே கிடைக்கின்றன. நீங்கள் என்ன செய்வீர்கள்?**



1. ____________________
2. ____________________
3. ____________________

13.1
13.3

**ஆசிரியர் குறிப்பு**

• சமுதாய வாழ்க்கையில் மிதமான மனப்பான்மையை அமல்படுத்துவதன் நன்மையைக் கூறச் செய்தல்.

**வி.வ.கூ:** நன்னெறி **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூ.தி:** தொடர்பு

கருத்துப் படிவம்

# தொகுதி 14 விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை

## பாடம் 1 புரிந்துணர்வு

மகிழ்வனத்தில் உள்ள பொது மண்டபம் கவனிப்பாரற்றுச் சேதமுற்று இருக்கிறது. அம்மண்டபத்தைச் செப்பனிடும் பணிக்கு வனவிலங்குகள் ஒன்று கூடின. மண்டபத்தைச் செப்பனிடும் பணிக்குச் சிங்கம் குழுத் தலைவராக நியமிக்கப்பட்டது.




**சிங்கம்** : நண்பர்களே! நம் வனத்தில் உள்ள பொது மண்டபத்தைச் செப்பனிடும் பணியில் அனைவரும் பங்கெடுக்கும் வண்ணம் வேலையைப் பகிர்ந்து கொடுக்க உள்ளேன்.

**நரி** : நல்ல திட்டம். இதை நான் வரவேற்கிறேன். எனக்கு என்ன வேலை?

**சிங்கம்** : நல்லது நண்பர்களே. நரியாரே, நீங்கள் மண்டபத்தைச் சுற்றிலும் உள்ள சாக்கடையைத் தேய்த்துக் கழுவ வேண்டும். குரங்காரும், யானையாரும் மண்டபத்திற்கு வண்ணம் பூசுவர்.

**நரி** : மானும் மயிலும் என்ன வேலை செய்வார்கள்?

**சிங்கம்** : மயிலுக்குப் பூச்செடிகளுக்கிடையே வளர்ந்துள்ள புல் பூண்டுகளைக் களையெடுக்கும் பணியைக் கொடுத்துள்ளேன். மான் காய்ந்த சருகுகளைக் கூட்டிப் பெருக்கும்.

**நடவடிக்கை**

1. துப்புரவுப் பணியில் ஈடுபடும் பொழுது விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை முக்கியமாகக் கருதப்படுகிறது ஏன்?
2. சமுதாய நடவடிக்கைகள் சீராக நடைபெற அடிப்படையில் விட்டுக் கொடுத்தல் அவசியம். இக்கூற்றுக்கு ஏற்ற சில சமூக நடவடிக்கைகளை எடுத்துக்காட்டாகக் கூறுக.










**நரி** : இஃது அநியாயம். நான் மட்டும் அழுக்கும் துர்நாற்றமும் வீசும் சாக்கடையைச் சுத்தம் செய்ய வேண்டும். மற்றவர்களோ சாதாரண வேலையைச் செய்ய வேண்டும். இதை நான் ஏற்றுக் கொள்ள மாட்டேன்.

**மான்** : நரியாரே, சற்றுப் பொறுமையாக இருங்கள். நாம் விட்டுக் கொடுத்துப் போக வேண்டும் சண்டை போடக்கூடாது.

**சிங்கம்** : நல்லது நரியாரே. உங்களுடைய கோபம் சரிதான். முதலில் வேலையைத் தொடங்குங்கள். நாங்கள் செய்ய வேண்டிய வேலையை முடித்தவுடன் எல்லாரும் சேர்ந்து சாக்கடையைத் துப்புரவு செய்ய உதவுகிறோம்.

**நரி** : ஓ! அப்படி என்றால் சரிதான். என்னை மன்னித்து விடுங்கள், மிகவும் அவசரப்பட்டு விட்டேன்.

**சிங்கம்** : நரியாரே பொது மண்டபத்தைத் துப்புரவு செய்த பிறகு, நாம் அனைவரும் இதைப் பயன்படுத்தப் போகிறோம். நமது பணி வெற்றி பெற வேண்டுமென்றால் நாம் ஒற்றுமையுடனும், விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையுடனும் இருக்க வேண்டும்.

14.1 **ஆசிரியர் குறிப்பு**
- சமுதாய வாழ்க்கையில் விட்டுக்கொடுக்க வேண்டிய செயல்களை அறியச் செய்தல்.

**வி.வ.கூ:** சுற்றுச் சூழல் கல்வி **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூ.தி:** இணைந்து கற்றல்

கருத்துப் படிவம்

# பாடம் 2 நல்லுறவு பேணுவோம்

மதிய உணவிற்குப் பிறகு மாலினியும் அவளுடைய பாட்டியும் பேசிக் கொண்டிருந்தனர். அவளுடன் அவள் தோழி அமீனாவும் சேர்ந்து கொண்டாள்.

**மாலினி** : பாட்டி, சமுதாய வாழ்க்கையில் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையை எவ்வாறு வளர்க்கலாம் என்பது பற்றி ஆசிரியர் கருத்துகளைத் திரட்டி வரச் சொன்னார்.

**பாட்டி** : சரி, சொல்கிறேன் கேள். ஒரு நடவடிக்கையை மேற்கொள்ளும் பொழுது, அந்நடவடிக்கை அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்படுகிறதா என்பதை ஆராய வேண்டும். அப்படி எல்லாராலும் ஏற்றுக் கொள்ளப்படாவிட்டால் அதன் விளைவுகளை ஆராய்ந்து விட்டுக் கொடுத்துச் செல்ல வேண்டும்.

**அமீனா** : அது மட்டுமல்ல மாலினி, நாம் அவசரப்பட்டு எடுக்கும் முடிவுகள் நம் நல்லுறவைப் பாதிக்கும். ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்துச் சென்றால்தான் சுபிட்சமாக வாழ முடியும்.

**பாட்டி** : நீ சொல்வதும் உண்மைதான் அமீனா. பொதுவுடைமைகளைப் பயன்படுத்தும் பொழுதும் நாம் விட்டுக் கொடுக்க வேண்டும். உதாரணத்திற்குச் சிறுவர் பூங்காவில் சிறுவர் சிறுமிகள் ஊஞ்சல் விளையாட வரும்போது நாம் விட்டுக் கொடுக்கலாம். குடியிருப்பில் விருந்துகளின்போது அவர்களின் வாகனத்தை நிறுத்த நம் இடத்தை விட்டுக் கொடுக்கலாம்.

**மாலினி** : ஓ.... அப்படியா பாட்டி. விபரம் கூறியதற்கு நன்றி பாட்டி, நன்றி அமீனா.



**நடவடிக்கை**

சமுதாய வாழ்க்கையில் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையின் நன்மைகளைப் பட்டியலிடுக.

14.2

**ஆசிரியர் குறிப்பு**
- மாணவர்கள் சமுதாய வாழ்க்கையில் விட்டுக் கொடுப்பதன் முக்கியத்துவத்தை அறியச் செய்தல்.

**வி.வ.கூ:** நன்னெறி **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூ.தி:** ஆய்வுச் சிந்தனை

கருத்துப் படிவம்

# பாடம் 3 விட்டுக் கொடுக்காமை

ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து வாழும்போது சமுதாய வாழ்க்கை வளம் பெறுகிறது. விட்டுக் கொடுத்தல் இல்லாதபோது சமுதாய வாழ்க்கை என்பது கேள்விக்குறியாகிறது. மேலும், அதன் விளைவுகள் நாம் வாழும் சமுதாயத்தை மிகப் பெரிய சரிவிற்குக் கொண்டு சென்றுவிடும். .




**நடவடிக்கை**

1. விட்டுக் கொடுக்காததால் ஏற்படும் விளைவுகளைக் குழுவில் கலந்துரையாடிப் பட்டியலிடுக. சூழல் அமைத்து நடித்துக் காட்டுக.

14.3 **ஆசிரியர் குறிப்பு**

- சமுதாய வாழ்க்கையில் விட்டுக் கொடுத்தலைப் பொருட்படுத்தாததால் ஏற்படும் விளைவுகளைக் கூறுதல்.

**வி.வ.கூ:** நன்னெறி **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூ.தி:** சமூகம்

கருத்துப் படிவம்

# பாடம் 4 மகிழ்ச்சி கொள்கிறேன்




**நடவடிக்கை**

1. சிறுமியிடம் காணப்படும் பண்பைப் பட்டியலிடுக.
2. இந்நிகழ்வுக்குப் பின்னர் சிறுமியின் மனவுணர்வு எப்படி இருக்கும்? கலந்துரையாடுக.

14.4 ஆசிரியர் குறிப்பு

- மாணவர்கள் சமுதாய வாழ்க்கையில் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையால் ஏற்படும் மனவுணர்வுகளைக் கூறுதல்.

**வி.வ.கூ:** நன்னெறி **உ.சி.தி:**பகுத்தாய்தல் **21ஆம் நூ.தி:** சமூகம்

மதிப்பீடு

அ) சூழலுக்கு ஏற்ப விட்டுக் கொடுத்தலின் நன்மைகளைக் குறிப்பிடுக.




ஆ) உங்கள் நிலைப்பாடு என்ன? விளக்குக.

1. உங்கள் குடியிருப்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் மருத்துவ முகாமிற்குத் தேவைப்படும் தண்ணீரும், மின்சாரமும் உங்கள் வீட்டிலிருந்து எடுக்க அனுமதி கேட்கிறார்கள்.

2. பள்ளிக்குச் செல்லும் சாலையைக் கடக்க மேம்பாலம் அமைக்க உங்களின் நிலம் சிறிதளவு கோரப்படுகிறது.

14.1
14.2
14.3
14.4
14.5

ஆசிரியர் குறிப்பு

- விட்டுக் கொடுக்கும் பண்பை அமல்படுத்துதல்.

**வி.வ.கூ:** நன்னெறி  **உ.சி.தி: பகுத்தாய்தல்**  **21ஆம் நூ.தி:** தொடர்பு

குறைநீக்கல்

விட்டுக் கொடுத்தலின் அவசியத்தைக் குறிப்பிடுக.

1

பள்ளிக்கு வெளியில் மாற்றுத் திறனாளி ஒருவர் மிகவும் தூய்மையான முறையில் தரமான உணவுகளை விற்பனை செய்கிறார்.

நான், அவரது விற்பனையைத் (தடுப்பேன் / தடுக்கமாட்டேன்). ஏனெனில், ______

2

அவையோரின் வாதங்கள் நியாயமாக இருந்ததால், மதியழகன் தன் கருத்திலிருந்து பின்வாங்கிக் கொண்டார்.

மதியழகன் தன் கருத்திலிருந்து பின்வாங்கியது (சரி / சரியல்ல) எனக் கூறுவேன். ஏனெனில், ______

3

பெருநாள் காலங்களில் அதிகமான பட்டாசு சத்தம் பல வழிகளிலும் எனக்குத் தொல்லையாக அமைகிறது.

என்னைப் பொறுத்தமட்டில் பட்டாசு வெடித்தல் (தேவை/தேவையில்லை). ஏனெனில், ______.

4

கிராமத்தில் வடிகால் அமைக்க உங்கள் வீட்டு நிலம் சிறிது எடுத்துக் கொள்ள அனுமதி கேட்கப்படுகிறது.

நான் அனுமதி (கொடுப்பேன்/கொடுக்க மாட்டேன்). ஏனெனில், ______.

14.2 ஆசிரியர் குறிப்பு

• எல்லாச் சூழல்களிலும் விட்டுக் கொடுத்தல் மிக இன்றியமையாதது என விளக்குதல்.

வி.வ.கூ: நன்னெறிப் பண்பு உ.சி.தி: பகுத்தாய்தல் 21ஆம் நூ.தி: சமூகம்

**திடப்படுத்துதல்**

## சூழலுக்கேற்ற தீர்வை எழுதுக.

அ. உங்கள் குடியிருப்புப் பகுதியில் நடைபெறும் விருந்துபசரிப்பு ஒன்றில் பெண்மணி ஒருவர் இருக்கை இல்லாததால் குழந்தையை மடியில் அமர வைத்துக் கொண்டு சிரமப்படுகிறார்.

நான், ____________________



ஆ. பொதுத் தொலைபேசியைப் பயன்படுத்த உங்களின் பின்னால் மூதாட்டி ஒருவர் காத்துக் கொண்டிருக்கிறார். ஆனால், உங்களுக்கு முன் உள்ளவர் நீண்ட நேரம் பேசிக் கொண்டிருக்கிறார்.

நான், ____________________





இ. வியாழக்கிழமை நடைபெறும் இரவுச் சந்தையின்போது மக்கள் உங்கள் வீட்டின் முன் வாகனங்களை நிறுத்திச் செல்கின்றனர். நீங்கள் அவசரத்திற்கு வெளியேறச் சிரமப்படுகிறீர்கள்.

நான், ____________________



ஈ. சிறுவர் விளையாட்டுப் பூங்காவில் இளைஞர் ஒருவர் அதிக ஒலியுடன் பாடல் செவிமடுத்துக் கொண்டிருக்கிறார்.

நான், ____________________

14.5 **ஆசிரியர் குறிப்பு**

- அன்றாட வாழ்வில் விட்டுக் கொடுத்தலை அமல்படுத்துதல்.

**வி.வ.கூ:** நன்னெறி **உ.சி.:** பகுத்தாய்தல் **21ஆம் நூ.தி:** தொடர்பு

**வளப்படுத்துதல்**

**பின்வரும் சூழல்களில் விட்டுக் கொடுக்காததன் விளைவுகளைக் குறிப்பிடுக.**

| சூழல் | | விளைவு |
|---|---|---|
|  | 1. ஒரே அடுக்குமாடிக் குடியிருப்பில் வசிக்கும் இளமாறனும் மதிவாணனும் எல்லாச் சந்திப்புக் கூட்டங்களிலும் கருத்து வேறுபாடு கொள்வர். | |
|  | 2. உங்கள் குடியிருப்பில் தண்ணீர் விநியோகம் தடைப்பட்டுள்ளதால், நீர் விநியோகப் பிரிவினர் தண்ணீர் விநியோகம் செய்கின்றனர். | |
|  | 3. தவறாகக் கணக்கிட்டுக் கட்டணம் வசூலித்து விட்டதற்காக கடை ஊழியர் மன்னிப்புக் கோருகிறார். | |
|  | 4. விளையாட்டில் ஏற்பட்ட தகராற்றைத் தீர்க்க, உங்கள் தோழி விட்டுக் கொடுத்தலின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறார். | |

14.3 **ஆசிரியர் குறிப்பு**

• சமுதாய வாழ்க்கையில் விட்டுக் கொடுத்தலைத் தவிர்ப்பதன் விளைவுகளை விவரித்தல்.

**வி.வ.கூ:** நன்னெறி **உ.சி.தி: பகுத்தாய்தல்** **21ஆம் நூ.தி:** தொடர்பு

Dengan ini **SAYA BERJANJI** akan menjaga buku ini dengan baiknya dan bertanggungjawab atas kehilangannya serta mengembalikannya kepada pihak sekolah pada tarikh yang ditetapkan

**Skim Pinjaman Buku Teks**

Sekolah ____________________

| Tahun | Darjah | Nama Penerima | Tarikh Terima |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

Nombor Perolehan : ____________________

Tarikh Penerimaan : ____________________

**BUKU INI TIDAK BOLEH DIJUAL**